விலை : 20.00 Website : www.valampurii.lk
பக்கங்கள்: பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 07 ஞாயிற்றுக்கிழமை (20.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

# இறுதிப் போர்க்குற்றங்களுக்காக இராணுவத்தை தண்டிக்க முடியாது



## விசாரணை மட்டும் செய்யப்படும்-மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

நாட்டின் இறுதிப் போரில் நடந்தவை தொடர்பில் உள்ளக விசாரணை மட்டுமே நடத்தப்படும் என தெரிவித்துள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க, இராணுவம் இழைத்தவை எனக் கூறப்படும் குற்றங்களுக்காக இராணுவத்தினரை தண்டிக்கும் பொறிமுறையாக அவ் உள்ளக விசாரணை அமையாது எனவும் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## முடிவுக்கு வந்தது தாதியர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதியர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைக்கு என அழைத்து சென்று கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த இரண்டு நாட்களாக முன்னெடுக்கப்பட்ட தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் தாதியரு

16ஆம் பக்கம் பார்க்க

## தாயும் மகனும் பரிதாப மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பளை பிரதேசத்தில் தாயும் ஒன்றரை வயது மகனும்

15ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் தேர்தல்காலப் பரப்புரைகளில் ரக்ன லங்கா ஊழியர்களுக்கு தொடர்பு!

### ஆணைக்குழுவின் குற்றச்சாட்டுக்கு கோத்தா மழுப்பல்

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ரக்ன லங்கா பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டமைக்கு அந்த நிறுவனத்தின் முன்னாள் உயரதிகாரிகளே பொறுப்பு என முன்னாள் பாதுகாப்புச் செயல்ளாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுமுன் முன்னாள் பாதுகாப்புதுறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த வியாழக்கிழமை கோத்தபாய

15ஆம் பக்கம் பார்க்க



## மதுபான விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களாக 100 எம்.பிகள்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமார் 100 பேர் மதுபான விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்களில் பலர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்ததுடன் தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் இருந்து வருகின்றனர்.

மதுபான விற்பனை நிலையங்கள் இவர்களின் நெருங்கிய குடும்ப உறவினர்களின் பெயர்களில் இயங்கி வருகின்றன.

ஒரு மதுபான விற்பனை நிலையத்தின் மூலம் மாதம் ஒரு மில்லியன் ரூபாயுக்கும் மேல் இலாபம் கிடைத்து வருகிறது.

குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த இரண்டு அரசியல்வாதிகள் தலா 10

15ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு கல்விப் பொதுத தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் நேற்றைய தினம் மாலை வெளியாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சைக்காக 6 இலட்சத்து 64 ஆயிரத்து 537 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 4 இலட்சத்து 3 ஆயிரத்து 442 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் ஆவர். நேற்றைய தினம்

15ஆம் பக்கம் பார்க்க

## மூன்று நாடுகளுக்கு பயணமாகும் பிரதமர்

(கொழும்பு)

சீனா, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோக பூர்வ பயணங்களை மேற்கொள்ளவுள்ளார்.

இதனடிப்படையில், ஏப்ரல் முதல வாரத்தில் சீனாவுக்கு பயணம் மேறகொள்ளும் பிரதமர், கொழும்பு துறை

15ஆம் பக்கம் பார்க்க

## எட்கா உடன்பாடு ஆராய்கிறது இந்தியா

(கொழும்பு)

இலங்கையுடன் செய்து கொள்ளவுள்ள எட்கா எனப்படும் விரிவான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டின் வரைவை இந்தியா இன்னமும் ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் இதற்குப் ப்தில் அளிக்கப்படும் என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர்

15ஆம் பக்கம் பார்க்க

## போர் குறித்த நீதி விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை!

### ஜனாதிபதி மைத்திரி மீண்டும் தெரிவிப்பு


(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற இறுதிப் போ தொடர்பான விசாரணை களை அடுத்து நடத்தப்படும் உள்நாட்டு நீதிச் செயல்முறைகளில், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்குத் தான் இணங்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்துள்ளார்.

வாதுவவில் நேற்றுமுன்தினம்

15ஆம் பக்கம் பார்க்க






## ஒரே விதமாகவே மின்மாற்றிகள் வெடிப்பு

(கொழும்பு)

பியகமவில் உள்ள உபமின் நிலையத்தின் மின்மாற்றியில் கடந்தவாரம் ஏற்பட்ட வெடிப்புக்கும் கொட்டுகொட உப மின் நிலைய மின்மாற்றியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடிப்புக்கும் இடையில் ஒற்றுமைகள் காணப்படுவதாக மின் சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு மின்மாற்றிகளி

15ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினைக்கான தீர்வு 13ஆல் இழுபறிப்படுகிறது!

### அரசை சாடினார்-எதிர்க்கட்சித் தலைவர்



(கொழும்பு)

13வது திருத்தசட்டத்தினை அமுல்படுத்த கடந்த அரசாங்கங்கள் முயற்சிக்காமையே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு இதுவரை எட்டப்படாமைக்கு காரணம் என எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த்

15ஆம் பக்கம் பார்க்க

## 23ஆம் திகதி சந்திர கிரகணம்

(கொழும்பு)

2016ஆம் ஆண்டின்முதல்பூரண சந்திர கிரகணம் 23ஆம் திகதி நிகழவுள்ளது. பௌர்ணமி தினத்துக்கு அடுத்த நாள் இந்த சந்திர கிரகணம் ஏற்படவுள்ளது என ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தின் பேராசிரியர் சந்திர ஜயரத்ன நேற்று முன் தினம் தெரிவித்தார்.

இந்த சந்திர கிரகணம் இலங்கை

16ஆம் பக்கம் பார்க்க

## பாணின் விலை அதிகரிக்கவுள்ளது

(கொழும்பு)

நாளை 21ஆம் திகதி திங்கட் கிழமையிலிருந்து பாணின்விலையை 3 அல்லது 5 ரூபாயினால் அதிகரிக்கவுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரிமா நிறுவனம் கோதுமை மா கிலோ ஒன்றின் விலையை 7 ரூபாய் 20 சதமாக அதிகரித்ததாலும் பின்னர் நுகர்வோர் வாரத்தை

16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Water Proofing

உங்கள் வீடுகள் காரியாலயங்களில் உள்ள சீமெந்திலான நீர்த்தாங்கிகள் குளியலறைகள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவை உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.
(புதிதாக ஏற்படுத்தும் குளியலறைகளுக்கு உகந்தது) (3942)

தொடர்புகளுக்கு:
**North and East Engineering** 0775244177
(அபான்ஸ் காட்சியறைக்கு அருகாமையில்) 0212222363

## பதவி வெற்றிடங்கள்

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நட்சத்திர ஹோட்டலுக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. FRONT OFFICE MANAGER, WITH - 5 YEARS EXPERIENCE AT A RECOGNISED HOTEL
   - COMPUTER SKILLS
   - AGE 30-60
   - LANGUAGE SKILLS
2. STORE KEEPER -01
3. WAITERS
4. BELL BOYS - 2
5. ENGINEERING ASSISTANTS
6. GARDENERS
7. COOKS

**Send Your cv's to info@thethinnai.com**
**( 0767 528628 - 9 AM - 6 PM )** (3947)

## கே.சி.சி.சி வெற்றி கிண்ணம்



(யாழ்ப்பாணம்)
கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ்.சென்றல் அணியை எதிர்த்துநியூஸ்ரார் அணியும்,

மதியம் ஒரு மணிக்குநடைபெறும்போட்டியில் ரெயின்போ அணியினைஎதிர்த்து காமாட்சி அணியும் மோதவுள்ளன. (க)

## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்தி பருத்தித் துறை வீதியில் மட்டுவில் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 17 பரப்பு காணி பிரித்துக் கொடுக்கப்படும். தென்னை, மா வைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
(3949) **0778730129**

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை சிவயோகன் என்பவருடைய 603281390X எனும் இலக்கமுடைய அடையாள அட்டையும் சிறுதொகைப்பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை 03.03.2016 நல்லூருக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்புகளுக்கு : 0776925819**
(3944) தகுந்த சன்மானம் வழங்கப்படும்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பரதநாட்டிய அரங்கேற்றம்

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நிகழும் மன்மத வருட 20.03.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு திருமதி **விஜயகலா மகேஸ்வரன்**
அவர்களின் புதல்விகளான
செல்வி **பவதாரணி மகேஸ்வரன்**
செல்வி **பவித்திரா மகேஸ்வரன்**
அவர்களினுடைய




**பரத நாட்டிய அரங்கேற்றம்**

சிறப்புற நடைபெற வாழ்த்துவதோடு கல்வியிலும் கலையிலும் மேன்மேலும் உயர்வடைய எல்லாம் வல்ல மஞ்சத்தடி முருகப் பெருமானை வேண்டுகின்றோம்

வாழ்க தமிழ்! வளர்க கலை!

வாழ்த்துவோர்:
**இணுவையூர் V.K. குகானந்தன்**
தலைவர், ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம்
மஞ்சத்தடி, இணுவில்.
(சி-4031)

## மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)
உங்கள் ஆலய திருவிழாக்களில் அழைத்து மகிழுங்கள்
தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி
**கலைமாமணி Dr.S.S.குருஜீ**
T.P:-0757428011, 0767256024
**நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.** (3928)

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் நல்வாழ்த்துக்கள்



காரைநகர் மண்ணின் கலைத்துறைக்கு பெருமை சேர்க்கும் வகையில்
அமரர் மகேஸ்வரன் மற்றும் விஜயகலா தம்பதியினரின்
தவப்புதல்விகளான செல்விகள்
**பவதாரணி, பவித்திரா**
ஆகியோரது இன்றைய நடன அரங்கேற்ற நிகழ்வு
வெகு சிறப்பாக அமைய எல்லாம் வல்ல
ஆடலரசனான ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன்
திருவடிகளைப் பிரார்த்திப்பதோடு இவ் இளங்கலைஞர்களது
கலைப்பயணம் மேன்மேலும் தொடர்ந்து சிறப்பாக விளங்க
எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில்
மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

**"கலைவளம் பெருக்கி நிலை இன்பம் பெறுவோம்"**

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்.

நிர்வாக சபையினர்
ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பெற்றோர்கள்.

(C-4047)

## யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### சகல அங்கத்தவர்களுக்கும்

18.03.2016-ம் திகதிய பத்திரிகை விளம்பரத்தில் மகேஸ்வரி நிதியத்தினால் பாரவூர்தி சங்க அங்கத்தவர்களுக்கு வைப்புப்பணம், சேமிப்புப்பணம் மீளத்தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இப்பணத்தினை மீளளிப்பதில் எவ்விதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளாமையால் இப்பணத்தினை பெறுவதில் பாதிக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட குறித்த பாரவூர்தி சங்க அங்கத்தவர்கள் சங்கத்தில் முறைப்பாடு செய்தமைக்கு அமைய பாரவூர்தி சங்கம் மகேஸ்வரி நிதியத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு அங்கத்தவர் பணத்தினை மீளளிக்க கோரியதன் பிரகாரம் முதற் கட்டமாக ரூ.250000/= தரப்பட்டு மிகுதிப்பணத்தினை மீளளிக்காது மகேஸ்வரி நிதியம் அலட்சியப்போக்கினை காட்டியதால் சங்கம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான ஒரு செய்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே பாரவூர்திச் சங்கம் இப்பணம் பெறுதல் தொடர்பாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் யாவரும் சட்ட நடவடிக்கையின் பதிலுக்காக காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது. எனவே இந்நடவடிக்கைக்கு பாரவூர்திச் சங்கமே முழுப்பொறுப்பாக உள்ளதால் அங்கத்தவர்கள் எவரும் இவ்விளம்பரத்தினை ஏற்று சங்கத்தின் அனுமதியின்றி இப்பணம் பெறுதல் தொட்பாக தன்னிச்சையான முடிவுகளை எடுக்க வேண்டாம் என்பதனை சங்க நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. இதனை மீறும் அங்கத்தவர்கள் சங்கத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்பதனையும் கடுமையாக சங்க நிர்வாகம் தெரிவித்துக் கொள்கிறது.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்
**செ.ஜெயக்குமார்**
(சி-4060)

# பிரபாகரன், பொட்டம்மான் குறித்து உண்மையை கண்டறிய விசாரணை

## அரசாங்கம் நடத்தும் என்கிறார் அமரவீர

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை வர் வே. பிரபாகரன், புலனாய்வுப்பிரிவு பொறுப் பாளர் பொட்டம்மான் தொடர்பில் விசாரணை களை நடத்தி உண்மைகளை கண்டறியும் பணிகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



இறுதி யுத்தத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்ப வங்கள் தொடர்பாக முன் னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்ச்சி யாக பல கருத்துகளை முன் வைத்து வரும் நிலையில், அரசாங்கம் இந்த விவகா ரங்கள் தொடர்பில் எவ்வா றான நடவடிக்கைகளை மேற் கொள்ளப்போகின்றது எனகேட்ட போது அமைச்சர் மேற் கண்ட வாறு கருத்து தெரிவித்தார்.

யுத்தக் குற்றச்சாட்டு தொட ர்பில் கடந்த காலத்தில் இரு ந்து ஏற்கனவே பலவிதமான கருத்துகள் முன்வைக்கப் பட்டு வருகின்றன. இந்நிலை யில் இப்போது அமைச்சர் சரத் பொன்சேகா கூறிவரும் கருத்துக்கள் மேலும் பல திருப் பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இறுதி யுத்தத்தின் கடை சிக் கட்டங்கள் தொடர்பிலும், பிரபாகரன், பொட்டம்மான், லசந்த விக்கிரமதுங்க ஆகி யோர் தொடர்பிலும் இப் போது பல கருத்துகளை முன் வைத்துள்ளார். எவ்வாறு இருப்பினும் இந்த விவகார ங்கள் தொடர்பில் ஆராய்ந்து உண்மைகளை கண்டறி யும் வேலையினை அரசாங் கம் மேற்கொள்ளும்.

அதேபோல் இறுதி யுத் தத்தில் இடம்பெற்றதாக கூறப் படும் யுத்த குற்றங்கள் மற் றும் வெள்ளைக்கொடி விவ காரத்திலும் எழுந்துள்ள சர்ச் சைகள், இறுதி யுத்த நேரத் தில் இராணுவத்தினர் வசம் சரணடைந்த பொதுமக்க ளின் நிலைமைகள் தொடர் பில் பொதுமக்கள் முன்வை த்து வரும் வாக்குமூலங்கள் தொடர்பிலும் அரசாங்கம் தீவிர மாக ஆராய்ந்து விரைவில் உண்மைகளை கண்டறியும்.

மேலும் இந்த விவகா ரங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளின் மூலமாக விசாரணைகளை மேற் கொள்ள வேண்டும் என சரத் பொன்சேகா கூறிவருகின் றார். ஆனால் இப்போதிருக் கும் நிலையில் சர்வதேச விசாரணைகள் மேற்கொண்டு இந்த விடயங்களை கண்டறிய வேண்டிய அவசியம் இல்லை.

இப்போதிருக்கும் நிலை யில் நாம் உள்ளக விசார ணைகள் மூலமாக இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அதையே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த ஆட்சியில் உள் ளக விசாரணைகளின் மூல மாக எந்த தீர்வும் கிடைக்காத காரணத்தினாலேயே பல சிக்கல்கள் எழுந்தன.

அவ்வாறான நிலையில் சர்வதேச தரப்பின் அழுத்தங் களில் இருந்து நாட்டையும் இராணுவத்தையும் காப்பா ற்ற வேண்டும் என்ற நோக்க த்திற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சி ஆகிய கட்சிகள் கூட்டு சேர்ந்து தேசிய அரசா ங்கத்தை அமைத்து இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கின்றன.

இப்போது உள்ளக பொறி முறைகள் சரியாக நடை பெற்று வருகின்றன. எவ் வாறு இருப்பினும் யுத்தத் தின் இறுதித் தருணங்கள் தொடர்பில் அரசாங்கம் தீவிர மான விசாரணைகளை மேற் கொள்ளும்.


இராணுவம் செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றாலும் அதில் எந்த சந்தர்ப்பத்திலும் இராணுவ த்தை தண்டிக்கும் வகையில் விசாரணை பொறிமுறை அமையாது என அவர்மேலும் தெரிவித்தார். (இ-5)

## எம்.பி.களுக்கு ஒழுக்க கோவை ஒன்றை அறிமுகம் செய்ய சபாநாயகர் தீர்மானம்

நாடாளுமன்ற உறுப்பி னர்களுக்காக ஒழுக்க கோவை ஒன்றை அறிமுகம் செய்ய சபாநாயகர் கரு ஜயசூரிய தீர்மானித்துள்ளார்.

இந்த ஒழுக்கக் கோவை தொடர்பினான திட்ட வரைவு ஏற் கனவே பூர்த்தியாகியுள்ளது.

நாடாளுமன்ற கலரியில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் அமர்வு களை பார்வையிடுவதாகவும். இதன் போது ஆளும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தகாத வார்த்தைப் பிரயோகங்களை



பயன்படுத்தி வருவதாகவும் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இது தொடர்பில் சபாநாய கர் ஏற்கனவே பல தடவை கள் நாடாளுமன்ற உறுப்பி னர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த எச்சரிக்கைகளை மீறி சில நாடாளுமன்ற உறுப் பினர்கள் நடந்து கொள்வத னால், ஒழுக்கக் கோவை ஒன்றின் மூலம் நாடாளு மன்ற உறுப்பினர்களின் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கத் தீர்மா னித்ததாக சபாநாயகர் கொழு ம்பு ஊடகமொன்றுக்குத் தெரி வித்துள்ளார்.

இந்த உத்தேச ஒழுக்கக் கோவை கட்சித் தலைவர் களிடம் ஒப்படைக்கப்படவுள் ளது.

கட்சித் தலைவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதன் பின்னர். இந்த ஒழுக் கக்கோவை வெளியிடப் படவுள்ளது.

எப்போது இந்த ஒழுக்கக் கோவை வெளியிடப்படும் என்ற நிச்சயமான திகதிகள் பற்றிய விபரங்களை சபாநாய கர் வெளியிடவில்லை.(இ-5)

## கூட்டு எதிர்க்கட்சிக்கும் மகிந்தவிற்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை

கூட்டு எதிர்க்கட்சிக்கும். முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவிற்கும் இடை யில் விசேட பேச்சுவார்த்தை யொன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்கால நடவடிக்கை கள் குறித்து இந்தப் பேச்சு வார்த்தையில் கவனம் செலு த்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை பேச்சுவார்த்தை நடத தப்படவுள்ளது.

அடுத்த பேரணி மற்றும் கூட்டத்தை எங்கு எப்போது நடத்துவது குறித்து இந்த சந்திப்பின் போது தீர்மா னிக்கப்படவுள்ளது.

தமிழ் சிங்கள புத்தாண் டுக்கு முன்னதாக அடுத்த பேரணியையும் கூட்டத்தை யும் நடத்துவதா அல்லது அதன் பின்னர் நடத்துவதா என்பது குறித்தும் இந்த சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளது.

புத்தாண்டின் பின்னர் இந்தக் கூட்டம் நடத்தப்பட் டால், அதை மே தினத்தில் நடத்துவது குறித்தும் கவ னம் செலுத்தப்படவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (இ-5)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் திடீரென ஆஜர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நிலத்தடிநீர் மாசடைதல் தொடர்பில் மல் லாகம் நீதிமன்றினால் கைது செய்யுமாறு பிடியாணை பிறப் பிக்கப்பட்ட தேசிய நீர்வழங் கல் சபையின் தலைவர். நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை சட்டத்தரணி மூலம் மல்லாகம் நீதிமன்றில் சரண டைந்துள்ளார்.

இதன்போது நீதவான் ஏ.யூட்சன் சபையின் தலை வரை கடுமையாக எச்சரித் துள்ளார்.

நீதிமன்றிற்கு அறிக்கை சமர்பிக்கச் சொன்னால் சமர்ப் பிப்பதில்லை. நீதிமன்றினை அவமதிப்பு செய்கிறீர்களா? என வினவினார். இதற்கு தேசிய நீர்வழங்கல் சபை யின் தலைவர், தனக்கு அழை ப்பாணை கிடைக்கவில்லை எனத் தெரிவித்ததுடன் பத்தி ரிகையில் வெளியான செய் தியினைப் பார்த்தே அறி ந்துகொண்டதாகத் தெரிவித் தார்.

இதன் போது வழக்கினை விசாரித்த நீதவான் அடுத்த வழக்குத் தவணையான ஏப் ரல் 8ஆம் திகதி கண்டிப்பாக மன்றில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார். (இ-4)

## வாகன அனுமதிப்பத்திரமின்றி

## மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவருக்கு 3மாத கடூழிய சிறை

வாகன அனுமதிப்பத்திர மின்றி மதுபோதையில் மோட் டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவருக்கு 3 மாதகால கடூழி யச் சிறைத்தண்டனையும் 7 ஆயிரத்து 500 ரூபாய் தண்ட மும் விதித்ததுடன், ஒரு வரு டத்துக்குசாரதி அனுமதிப்பத் திரத்தையும் இரத்துச் செய்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதி பதி எஸ்.சதீஸ்தரன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார்.


யாழ்.நகர்ப்பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் மோட்டார் சைக் கிள் செலுத்திச் சென்ற குற்றச் சாட்டில் மேற்படி நபர் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குற்றத்தை ஒப்புக்கொள்கி றீர்களா என நீதவானால் கேட்க ப்பட்டபோது தான் மது போதை யில் வாகனம் செலுத்தவில்லை எனநீதி மன்றத்தில் தெரிவித் தார். இதனையடுத்துஅவர் மது போதையில் வாகனம் செலுத் திச் சென்றமை தொடர்பாக பொலிஸார் பதிவு செய்த பரி சோதனைச் சான்றைக் காட் டியபோதுதான் பலமணிநேரத் துக்குமுன்னர் தான் மது அரு ந்தினேன் என தெரிவித்தார். இதனையடுத்து மேற்படி நப ருக்கு சிறைத்தண்டனையும் தண்டமும் விதிக்கப்பட்டது.

மேலும் உழவு இயந்தி ரத்தில் கைத்தொலைபேசி யில் பேசியவாறு சென்ற நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாய் தண்டமும் ஆபத்தை ஏற்ப டுத்தும் வகையில் பட்டா வாக னத்தை செலுத்தி சென்ற நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டமும், சமிக்ஞை விள க்கு இன்றி மோட்டார் சைக்கி ளில் சென்ற இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும், தலைக்கவசமின்றி சென்ற நபருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துநீதவான் தீர்ப்பளித்துள்ளார். (இ-9)




# இருபது - 20 உலகக் கிண்ணம்
## பாகிஸ்தானை வென்றது இந்தியா



உலகக் கோப்பை போட்டிகளில் இந்தியாவை வென்றதில்லை என்ற பாகிஸ்தானின் சோகம் தொடர்கிறது. நேற்று நடைபெற்ற இருபது-20 போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இந்தியா-பாகிஸ்தான் பங்கேற்ற உலகக் கோப்பை இருபது ஓவர் போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் தோனி பந்துவீச்சை தேர்வு செய்தார். முன்னதாகக் கொல்கத்தாவில் பெய்த மழை காரணமாக ஆட்டம் தாமதமாகத் தொடங்கியது. ஓவர்களும் 18 ஆகக் குறைக்கப்பட்டன.

இந்திய வீரர்களின் சிறப்பான பந்து வீச்சில் பாகிஸ்தான் வீரர்கள் ஓட்டங்களை குவிக்கத் திணறினர். முதல் 5 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் அணி 24 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

தொடக்க வீரர் அஹமட் ஷெஸாத் 28 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்துப் பும்ரா பந்துவீச்சில் ஜடேஜாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரர் ஷர்ஸீல் கான் 17 ஓட்டங்களிலும், கப்டன் அப்ரிடி 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் இணைந்த உமர் அக்மலும், சோயிப் மலிக்கும் பாகிஸ்தான் அணியின் சரிவை தடுத்து நிறுத்தியதோடு, வேகமாகவும் ஓட்டங்களைக் குவித்தனர்.

இந்த ஜோடி 14-வது ஓவரில் 15 ஓட்டங்களும், 15-வது ஓவரில் 13 ஓட்டங்களும் எடுத்தது. உமர் அக்மல் 16 பந்துகளில் 22 ஓட்டங்களும், சோயிப் மலிக் 16 பந்துகளில் 26 ஓட்டங்களும் எடுத்தனர். இந்த ஜோடி 4-வது விக்கெட்டுக்கு 41 ஓட்டங்கள் எடுத்தது.

இறுதியில் பாகிஸ்தான் அணி 18 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 118 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்தியா தரப்பில் பந்து வீசிய நெஹ்ரா, பும்ரா, ஜடேஜா, ரெய்னா, பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

எளிதான இலக்காக இருந்தாலும், இந்தியாவின் தொடக்கம் சிறப்பானதாக இருக்கவில்லை. தொடக்க வீரர் ரோஹித் ச்ர்மா 10 ஓட்டங்களில் வெளியேறினார்.

மற்றொரு தொடக்க வீரரான தவன் ஆரம்பம் முதலே தடுமாறி வந்தார். 15 பந்துகளைச் சந்தித்த அவர் 6 ஓட்டங்களில் அனுபவ வீரர் மொஹமட் சமியின் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்து வந்த ரெய்னா, அடுத்த பந்திலேயே க்ளீன் போல்ட் ஆக மைதானமே அமைதியானது.

அடுத்து உள்ள வந்த யுவராஜ், ஹோலியுடன் இணைந்து அணியின் சரிவை தடுத்து நிறுத்தினர். இந்த ஜோடி நிதானமாக விளையாடி அணியின் எண்ணிக்கையை உயர்த்தியது.

மலிக் வீசிய 11-வது ஓவரில் ஹோலி ஒரு சிக்ஸரையும், ஒரு பவுண்டரியையும் விளாசினார்.

இந்நிலையில் வகாப் ரியாஸ் வீசிய ஓவரின் முதல் பந்தை சிக்ஸருக்கு விரட்டிய யுவராஜ், அதே ஓவரின் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 23 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்தார். யுவராஜ்-ஹோலி ஜோடி 4-வது விக்கெட்டுக்கு 61 ஓட்டங்கள் குவித்தது.

அபாரமாக விளையாடிய விராட் ஹோலி 37 பந்துகளில் 55 ஓட்டங்கள் குவித்தார். அவரது ஓட்டக் கணக்கில் 7 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும்.

இந்திய கப்டன் தோனி வழக்கம்போல வெற்றி ஓட்டத்தை அடித்து ஆட்டத்தை முடித்து வைத்தார். அவர் 9 பந்துகளில் 13 ஓட்டங்கள் எடுத்தார். அதில் மொஹமட் இர்ஃபான் பந்தில் லோங்-ஆப் திசையில் விளாசிய சிக்ஸரும் அடங்கும்.

இறுதியில் இந்திய அணி 15.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 119 ஓட்டங்கள எடுத்து வெற்றி பெற்றது.

55 ஓட்டங்கள் விளாசிய ஹோலி ஆட்ட நாயகனாகத் தேர்வானார்.

உலகக் கோப்பை போட்டிகளில் பாகிஸ்தான் அணி, இந்தியாவை வென்றதே இல்லை என்ற சோகம் தொடர்கிறது. (க)

## இன்றைய போட்டிகள்

**ஆப்கானிஸ்தான் vs தென்னாபிரிக்கா**
மாலை 3.30 மும்பை

**இலங்கை vs மேற்கிந்திய தீவுகள்**
இரவு 7.30 பெங்களூர்


## கண்ணீர் அஞ்சலி



திருமதி **மங்கை . அமிர்**

என்றென்றும்
எல்லாமாய் இருந்த
உங்களின் பிரிவு
எமக்கு ஈடுசெய்ய
முடியாதது!
உயிருள்ளவரை உங்கள்
நினைவுகளுடன்....

சுழிபுரம். (3951) -மூளாய்ப் பெறாமக்கள்

## அஞ்சலி நிகழ்வு

தோற்றம் 03 . 07 . 1933



மறைவு 09 . 03 . 2016

திருமதி
**மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்**

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமுமான அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிறு மாலை 3.00 மணியளவில் அன்னாரது மூளாய் இல்லத்தில் நடைபெறும்.

மூளாய்,
சுழிபுரம். (3951)

தகவல் : குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

## டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

ஒன்றரை மாத வயதுடைய
டோமன் நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு

தொடர்பு : 0772292436

(3950)

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்புக் காணித்துண்டும் 5 பரப்புக் காணித்துண்டும் 3 பரப்புக் காணித்துண்டும் மற்றும் யாழ் பிரதான வீதியில் நீதிமன்றத்திற்கு முன்னால் 2 பரப்புக் காணித்துண்டும் உடன் விற்பனைக்கு உண்டு.

(3941) தொடர்பு : 077- 4752535

## வேலைவாய்ப்பு

புத்தக ஸ்ரேசனறி மற்றும் இரும்பு வியாபாரத்தில் அனுபவமுள்ள/ அனுபவ மற்ற விற்பனைப் பிரதிநிதிகள் ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். திங்கள் முதல் காலை 9.30 முதல் 4.30 வரை நேரில் சமுகம் தரவும்.

(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)

"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
இல. 212,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(C-4070) acdil@ymail.com




# பரத நாட்டிய அரங்கேற்றம்

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரனின் புதல்விகளான செல்வி.பவதாரணி, செல்வி. பவித்திரா ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ள இவ் அரங்கேற்ற நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கௌரவ விருந்தினராக கலந்து கொள்வதுடன் விசேட விருந்தினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சென்னை தரஞ்ஜினி பரதநாட்டியக் கல்லூரி இயக்குநரும் நிறுவநருமான ஸ்ரீமதி.சோபனா பால்சந்திரா, கொழும்பு சர்வதேச பாடசாலை அதிபர் டி.சி.சண்டேர்ஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (இ-5)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றியோருக்கு அபராதம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய வேளை பொலிஸாரை ஏமாற்றிவிட்டுஓடிய ஹன்டர் சாரதி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி சட்டவிரோத மணல் ஏற்றிவந்த ஹன்டரை பொலிஸார் துரத்தியபோது பொலிஸாருக்கு டிமிக்கி விட்டு ஓடிய நிலையில் கோண்டாவில் பகுதியில் பிடிக்கப்பட்ட சாரதியை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (செ-60)


உலக நீர் தினத்தினையொட்டிய சுத்தமான குடிநீர்த் தேடலுக்கான

# மாபெரும் நடைபவனி

## 21.03.2016

காலை 8.30 மணிக்கு எமது பிராந்திய அலுவலகத்திலிருந்து
ஆரம்பித்து போதனா வைத்தியசாலை வீதியூடாக
யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திற்கு
காலை 10.00 மணி அளவில்
சென்றடையும்.

நீர்ப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அனைவரையும் இந்நிகழ்வில் இணைய அழைக்கின்றோம்.

பிராந்திய காரியாலயம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
யாழ்ப்பாணம்.

(இ-4058)

உலக நீர் தினம் மார்ச் 22

Australian Aid

அனுசரணை
ஒருங்கிணைந்த கிராம குடிநீர் வழங்கல் மற்றும்
சுகாதார வசதிகள் திட்டம் - யாழ்ப்பாணம்

World Vision


# இராசி பலன்

20.03.2016
(பங்குனி 07, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
துவாதசி பிற்பகல் 1.54மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 1.40 மணிவரை
சுபநேரம் 9.17-10.47 மணிவரை
இராகுகாலம் 4.47-6.17 மணிவரை
யோகர் சுவாமிகள் குருபூசை,
பிரதோச விரதம்

வள்ளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | | | |
| சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம்,உத்தராடம் பகல் 1.29இற்கு சிம்-சந் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** தேகநலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும்,உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்,முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்,பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்,உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கை யுண்டு.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்,புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்,தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைச்சுமை கூடும், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை,முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**சிம்மம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்,விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்,பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பயணங்களால் பலனுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம்,வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்,கௌரவமான நாள்.

**கன்னி:** பயணங்களால் அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்,வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்,கோபப்படுவதைத் தவிர்ப்பது நல்லது,சுப செலவுகள் கூடும்.

# எழுதுமட்டுவாழ் பகுதியில் பேருந்துகள் மோதி விபத்து


(படங்கள்:உ:சாளின்)

யாழ். எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று காலை 6.45 மணி அளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். கொடிகாமத்திலிருந்து கிளாலி நோக்கிப் பயணித்த மினிபஸ் எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து கிளாலி வீதிக்குத் திருப்புகையில், யாழிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்துடன் மோதியதாலே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மினிபஸ் குடை சாய்ந்துள்ளதோடு, அதன் சாரதி மற்றும் நடத்துநர் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## அன்புவார ஒன்றுகூடல் விழா

(யாழ்ப்பாணம்)

வட பராந்திய ஸ்ரீசத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழு நடத்தும் அன்புவார ஒன்று கூடல் விழா யாழ். திருநெல்வேலி, 166/5 சேர்.பொன் இராமநாதன் வீதியிலுள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வில் வடமாகாண இளைஞர் விவகார மற்றும் கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாண கல்வி வலயப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ

## உலக டவுண்சின்றம் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலக விசேட கல்விப் பிரிவு மற்றும் யாழ். சிறுவர் மகிழ்வகம் என்பன இணைந்து நடத்தும் உலக டவுண்சின்றம் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் இதன் போது சிறப்புரையினை யாழ். போதனா வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி வைத்திய கலாநிதி கு.கலையழகன் நிகழ்த்தவுள்ளார்.

மேலும் யாழ்.வடமராட்சி கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (இ-5)

## பொதுக்கூட்டம்

பருத்தித்துறை, வடஇந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-19)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறக் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயத்தல் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

இம் மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகளும் வயோதிபத்தின் ஆரோக்கிய நிலை பற்றிய பரிசோதனைகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## போதையில் இடையூறு செய்தவருக்கு 150 மணித்தியாலங்கள் சமூகப் பணி

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தநபர் ஒருவருக்கு 150 மணித்தியாலயங்கள் சமூக சேவை மேற்கொள்வதற்கு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ். நகர்ப்பகுதியில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தநபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்து நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 40 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் விடுவித்ததுடன் 150 மணித்தியாலங்கள் சமூகசேவை மேற்கொள்ளவேண்டும் என உத்தரவிட்டார்.

அத்துடன் யாழ்.நகர் பகுதியில் பாதசாரிகளுக்கு இடையூறு விளைவித்த நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும்,பொது இடத்தில் வைத்து மதுபானம் அருந்திய 4 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (இ-9)




## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் பரந்தன் ஆலடி ஐயனார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் நாளை திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் இடம் பெறும். தொடர்ந்து நாளை மறுதினம் தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (இ-5-19)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழா வழமைபோல் இவ்வருடமும் நடைபெறவுள்ளதாக கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய பொது அறிவுப் போட்டி,மரதன் ஓட்டம், சான்றோர் கௌரவிப்பு, புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் கௌரவிப்பு, க.பொ.த (சா/தரம்), க.பொ.த (உ/தரம்) சித்தியடைந்தோர் ஆகியோருக்கு கௌரவிப்பு, சமூக மட்டத்தில் சமூக, சமய பணியாற்றியவர்களுக்கு சமூக நிலை விருது வழங்கல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மரதன் ஓட்டம், பொது அறிவுப் போட்டி யாழ்.மாவட்ட மட்டத்திலும் நடைபெறவுள்ளன. தகுதி உடையோர் இப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் பெற்றோர் நலன் விரும்பிகள் பழைய மாணவர்களிற்கான விசேட கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தற்போது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு அருகாமையில் இயங்கி வருகின்ற நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி அன்று ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டுள்ள மேற்படி கல்லூரியினை மீள இயக்குவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதர செயற்பாடுகள் பற்றியும் முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளன.(இ-5)

## அலங்கார உற்சவம்

சண்டிலிப்பாய் மத்திசேமர் தோட்டம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 .மணிக்கு கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நடைபெறும் (இ-5)

## இலக்கிய ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் தூண்டி இலக்கிய வட்டம் நடத்தும் எஸ்.பொ. என்னும் ஆளுமை இலக்கிய ஆய்வரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பொது சன நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேசோதய சபையின் ஒன்று கூடலும் சமாதான நீதவான்களுக்கான சபையின் ஒன்று கூடலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சர்வோதயத்தில் யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சமூக மட்டத்தில் மக்கள் சேவையாற்றிய பொரியார்கள், சமூகப் பெரியார்கள் என பலதரப்பட்ட சேவையாளர்களுக்கு விருது வழங்குவது தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும். (இ-5)



வடமாகாணத்தின் கலாசார மரபுரிமையை பாதுகாத்து முகாமைத்துவம் செய்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டு யாழ்.நல்லூர் பண்டாரிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட மத்தியகலாசார நிதியத்தின் யாழ்.மாவட்டத்திற்கானஅலுவலகத்தை நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் திறந்துவைத்துள்ளார். அத்துடன் மத்திய கலாசார நிலையத்தின் ஒருங்கமைப்பில் கல்வி அமைச்சின் மத்திய கலாசார நிதியத்தினூடாக யாழ் கோட்டை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நகல் உரு மற்றும் நூல் விற்பனை நிலையத்தையும் நேற்று முன்தினம் அமைச்சர் திறந்துவைத்தார். இலங்கையின் புராதன சின்னங்கள் மற்றும் நூல்களின் பிரதிகள் இங்குவிற்பனை செய்யப்படவுள்ளது.
(படங்கள்: பொ.சோபிகா)

## பனம் கைப்பணி பயிற்சி ஆரம்ப விழா நாளை

பனை அபிவிருத்தி சபையின் பனம் கைப்பணி பயிற்சி ஆரம்ப விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு காரைநகர் பிரதேச செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள பனம் பல்தொகுப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 25 பயனாளிகளுக்கு 3 மாத கால பனம் கைப்பணி பயிற்சி நடைபெறவுள்ளது. (இ-9)


## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

பிரபல இந்திய கட்டட கலைஞர்களால் இலட்சணமாக வடிவமைக்கப்பட்டு இந்து ஆகம முறைப்படி இந்திய சிற்பிகளால் இயக்கச்சியில் நிறுவப்பட்டுள்ள ஒரு இந்து ஆலயத்துக்கு அர்ப்பணிப்புடன் ஒரு திறமையான நிர்வாக உத்தியோகத்தர் தேவை. இதற்கு தகுதி வாய்ந்த ஆண்/பெண் விண்ணப்பதாரிகள் தங்களது தகைமையுடன் ஆன சுயவிருப்ப கோவையினை கீழ்வரும் முகவரிக்கு 03.04.2016 ஆம் திகதிக்கு முதல் அனுப்பி வைக்கவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். (3924)

திரு. S.ரவீந்திரன், 33, குறுக்கு வீதி, நல்லூர்.
தொடர்புகளுக்கு: 077 776 0255



### யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......


எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle, UK
(C-3712)


# நன்றி நவிலல்

(சி-4062)



## "பொன்மனச் செம்மல்", "மனிதநேய ஈகையாளன்" "கொடைக்கோ", "கல்விக் காருண்யன்"

## லயன் E.S.P.நாகரத்தினம்

எனது 30 வருட கால பொதுப் பணிச் சேவையினை மதித்து கௌரவிக்கும் நோக்கில் யாழ். மாவட்ட உயர்கல்விப் புலத்தினால் எடுக்கப்பட்ட மணிவிழா 13.03.2016 அன்று ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கற்றறிந்தோர் வருகை தந்து எனது சேவையை வாழ்த்தியது என்றும் மறக்கமுடியாத வரலாற்றுப்பதிவாகும். அத்தனை உள்ளங்களுக்கும எனது ஆழ்மனதிற் பதிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

உலகம் போற்றும் சமயப் பெரியோர்களின் ஆசிகளும் பார்போற்றும் கற்றறிந்த புலமையாளர்களின் வாழ்த்துரைகளும் அவர்களினால் 13 ஆவது கௌரவப் பட்டமான "கொடைக்கோ"பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதையும் இலங்கைத் திருநாட்டில் எந்தவொரு வர்த்தக சமூகத்திற்கும் கிடைக்காத பெரும் பேறாக கல்வியியலாளர்களினால் அளிக்கப்பட்ட மேற்படி கௌரவ நிகழ்வை எண்ணி மதிக்கின்றேன. எனது செயற்பாடுகளும் கிடைக்கப்பெற்ற கௌரவங்களும் இறைவனின் சித்தத்திற்குட்பட்டதென்றே வணங்குகின்றேன்.

குறிப்பாக கடந்த 3 மாதங்களாக மணிவிழாவுக்கான ஏற்பாடுகளையும மணிவிழா மலர் வெளியீட்டிற் கான ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து முடித்த மணிவிழாச் சபையினர் அனைவரும் என் நெஞ்சை விட்டகலா நன்றிக்குரியவர்கள். அது மாத்திரமன்றி விழா நாளன்று ஆசியுரை வழங்கிய உயர் கௌரவத்திற்குரிய சமயப பெரியோர்கள், வாழ்த்துரை வழங்கிய கல்வியியலாளர்கள அனைவருக்கும்மறக்க முடியாத அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

விழா ஏற்பாட்டில் மணிவிழா மலர் அச்சிடல், விருந்தினர்களுக்கான உணவு, சிற்றுண்டி போன்ற இன்னும் பலவற்றுக்கு அனுசரணை வழங்கிய உடன் பிறவா சகோதரன் திருநெல்வேலியின் பிரபல வர்த்தகர் தேனு களஞ்சிய உரிமையாளர் திருவாளர் S.சிறிமோகன்ராஸ் குடும்பத்தினரை விசேட நன்றிக்குரியவராக பார்க்கின்றேன். மேலும் எதுவித கொடுப்பனவுகளையும் பெறாது எனது சேவையை மதித்து கௌரவப்படுத்தி புகைப் பட, வீடியோ படம் பிடித்தல் சேவையினைச் செய்துதந்த கோப்பாயைச் சேர்ந்த மாஸ்ரர் வீடியோ தம்பி அவர்கள் அதேவண்ணம் மங்கள இசையை வழங்கிய நல்லூர் கோவில் வீதி திரு.S.றஜீபன் குழுவனர்க்கும ஒலிபெருக்கி சேவையை சிறப்பாகச் செய்த திருநெல்வேலியைச் சேர்ந்த தீபன் சவுண்ட் சேவிஸ் தம்பி அவர்களும் என் நன்றிக்குரியவர்கள் என் றெண்ணி மகிழ்கிறேன்.

வடபுலத்தில் மிகவும் பிரபல்யம் ஆன ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தினை விழாவை நடத்த இலவசமாக தந்துதவிய தம்பி திரு. எஸ்.சண்முகநாதன் அவர்களுக்கும என் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மேலும்மணிவிழாவுக்கு வருகை தரும் விருந்தினர்கள் அனைவரையும் வாசலில் கௌரவப்படுத்த அணிவிக்கப்படும் சின்னத்தை செய்யவும் பனர்களை செய்யவும் அனுசரணை வழங்கிய கணக்காய்வாளர் திருவாளர் வெற்றிவேலாயுதம் அவர்களை நன்றியுடன் நோக்குகின்றோம். மணிவிழா நாளன்று மணி விழா மலர் வெளியீட்டுகான அனுசரணை வழங்கிய வலம்புரி பத்திரிகை குழுமத்திற்கும் விசேடமாக விஜயசுந்தரம் அதிபர் அவர்களுக்கும் தினக் குரல், உதயன் பத்திரிகைகளின் உரிமையாளர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் கூறப்பட்டுள்ளேன்.

கடந்த ஒன்றரை மாத காலமாக எனது மணிவிழா நிகழ்வுக்கான வாழ்த்துக்களை சகல பத்திரிகைகளிலும் வெளியிட்டு வைத்த அன்பு உள்ளங்கள் மறக்க முடியாத நன்றிக்குரிய வர்களாவர். மணிவிழா நிகழ்வுக்கான அழைபபிதழ்களையும் பனர் களையும் வாழ்த்து மடல்களையும் இலவசமாக செய்து தந்ததுடன உரிய நேரத்துக்கு "நாகரததின மாணீல" என்னும் மணி விழா மலரை சபையினரிடம் பதிப்பு செய்து கைளித்த அன்ரா பதிப்பகத்தாருக்கு மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொளவதில் மகிழ்வடைகின்றேன்.

விழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த நண்பர்கள், உறவுகள், சகோதரர்கள், குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து நன்றி தெரிவிக்கின்றேன்.

விழா முழுமை பெற சகல வழிகளிலும் வழிகாட்டி செயற்பட்ட மணிவிழா சபைத்தலைவர் பேராசிரியர் க.தேவராஜா, செயலாளர் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.மாணிக்கராசா அவர்களுக்கும் மற்றும் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்புக்களிலும் முத்திரை பதித்த அத்தனை மணிவிழா சபை உறுப்பினர்களுக்கும் உள்ளத்தால் உணர்வால் நன்றியுடன் பார்க்கின்றேன்.

இன்னும் மணிவிழா நிகழ்வு முழுவதையும் இணையத்தில் பிரசித்து உதவிய காரைநகர் சிந்துஜா போட்டோ & வீடியோ ஸ்தாபனத்தினருக்கும் நிகழ்வை சிறப்பாக உலகம் முழுவதும் ஒளி பரப்பு செய்த டான் ரீவி நிறுவனத்தினருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இன்னும் மணிவிழாவோடு செயற்பட்ட அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- E.S.P.நாகரத்தினம்


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:22<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/LகனடாNOT PR<br>தொ.இ: B/5654 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 10செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/4688 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 41<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSMDS/அரச தொழில்<br>தொ.இ: B/5656 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 52செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/4689 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 63செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:கனடாகுடியுரிமை<br>தொ.இ: B/5657 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:வைத்தியர்<br>தொ.இ: G/4700 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 38செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5658 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 8சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/4706 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 15.03.2015 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 23.04.2016, 24.04.2016 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | 22.04.2016 | 23.04.2016 | யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | | |
| அச்சுவேலி | புத்தூர் | 22.04.2016 | 23.04.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | | |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | | |
| | கல்வியங்காடு | | | |
| பருத்தித்துறை | புலோலி | | | |
| ஊர்காவற்றுறை | -- | 22.04.2016 | 24.04.2016 | யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| சுன்னாகம் | கோப்பாய் | | | |
| | அளவெட்டி | | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | | |
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | 22.04.2016 | 24.04.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | | |
| நெல்லியடி | -- | | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | | |
| | கைதடி | | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.:
021 222 2601
021 222 8602
தொலை நகல்:
021 222 2602

(சி-4061)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளி
# பட்டம்பெற்று இன்று பட்டச் சான்றிதழ் பெறும்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிஷாந்தினி பிரதீபன் (B.A) | ஜோன் மாரிட் யேசுதர்சன் (B.A) | சுப்பிரமணியம் இமயராஜ் (B.A) | மகேந்திரன் கண்ணதாசன் (B.com) | வேலுப்பிள்ளை கவிச்செல்வன் (B.A) | சோபிகா லோகேஸ்வரன் (B.A) | வீரேந்திரன் ஞானாகரன் (B.com) | அனுஷியா செல்வராசா (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விஜயந்தி முருகதாஸ் (B.A) | துஷ்யா பாலசுப்பிரமணியம் (B.A) | ரூபினி நர்மலிங்கம் (B.A) | சிவநாதன் சிவதாஸ் (B.A) | அனுஷா செல்லத்துரை (B.A) | மேரி ஜெபோஜினி றொனால்ட் திருசியஸ் (B.A-hons) | பாலச்சந்திரன் இலக்குமணன் (B.A) | உதயராஜ் சிந்துஜா (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| P. சஜிந்தினி (B.A) | B. றொமேஷ் (B.com) | L. பாரதி (B.A) | அமுதபாலன் வசந்தகுமாரி (B.A) | சிங்கராஜர் சுரேந்திரன் (B.B.M) | கி. துஸ்ஜயந்தி (B.A) | ஆ. சாதிசன் (B.A) | பா. சுமதி (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ராசலிங்கம் ஜெயகரன் (B.com) | அனு சுப்பிரமணியம் (B.A) | வைரவநாதன் ஷயந்தன் (B.B.M) | நாகரஞ்சினி கஜானனன் (B.A) | நகேந்திரம் மதுரா (B.A) | வில்பிரட் நிரோசன் (B.com) | நிவேதிதா ரெங்கநாதன் (B.A) | சூரியகுமார் விஜயகுமார் (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ருளானந்தம் அன்ரன் லியானுஸ்பிள்ளை (B.B.M) | பிருந்தாமலர் சங்கரலிங்கம் (B.B.M) | திருநாவுக்கரசு சுதாகரன் (B.com) | திசவீரசிங்கம் மோகன் (B.com) | இரத்தினலிங்கம் சுகந்தியா (B.A) | பிரகாஷ் கீர்த்திகா (B.A) | செல்சராசா பிரியங்கா (B.A) | செல்சராசா மதுரா (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பாலசுந்தரம் ஜெயச்சந்திரன் (B.B.M) | தயாளுபன் சுரேக்கா (B.A) | அகிலா சரவணமுத்து (B.A) | மீரா பார்த்தீபன் (B.A) | ஜெயராசா ஜெயரூபினி (B.A) | கஜேந்திரன் சுபாஜினி (B.A) | பாலகிருஷ்ணன் சந்தியா (B.A) | பீதாமபரம் பிரசாந்தி (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜோகராசா ஹரிகரன் (B.A) | சர்மிளி அமிர்தலிங்கம் (B.com) | முத்துகிருஷ்ணன் நிஷாலினி (B.B.M) | சத்தியசேகரன் பபிலா (B.B.M) | பிரதீபா கைலாசபதி (B.com) | ஆனந்தராசா இளங்கோ (B.A) | சோமசுந்தரம் துவாரகன் (B.A) | கனகசபாபதி அகலியா (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தாசிவம் பிரியதர்சினி (B.com) | சீவரத்தினம் அம்புஜா (B.A) | நிரஞ்சலா தில்லைநாதன் (B.A) | ராமலிங்கம் குமுதினி (B.A) | பஞ்சலிங்கம் சுதர்சன் (B.A) | டென்சில் லவிஅவர் சுவிகாஸ் (B.A) | கிரிஷ்ணபிள்ளை மிதுனா (B.A) | அனுசயா தங்கராஜா (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சிவகுமார் சகிலா (B.A) | ஜெசிந்தன் ஜெயதர்சினி (B.A) | கோபிதா மனோகரன் (B.A) | டீனஸ் மேரி சிறேபினா (B.A) | வைத்திலிங்கம் முருகதாஸ் (B.B.M) | இராசதுரை இதயராஜ் (B.A) | செல்வராசா கிரினோஜினி (B.A) | திரிலோகநாயகி சிவசுப்ரமணியசர்மா (B.com) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விஜயசேகரன் சாமினி (B.A) | தருமராஜா ராஜ்சுதன் (B.com-hons) | இராஜரெட்னம் ரமேஸ்குமார் (B.A) | கோகுலதாசன் பிரசாந்தினி (B.A) | கந்தையா விநோதினி (B.com) | தட்சாயினி கோபிநாத் (B.A) | பிரான்சிஸ் அன்ரனிட்டா பிரியந்தினி (B.A) | சிவராசசுந்தரம் சுதர்சன் (B.B.M) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழினி விஜயராசா (B.A) | டட்ஷாயினி தபேசன் (B.A) | நிஷாந்தினி நிஷாந்தன் (B.A) | வசீகரன் நிரூஷியா (B.A) | கசிதா பத்மநாதன் (B.com) | பிலிப்பையா அனரன்ஜெயராஜ் (B.A) | S. அனுசியா (B.B.M) | செல்வஜெனி ஜெயதர்சன் (B.A) |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க. இயல்டிமென்சன் (B.com) | அனுஷா சண்முகதாஸ் (B.A) | மோகனதாஸ் நிஷாந் (B.B.M) | சண்முகநாதன் ஞானக்குமரன் (B.B.M) | இரரசரத்தினம் சரவணபவன் (B.A) | லோகேஸ்வரன் லாவண்யன் (B.com) | ஆறுமுகம் மகேந்திரகுமாரி (B.A) | வல்லிபுரம் ஜீவானந்தன் (B.A) |

# வாரியாக 2013,2014 கல்வி ஆண்டுகளில்
# மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



தர்சனா ஸ்ரீயோகராசா (B.A) | சுபேந்திரராஜா மதிவதனன் (B.A) | ஆர்த்தி சிவரத்தினம் (B.A) | சாலினி விஜயராசா (B.A) | தேவராசா நவரூபன் (B.A) | சிவடக்சினி சுபாகரன் (B.A) | சுப்பிரமணியம் சுசேதா (B.A) | சண்முகலிங்கம் கோசிதா (B.A)



ஜெயந்தா அன்னலிங்கம் (B.A) | சர்வேந்திரன் தர்சன் (B.A) | துர்க்கா விமலேந்திரன் (B.A-hons) | அன்ரன் பிறேம்நாத் (B.B.M) | பிரியந்தி செல்வரத்தினம் (B.A) | ஜெயகாந்தன் சஜீஜன் (B.B.M) | மயூரி தங்கராசா (B.A) | நிரோஷா சோமசுந்தரம் (B.A)



ச. வத்சலா (B.A) | க. உஜிதன் (B.B.M) | குமாரசாமி பிருந்தாவனி (B.A) | ஜெஸ்லின் சுரேஜினி தேவதாஸ் (B.A) | மனோரஞ்சன் கிறிஸ்ரி நிரோஜன் (B.B.M) | பாலகுமாரன் ஜீவனா (B.A) | பொன்னம்பலம் பானுமதி (B.A) | சின்னராசா தனுஜா (B.A)



கோகிதா கணேஷ் (B.A) | லினஸ் ரஞ்சன் மரியதர்சன (B.com) | பசில்டா தேவசாகரம் (B.A) | ஆர்த்தி சுகிர்னாகேந்திரா (B.B.M) | றொபினா உதயந்தி றொபின்சன் (B.A) | தீபா சந்திரபவன் (B.A) | தர்சிகா தங்கவடிவேல் (B.A) | சிந்துஷா கனகரத்தினம் (B.A)



தர்மகுலசிங்கம் தமிழினி (B.A) | செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் மரியசீலன் (B.B.M) | பாலசுந்தரம் தர்மினி (B.A) | சசிதரன் குமரஞ்சினி (B.A) | ஷகிர்தினி மயூரன் (B.com) | பேரின்பநாயகம் ஹஜந்தன் (B.B.M) | ஜெனில்சங்கர் கௌசிகா (B.A) | பேரின்பநாயகம் பிரதீபன் (B.B.M)



ராஜி இராமதாஸ் (B.A) | முருகையா அம்சனா (B.A) | அருள்ராஜ் நர்மதா (B.A) | டிசானா சிவராஜா (B.A) | டல்சி நவராசா (B.A) | செல்வராசா இந்திராதேவி (B.com) | கந்தசாமி சிந்துஜா (B.com) | செல்வசுந்தரம் ரஷிகாம் (B.B.M)



சிவசுப்பிரமணியம் இயந்திரயன் (B.A) | அனுஷா கனகரத்தினம் (B.A) | ஜின் தணிகாசலமூர்த்தி (B.A) | ஜேகாநங் றெபிக்கா (B.com) | தங்கவடிவேல் கீதாரமணன் (B.com) | வோலன்ரினா மொறின் வெலிசோர் (B.com) | நவநீதா செல்லையா (B.com) | வைதேகி யெகாந்தன் (B.com)



சின்னராசா நளினி (B.com) | திவ்யா அம்பிகைராஜா (B.com) | துவாரகா செல்வரத்தினம் (B.com) | கதிர்காமநம்பி சிவகுமார் (B.A) | காசிநாதர் சிவநேசன் (B.A) | இராஜரத்தினம் கிருபாகரன் (B.A) | ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயப்பிரியா (B.B.M) | ஞானப்பிரியா அன்ரன் மரியசீலன் (B.com)



பரிமளா சுந்தரமூர்த்தி (B.com) | டேவிட் கர்மிலன் தயானி (B.A) | ஜெயந்திமதி செந்தன் (B.A) | செபமாலை விஜித்தா ஜெயநாயகி (B.A) | கதிர்காமநம்பி கபிலன் (B.A) | இராஜரத்தினம் வனிதா (B.A) | சுஜீதா ஜெகன் (B.A) | பரராஜசிங்கம் சசிறதன் (B.A)



முருகையா பிரதீபா (B.A) | கார்த்திகா செந்தில்வடிவேல் (B.A) | A. அருள்நேசன் (B.A) | விஸ்வலிங்கம் பாலகுமார் (B.A) | ஜெயராஜா றஜீ (B.A) | சுஜீவா குகன் (B.A) | ஆ. மிருணாலினி (B.A) | பத்மநாதன் மயூரன் (B.A)



ஜெருசி சாந்தகுமார் (B.A) | செல்வகுமார் பிரதீபா (B.A) | வரதராஜன் கல்பனா (B.A) | செல்வி தி.அமிழ்தினி (B.A) | G.கணேஷலிங்கம் (B.A) | த.சங்கரதாஸ் BBM | S.சர்வானந்தன் | தியாகராஜசர்மா மயூரகிரி கலைமாணி



தங்கராஜா அஜிந்தா (B.A) | K. மேரிநாயகி (B.A)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்

(சி-4067)

# ராஜபக்ஷ யுகம் திரும்புகிறதா?

## நீர்கொழும்பு பிரதேச- உள்ளூராட்சி சபைகளின் ஒன்றுகூடலில் உருவாகும் கற்பனைகள்!

**சண்டே லீடர் பத்திரிகையில் "ராஜபக்ஷ யுகம் திரும்புகிறதா? - நீர் கொழும்பு பிரதேச- உள்ளூராட்சி சபைகளின் ஒன்றுகூடலில் உருவாகும் கற்பனைகள்!" எனும் தலைப்பில் விமலனாத் வீர ரட்ண எழுதிய அரசியல் கட்டுரை யின் தமிழாக்கம்...**

...அப்பிரதேசத்து "நூறி ரீ எஸ்டேட்' தேயிலைத் தோட்டத்தில் பலாத்கார வேலைகளுக்கென்றே ஒரு நிலையத்தையும் சித்திரவதைக் கூடமொன்றையும் நடத்தி வருவதாக அறியப்பட்ட மற்றுமொரு வித பிரபல்யமாகவே இவருமிருந்தார். இவருடன் ஒத்துழைக்கத் தவறும் அல்லது மறுக்கும் எதிராளிகள் எனப்படக் கூடியவர்கள் எவரானாலும் அவர்களது வீடுகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றை இவரது வன்குழுக்கள், கொள்ளையிடுவது மற்றும் தீயிட்டு கொளுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் இவரது நிர்ப்பந்தங்களுக்கு இணங்காத நூறிதோட்ட சுப்பிரிண்டன்ட் நிகால் பெரேராவை கொன்று பேயாட்டம் ஆடி வருவதாகவும் ஊடக அறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

"பெற்றோர் தமது பெண் பிள்ளைகளை ஒளித்து மறைத்து வைத்தும் அடுத்த பலியாக அவர்கள் ஆகி விடக்கூடாது என்ற மன்றாட்டங்களுடன் அவர்களது சகோதரர்களும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலைமைகளுக்கு மத்தியில் பொலிசாரோ அக்கறையற்று பாராமுகமாக இருக்கிறார்கள்" என்பதே 'குடியரசு சதுக்கம்' வெளியீட்டின் அறிக்கையாக இருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ தமது கும்பலைச் சேர்ந்த எத்தகையவர்களையும் எந்தளவு ஈடுபாட்டுடன் பாதுகாத்து வருகிறார் என்பதையே இவை எடுத்துக்காட்டுவதாயுள்ளன.

எடுத்துக்காட்டாக குர்ராம் செய்க் கொலை வழக்கினை மேலும் கூடுதல் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் விசாரிக்கும்படி பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனும் கொடுத்த கடும் அழுத்தங்கள் மத்தியிலும் பிரிட்டிஷ் ஊடகங்களும் அதிகார மட்டங்கள், குடிமக்கள் சமூகங்கள் போன்றவற்றின் வருடக்கணக்கிலான பிரசார உத்திகளுக்கும் பின்னரே குற்றவாளிகளை இறுதியில் கைது செய்ய முடிந்திருக்கிறது. குற்றவாளி, ராஜபக்ஷவுடைய மிக நம்பிக்கைக்குரிய நெருங்கிய ஒரு சகா என்பது பின்னரே தெரியவந்துள்ளது. இவற்றைக் கூறுவதன் மூலம் மகிந்த ராஜபக்ஷவை ஒரேயடியாகக் கைவிட்டு மைத்திரிபால சிறிசேனவிடம் சரணடைந்து அடைக்கலம் தேடிக்கொள்ளும்படி எவரையும் ஊக்குவிப்பது எமது நோக்கம் என்பதல்ல! எமது பணிவன்புடன் கூடிய உருக்கமான வேண்டுகோள் என்னவென்றால் ராஜபக்ஷவின் முதலைப்பிடியிலிருந்து உங்களைச் சற்றே விடுவித்துக்கொண்டு அராஜகம் நிறைந்த அந்தப் பாழும் வக்கிர ஊழல் மோசடிச் சகதியிலிருந்து வெளியேறும் முயற்சியாக கரையிலே தெரிகின்ற உறுதியான ஜனநாயகம் என்ற மரவேரைப் பற்றிப் பிடித்து கரையேறும் உங்கள் நியாயமான மனச்சாட்சியுடன் கூடிய சுய உறுதிப்பாட்டை தக்கவைத்துக் கொள்ளுங்கள் என்பதேயாகும்!

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலையற்ற முண்டம்**

ஒரு காலத்தில் மிகுந்த பலம் வாய்ந்ததாயிருந்த "தேசபக்திக்கான தேசிய இயக்கம்" (PNM-Patriotic National Moment) என்ற அமைப்பின் தற்போதைய தலைவராக இருக்கும் டாக்டர் குணதாச அமரசேகர அண்மையில் பேசும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பது தலையற்ற ஒரு முண்டமாகவே இருந்து வருகிறது என்ற தனது கருத்தினை கூறியிருந்தார். ஆரம்பத்திலிருந்தே இக்கட்சிக்கு நிலையான ஒரே கொள்கை கிடையாது என்பதால் கட்சியின் தலைவரது தனிப்பட்ட சொந்தக் கொள்கையே எதுவித மாற்றத்திற்கும் இடமில்லாமல் கட்சியின் அதிகாரபூர்வ நிலைப்பாடாகவுமிருந்தது.

1956 இல் அதிகாரத்திற்கு வரும் நோக்குடன் பிரச்சினைக்குரியதாக இருந்த "சிங்களம் மட்டும்" சட்டத்தினை பற்றிப் பிடித்துக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) அரசானது ஒரு வருடத்திற்குப் பின்னர் தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் 'பண்டா- செல்வா' உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டதன்மூலம் நாட்டினது 1956 ஆம் ஆண்டின் அரச கரும மொழிச்சட்டத்தை தளர்த்திக் கொண்டு தமிழ்மொழிக்கும் சம அந்தஸ்து என்ற மொழிக்கொள்கையைக் கடைப்பிடித்தது.

அதற்குப் பின்னர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு தெரிந்து கொள்ளப்பட்டு அதிகாரத்திற்கு வந்திருந்த பண்டாரநாயக்கவின் மகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதிகாரங்களை மேலும் பரவலாக்கும் விதத்தில் 2000 ஆம் ஆண்டில் அரசியலமைப்புக்கான வரைபு ஒன்றினையும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தார். எப்படியும் அடுத்த தேர்தல்களில் அவரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியிருந்த மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே சந்திரிகா எடுத்திருந்த நடவடிக்கைகளை தலைகீழாக்கி செயற்படுத்தி மீண்டும் பழைய நிலைக்கே கொண்டு போயிருந்தார். அதாவது மீண்டும் ஒன்றையாட்சிக் கொள்கைக்கே அவர் திரும்பியிருந்தார். அத்துடன் அதிதீவிர அடிப்படைவாதிகளின் சிங்கள-பௌத்த 'பொதுபலசேனா' போன்ற அமைப்புக்களுடன் அவர் தீவிரமாக வளர்த்துக்கொண்ட நெருக்கமான உறவுகள் நாட்டின் சிறுபான்மையினரை அவரது 'SLFP' யிலிருந்து வெகுவாய் அந்நியப்படுத்தியதுடன் இவ்விதமாக அவரிடம் ஆழமையங் கொண்டிருந்த தீமையே அவரது ஆட்சிக்கு மரண அடியாகவும் அமைந்தது.

அப்படியிருந்தும் அளவு கடந்த விதமான குரோதத்தை அந்நிய பொருட்கள், அந்நியர்கள், அந்நிய நாடுகள் போன்றவைக்கெதிராக வெளிக்காட்டும் கொள்கைகளையே அதுவும் குறுகியகால உடன் நன்மைகளின் பொருட்டு அவர் தொடர்வது பரிதாபகரமானதும் நாட்டிற்கும் மக்களுக்கும் அனுகூலமற்ற அவரது தெளிவற்ற தன்மையானது மிகவும் துக்ககரமான ஒன்றாகவேயிருக்கிறது.

**தலைமைத்துவம் பறிக்கப்பட்டதாக மகிந்த கூறும் குற்றச்சாட்டுக்கள்: அனுதாபம் தேடும் நாடகமா?**


மேற்படி குற்றச்சாட்டுக்கள் பற்றி தெளிவுபடுத்தும் அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க, ராஜபக்ஷ ஆட்சியில் தவறிழைத்தவர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் ஷிராந்தி ராஜபக்ஷ போன்ற குடும்ப உறுப்பி னர்களைகாப்பாற்றும் உள்நோக்குடனேயே 'SLFP'யின் தலைமைத்துவத்தை அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் கையளித்திருந்ததாகக் கூறுகிறார். இவ்விதமாக பல பொய்க் குற்றச்சாட்டுக்களையும் கூறிவரும் மகிந்தவின் குழப்பகரமான மனோநிலை பற்றிக் குறிப்பிடும் ஊடகங்கள் சில, அவர் இவ்வித மனோநிலையில் சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்காகவேதான் அம்பாந்தோட்ட கடற்கரைகளில் அடிக்கடி நீச்சல் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக கூறுகின்றன.

**'ஒருவன் தன் வாழ்நாட்களில் செய்யும் நன்மை- தீமை போன்றவை அவன் அந்த உலகை விட்டுப் போகும் போது அவையும் கூடவே அவனுடனோ அவளுடனோ கூடவே வரும்'** என அனைத்து சமயங்களும் போதிக்கும் உலகளாவிய உண்மையொன்றினை ராஜபக்ஷக்கள் தமது அதிகாரத்தின் உச்சியிலிருந்தபோது, முதலிலேயே மறந்து போய்விட்டனர்.

(தொடரும்)

**-தமிழில் யோகர்-**





# தமிழக மீனவர்களுக்கு துப்பாக்கிகள் வேண்டும்

## வேல்முருகன் கோரிக்கை



இலங்கை கடற்படையினரிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள நவீன ரக ஆயுதங்களான ஏ.கே.47 மற்றும் ஏ.கே. 56 ஆயுதங்களை தமிழக மீனவர்களுக்கு வழங்கி இந்திய இராணுவம் அவர்களின் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் வாழ்வுரிமை கட்சியின் தலைவர் பண்ருட்டி தி.வேல்முருகன் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் மற்றும் படகுகளையும் விடுவிக்கக் கோரி இலங்கை தூதரகம் முன்பு தமிழர் வாழ்வுரிமை கட்சி சார்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றும் முழுதுமாக பாதிக்கப்பட்டதாக தெரிவித்து பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

எனினும், இந்திய அரசு இது குறித்து சற்றும் கவலைப்படவில்லை. தமிழக மீனவர்களின் போராட்டங்களை ரசிக்கின்ற வகையில் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன், தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பெற்றுத்தர இந்திய அரசு மறுக்கின்றது.

இப்பிரச்சினைக்கு ஒரே ஒரு தீர்வு கச்சதீவு மீட்கப்படவேண் டும் என்பது ஒட்டுமொத்த தமிழக அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு. தமிழக மீனவர்களின் வேண்டுகோள்.

எவ்வாறாயினும், இந்த வேண் டுகோளை மத்திய அரசு மதிப்பதாக தெரியவில்லை. இது குறித்து தமிழகத்தை சேர் ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பிய போது ஜனநாயக ரீதியாக சரியான பதிலை இந்திய பேரரசு எமது மக்களுக்கு அளிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேவை

தோட்ட வேலைக்கு ஆட்கள் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
**தொடர்புகளுக்கு:**
**076 921 6452** (C 4063)

## வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் சங்கம் பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்

**காலம் : 22.03.2016 செவ்வாய்க்கிழமை**
**நேரம் : மு.ப.10.00 மணி**
**இடம் : அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய திருமண மண்டபம்**

**நிகழ்ச்சி நிரல்**

1.மௌன இறைவணக்கம்
2.தலைமையுரை
3.4G(1) விசாரணை அறிக்கையின் காண்புகள் சமர்ப்பித்தலும் அது தொடர்பில் உரிய தீர்மானம் எடுத்தலும்
4. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
5.நன்றியுரை

**அங்கத்தவர்கள் மட்டும்**
**புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும்.**
**அங்கத்தவர்கள் தவறாது சமூகமளிக்கவும்**

**செயலாளர்.**
(C 4064) **க.புவனேந்திரன்**

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 80 | 180 | 80 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 120 | 160 | 100 |
| தக்காளி | 30 | 30 | 20 | 30 | 30 | 50 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 30 | 40 | 40 | 30 | 80 | 80 | 50 |
| கரட் | 80 | 100 | 80 | 80-200 | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 50 | 40 | 30 | 50 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 80 | 60 | 50 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 160 | 80 | 150 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 40 | 40-80 | 80 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | — | 80 | 70 | 120 | 80 |
| பயற்றங்காய் | 60 | 30 | 60 | 50 | 80 | 80 | 50 |
| லீக்ஸ் | 120 | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 40 | 80 | 80 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 100 | 170 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 400 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 120 | 100 | 180 | 120 | 120 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 50 | 50 | — | 100 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 15 | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 80 | 100 | 120 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 25-35 | 50 | 40 | 30-45 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | 130 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 150 | 60 | 150 | 100 | 80 | 120 | 80 |
| முள்ளங்கி | 40 | 50 | 20 | 40 | 40 | 50 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — | — | — |



# சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தொடர்ந்தும் முயற்சிக்கின்றோம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் உறுதி

(குருமன்காடு)

நாம் பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அசமந்தமே சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாமைக்கு காரணம் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக சுகாதார தொண்டர்கள் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து மக்களுக்குரிய அத்தியாவசிய சுகாதார சேவையினை வழங்கியது எல்லோரும் அறிந்த வடயம். இச்சுகாதார சேவையில் இருந்தவர்கள் 2014 ஆம ஆண்டு வந்த 25.01.2014, 25.02.2014 ஆகிய இரண்டு மத்திய அரசின் சுற்றுநிருபத்தின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் ஜனவரி 2015 ஆம் ஆண்டு 900 பேருக்கு சிற்றூழியர்களுக்கான வேலை வழங்கியுள்ளோம்.

அந்த வேலைவாய்ப்பானது மத்திய அரசின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வேலைக்கு உள்ளீர்க்கப்படும் மொத்த எண்ணிக்கையை வடக்கு மாகாணத்தின் ஆளணியாக மாற்றுவதாக எமக்கு கூறப்பட்டது.

தற்போது 900 பேரினை வடக்கு மாகாணத்தில் உள்வாங்கப்பட்ட பின்னர் திறைசேரியின் கீழ்வரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் சுற்றுநிருபத்தில் வந்ததன் அடிப்படையில் பதவி உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்களை தொழில் வெற்றிட ஒதுக்கீடு செய்யப்படாமை (காடர்) ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

தற்போதைய நிலைமையல் ஆளணியாக மாற்றாமல் இருப்பதனால் எமது மாகாணத்தில் இருக்க வேண்டிய சிற்றூழியர்களுக்கு மேலதிகமாக 600 பேர் இருப்பதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் உள்ளன.

எனவே 900 பேரினை நாம் உள்ளீர்ப்பு செய்யும் போது ஏற்கனவே தொண்டர்களாக இருந்த இச் சுற்றுநிருபத்தின் படி உள்ளீர்ப்பு செய்ய முடியாமல் தவறப்பட்ட 759 சுகாதார தொண்டர்கள் வேறு கால கட்டத்தில் ஒரு வருடத்தில் இருந்து 10 வருடம் வரையான காலப்பகுதியில் வேலை செய்தவர்கள் உள்ளனர். 180 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்ததன் திட்டத்தின் அடிப்படையில் இந்த 759 பேரையும் மேலதிகமாக உள்ளீர்ப்பு செய்யக் கூறி மத்திய அரசிற்கு வடக்கு மாகாணத்தின் அமைச்சு காரியாலயத்தின் அனுமதி மறறும் ஆளுநருடைய அனுமதியினை பெற்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கேட்டு கிட்டத்தட்ட 10 மாதங்களுக்கு முன் அனுப்பியுள்ளோம். ஆனால் இன்று வரை அதற்கான அனுமதிகிடைக்கவில்லை.

கடந்த 10 மாதகாலமாக எங்களால் ஆன முயற்சிகளை எடுத்த போதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இன்மையினால் தான் எம்மால் உள்ளீர்க்க முடியாமல் போனது.

அதே நேரத்தில் இது தொடர்பாக வடக்கு மாகா ணத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற எமது பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசியுள்ளோம் அவர்கள் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கதைத்து சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்களை எமது அரச சேவையினுள் சிற்றூழியர்களாக உள்வாங்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். ஆயிரத்து 400 பேரை ஒரே நேரத்தில் சுகாதார் சேவைக்குள் எடுப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் எவ்வளவிற்கு எமக்கு அங்கீகாரத்தை தரும் என்கின்ற பிரச்சினை இருப்பதால் இறுதியாக நாங்கள் கேட்டது சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்கள் சுகாதார அமைச்சினுள் சிற்றூழியர்களாக இல்லாமல் விட்டாலும் வடக்கு மாகாண சபையின் கீழ் வருகின்ற எல்லா திணைக்களங்களினுடைய சிற்றூழியர்களாக முன்னுரிமையின் அடிப்படையில் கீழ் உள்வாங்கப்பட வேண்டும் என்று அரசிடம் கேட்டுள்ளோம்.

அந்த வகையில் இச் சுகாதார தொண்டர்களின் நியமனம் தொடர்பாக மாகாண சபை தொடர்ந்து முயற்சி எடுப்பதுடன் அவர்களுக்குரிய நியமனம் வழங்குவதற்கு மிகவும் உறுதியாக இருக்கின்றோம் என்றார். (2-250)




## செங்குந்தா வீதியில் இடிந்துள்ள நிலையில் காணப்படும் கிணற்றின் நிலையைப் பாரீர்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகத்தின் ஆளுகைக்குட்பட்ட முள்ளியவளை கிழக்கு செங்குந்தா வீதியில் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் அப்போதைய பிரதேச சபையினரால் பொது மக்களின் பாவனைக்கென கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட கிணறொன்று கடந்த காலங்களில் பெய்த கடும் மழை காரணமாக இடிந்து கீழுறங்கியுள்ளது.

இது தொடர்பில் தாம் பல தடவைகள் பிரதேச சபையினருக்கு எழுத்து மூலம் அறிவித்தும் இதுவரையிலும் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமல் உள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிணறு ஆபத்தான நிலையில் உள்ளதால் நாளாந்தம் கால்நடைகள், வளர்ப்புப்பிராணிகள் என்பன கிணற்றினுள் விழுந்து இறக்கும் அபாயம் காணப்படுவதுடன் இக்கிராமத்தைச் சுற்றியுள்ள இந்து ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக் களின் போது பெரிதும் உபயோகமாக இருந்த இப்பொதுக் கிணறு இடிந்துள்ளமையால் தற் போது திருவிழாக்காலங்களில் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் கிராமத்தில் நடைபெறும் மரணச் சடங்குகளின் போது ஊர் பொதுக்கிணற்றில் இருந்து நீர் எடுத்துப் பாவித்தல் எனும் தமது மரபு வழிப் பழக்கம் தற்போது அருகி வருவதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக இதனைக் கருத்தில் கொண்டு இக் கிணற்றைப் புனரமைக்கவோ அல்லது மூடி வேறொரு இடத்தில் பொதுக் கிணறு ஒன்றை அமைக்கவோ முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

## பெரியமடு தெளிவாறு பகுதியிலுள்ள காணிகளில் சட்டவிரோதமான மணல் அகழ்வினால் மேட்டுநிலப்பயிர்ச்செய்கைக்கு பாதிப்பு

### பாராளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் முறையீடு

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமடு, ஈச்சவளக்கை ஆகியவற்றில் குடியிருக்கும் மக்களது காணிகளான பெரியமடு தெளிவாறு பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வினால் அப்பகுதியில் நிரந்தரமாக மேட்டுநில பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதநிலைஏற்படப்போவதாக மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம்முறையிட்டுள்ளனர்.

பெரியமடு மற்றும் ஈச்சவளக்கை பகுதியில் குடியிருககும்மக்களுக்கு பெரியமடு தெளிவாறு பகுதியில்மேட்டுநில செய்கைக்கான காணிகள்உள்ளன.

யுத்தத்திற்கு முன்பு அப் பகுதியல்மேட்டுநில பயிர்ச்செய்கையை அம் மக்கள் மேற்கொண்டுதமது வாழ்வாதாரத்தை நிவர்த்தி செய்து வந்தனர்.

யுத்தத்தின் பின்னர் அப் பகுதியில் மிதிவெடிகளின் அச்சுறுத்தல்களால் இன்று வரை மக்கள் மேட்டுநில செய்கையில் ஈடுபடாமல் இருந்து வருகின்றனர்.

இதனால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட பாராளுமனற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் முறையிட்டுள்ளனர்.

தற்பொழுது அப்பகுதியில் சிலர் இன்று வரை அம் மக்களுக்குரிய நிலங்களில் மணல் அகழ்வினை மேற்கொண்டு வருவதாகவும் பாதிககப்பட்ட மக்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன மக்களின் வேண்டு கோளுக்கு அமைவாக குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அங்கு மக்களுடைய காணிகளில் சுமார 6 அடிக்கு மேல் தோண்டப்பட்டு மண் அகழ்வு செய்யப்பட்டுள்ளது. இதனால்பாரிய பள்ளம்அப் பகுதிகளில் காணப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம்தொடர்புகொண்டு உரையாடினார். இதன்போது அவர் அப்பகுதியிலுள்ள இருவருக்கு தலா 150 கியுப் ஆற்றுப்டுக்கையில் உள்ளமணலை அகழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததாக கூறினார். ஆனால மக்கள் குடியிருப்பு நிலங்களிலுள்ள மணலை அகழ்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கும் அரச அதிகாரிகளின் ஆதரவுடனே இன்று வரை சட்டவிரோத மண்அகழ்வு இடம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட குறித்த காணிக்கு உரித்தானவர்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்துள்ளனர். குறிதத நிலங்கள் யாவும் மேட்டுநில பயிர்ச்செய்கை அற்ற தன்மை கொண்டதாகவும் தற்போது காணப்படுவதாக விசனம் தெரிவித்துள்ளதோடு,

சட்ட விரோத மண் அகழ்வினை மேற்கொண்டு வருபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து இதற்கான மாற்றுவழிகளை பெற்றுத்தருமாறும் அம்மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-4)

## சக்தி வளக் கழகங்களை பதிதலும் ஊக்குவிப்புத் தொகை வழங்கலும்

(மல்லாவி)

மத்திய கல்வி அமைச்சினால் நடத்தப்படும் பாடசாலை சக்தி வளக் கழகங்களை பதிவு செய்தல் மற்றும் ஊக்குவிப்பு தொகை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெறும்என இலங்கைநிலைபெறுதகு சக்தி அதிகார சபையினரால்அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பாடசாலையிலுள்ள சக்தி வளக் கழகங்களை வலுவூட்டுவதற்காக வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்கள்ஆகியவற்றில் உள்ள பாடசாலைகளின் சக்தி வளக் கழகங்களைப்பதிவு செய்யும் வேலைத் திட்டத்தின் முன்னெடுப்பாகஇதுநடைபெறும்.

மேற்படி மாகாணங்களின் கல்வி வலயங்களைச் சேர்ந்த விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலைகளின் சக்தி வளக் கழகங்களின் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர்கள்தெரிவித்துள்ளனர். (2-15)

## வேலை பெற்றுத்தருவதாக கூறுகின்ற நபர்களிடம் அவதானமாக இருங்கள்

### இளைஞர்,யுவதிகளுக்கு எச்சரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரப்பகுதிகளின் சில இடங்களில் வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாகக் கூறி சூட்சுமமான முறையில் ஏமாற்றும் நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் பொது மக்கள், இளைஞர், யுவதிகள் ஆகியோரை அவதானத்துடன் செயற்படுமாறு கேட்கப்படுகின்றனர்.

இவ்வாறான ஏமாற்று நடவடிக்கையொன்று தொடர்பில் தெரிய வருவதாவது,

வெளிநாட்டில் இருந்து அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த பொதுமகன் ஒருவர் முல்லைத்தீவு நகரப் பகுதியில் கடைத்தொகுதியொன்றை கட்டியுள்ளார்.

அக்கடைத் தொகுதியை வாடகைக்கு விட இருப்பதாகவும் பிரஸ்தாப நபர் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப் படுத்தியுள்ளார்.

இவ்வாறு அவர் வழங்கிய விளம்பரத்தில் உள்ள அவரது தொலைபேசி இலக்கத்துக்கு 077 467 0786என்றதொலைபேசி இலக்கத்தில் இருந்து தான் பிரபல தனியார் வங்கி ஒன்றின் முகாமையாளர் எனவும் குறித்த கடைத்தொகுதியை வாடகைக்கு எடுத்து அத்தனியார்வங்கியின்கிளையொன்றை திறக்கவுள்ளதாக கூறிய பிரஸ்தாபசூத்திரதாரி, அவ்வங்கியில் வேலை செய்வதற்கு ஆர்வமுள்ளநான்கு இளைஞர், யுவதிகளை தனக்கு அறிமுகப்படுத்துமாறு கோரியதை நம்பிய குறித்த கடைத்தொகுதிஉரிமையாளர் தனக்கு தெரிந்த வேலைவாய்ப்புத்தேடும் சிலரிடம் கூறியுள்ளதுடன் சூத்திரதாரியின் தொலைபேசி இலக்கத்தையும் வழங்கியுள்ளார்.

இதேவேளை வேலைவாய்ப்பை தேடும் நோக்கில் இருந்த சிலர் அத்தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தியபோது அவர்களை ஏமாற்றி ஒரு குறிப்பிட்ட பணத்தொகையை வசூலிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த சூத்திரதாரி, அவர்களிடம் தந்திரமான முறையில் உரையாடல்களை மேற்கொண்டு DTS பெரேரா 035200 120026770 என்ற கணக்கு இலக்கத்திற்கு 20 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடுமாறும் அதற்காகஅவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள், மடிக்கணனி என்பனவற்றை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளார்.

இதனால் சுதாகரித்துக் கொண்ட ஒருசிலர் அவர்களிடம் கேள்விக்கணைகளைத்தொடுத்துள்ளனர்.

இதனையடுத்து கோபாவேசம் கொண்ட சூத்திர தாரி அவர்களை தகாத வார்த்தைகளால்பேசியதுடன் குறுந்தகவல் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

அதன்பின்னர் சூத்திரதாரி தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதையும் தவிர்த்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்வாறானதொரு கைங்கரியத்தை கடந்த வருட இறுதிப் பகுதியில் முள்ளியவளை நகரப் பகுதியில் நடத்த முயன்ற சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை வேலைவாய்ப்பு தொடர்பில் சுய விபரங்களை அனுப்பி வைக்குமாறு குறித்த சூத்திரதாரி DTS.Perera@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்செய்தி தொடர்பில் சம்பந்தப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியபோதும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே இவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கு பாதிக்கப் பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பதிவு செய்ய முன்வரவேண்டும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.(2-310)

வேதாளம் சேருமே வெள்ளெருக்கு பூக்குமே
பாதாளம் மூலி படருமே மூதேவி சென்றிருந்து
வாழ்வாளே சேடன் குடிபுகுமே... - ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீதித்துறை கடுமையான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பிலான வழக்குவிசாரணை நடந்துகொண்டிருக்கின்ற வேளையில் புங்குடுதீவிலுள்ள பயனற்ற பாழடைந்த கட்டடங்களை இடித்து அழிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

உடைந்த கட்டடங்கள், பாழடைந்த வீடுகள், பற்றைகள் என்பன மக்கள் குடியிருப்பதற்கு அச்சுறுத்தலான சூழமைவை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை. அத்தகைதோர் சூழமைவே மாணவி வித்தியாவின் படுகொலைக்கு சாதகமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது என்ற உண்மை ஏற்புடையதே.

இந்தவகையில் புங்குடுதீவில் இருக்கக் கூடிய பாழடைந்த கட்டடங்கள், பயன்படுத்த முடியாத வீடுகளை உடைப்பதற்கு ஊர்காவற்றுறை நீதிபதி விடுத்த உத்தரவு சாலப்பொருத்தமான நடவடிக்கையாகும்.

அதற்கு மேலாக புங்குடுதீவு என்ற எல்லை கடந்து வடபுலம் முழுவதிலும் நீதிபதியின் உத்தரவை உள்ளூராட்சி அமைப்புகள் அமுல்படுத்துமாக இருந்தால் அது வரவேற்கப்படக் கூடியதாகும்.

பொதுவில் மக்கள் மீளக்குடியமர்ந்த இடங்களில் பாழடைந்த கட்டடங்களும் பற்றைக்காணிகளும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் இடையூறாக இருப்பது மறுக்க முடியாத உண்மை.

மீளக்குடியமர்வு நடைபெறும்போது அந்தஇடம் முழ்வதும் துப்புரவு செய்யப்படுவது கட்டாயமானதாகும். எனினும் மீளக்குடியமர்ந்தவர்கள் தத்தம் காணித்துண்டுகளை துப்புரவு செய்து அதில் வீடுகட்டி குடியிருக்கின்ற நிலைமையே காணப்படுகின்றது.

அருகில் உள்ள நிலங்கள் பற்றைக்காடுகளாக காணப்படுகின்றன. இதனால் குடியிருப்பவர்கள் பாம்பு மற்றும் விச ஜந்துக்களால் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கிறது.

இது தவிர இரவுப் பொழுதுக்குப்பின் ஒரு பயங்கரமான புறச்சூழலில் தாம் குடியிருப்பதை அந்த மக்கள் உணர்கின்றனர். இதனால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் ஒரு பயந்த மன நிலையில் வாழ்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை இதில் உள்ளது.

எனவே மீளக்குடியமர்ந்த இடங்களில் இருக்கக் கூடிய காணிகள் யார்? யாருக்கு? சொந்தமோ அவர்கள் தமது காணிகளை துப்புரவு செய்து வேலி யிட்டு மற்றவர்களின் இயல்பு வாழ்வுக்கு உதவ வேண்டும்.

இதைவிடுத்து வீடுகட்டி குடியிருப்பதாக இருந்தால்மட்டுமே காணியை திருத்த முடியும்; குடியிருக்கா விட்டால் காணி திருத்தவேண்டிய அவசியம் என்னவென்ற மனநிலையில் மக்கள் இருப்பார்களாயின் மீள்குடியமர்ந்த மக்கள் பரிதாபத்திற்குரியவர்கள் என்பதே பொருளாகும்.

எனவே இது விடயத்தில் நீதிபரிபாலனமும் உள்ளூராட்சி அமைப்புகளும் தலையிட்டு மீளக்குடியமர்ந்த இடங்களில் உள்ள அனைத்துக்காணி உரிமையாளர்களும் தத்தம் காணிகளிலிருக்கக் கூடிய பயன்பாட்டிற்கு பொருந்தாத கட்டடங்களை இடித்து அழிப்பதுடன் காணிகளில் இருக்கக் கூடிய பற்றைகளை அழித்து நிலத்தைத் துப்புரவாக வைத்திருப்பதற்கும், துப்புரவு செய்யப்பட்ட காணிகளில் பயிர்ச்செய்கை அல்லது பயன்தரு மரங்களை நாட்டி உரிய காணியை பிரயோசனமிக்கதாக மாற்றுதல் என்ற நிலைமைக்கு ஆளாக்க வேண்டும்.

இத்தகையோர் செயற்பாட்டை முழு இடங்களிலும் செய்கின்றபோது அதனால் நோய்த்தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும் என்பதுடன் புங்குடுதீவில் நடந்த கொடூர சம்பவங்கள் மேலும் தொடர்வதற்கான சந்தர்ப்ப சூழல்களும் தவிர்க்கப்படும் என்பதால் இது விடயத்தில் அதீத கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும்.

எனவே இது விடயத்தில் உள்ளூராட்சி அமைப்புகள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். மேலாக வடபுலத்திலுள்ள பற்றைக்காணிகள் மற்றும் பாழடைந்த கட்டிடங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபை இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்.

# ரஷ்யாவில் தரையிறங்கியபோது வெடித்துச் சிதறியது விமானம்

## 61 பேர் சம்பவ இடத்தில் பரிதாப மரணம்

டுபாய் நாட்டில் இருந்து ரஷ்யாவுக்கு சென்ற 'பிளை டுபாய்' விமானம் ரஷ்யாவின் ராஸ்டோவ்-ஆன்-டான் விமான நிலையத்தில் தரையிறங்கியபோது ஏற்பட்ட விபத்தில் 61 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

தடம் எண்:FZ981 கொண்ட, போயிங் 737-800 ரகத்தை சேர்ந்த அந்த ஜெட் விமானம், ரஷ்ய நாட்டின் தென் பகுதியில் உள்ள ராஸ்டோவ்-ஆன்-டான் விமான நிலையத்தில் முதலில் தரையிறங்க முயற்சித்தபோது, கடுமையான பனி மூட்டத்தால் ஓடுபாதை தெளிவாக தெரியவில்லை. எனவே, அந்த முயற்சி கைவிடப்பட்டது.

பின்னர் இரண்டாவது முறையாக தரையிறங்க முயற்சித்தபோதும் இதே நிலை நீடித்ததால், ஓடு பாதையை விட்டு சுமார் 100 அடிதூரம் விலகி அந்த விமானம் தரையை தொட்ட போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் அநத விமானம் வெடித்துச் சிதறியதாக முதல்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த விமானத்தில் வந்த 55 பயணிகள், விமானி உள்ளிட்ட 6 விமானப் பணியாளர்கள் என மொத் தம் 61 பேர் இந்த விபத்தில் பலியானதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவ்விபத்தையடுத்து, விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (இ-5)

## உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஜூனில்

(கொழும்பு)

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வரும் ஜூன் மாதம் நியமிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்த அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு தேவையான சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

தேசிய சட்ட சம்மேளத்தின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். (செ-12)

## கசிப்புடன் கைதான பெண் ரூ.50 ஆயிரம் செலுத்தினார்

துன்னாலைப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் பிடிக்கப்பட்ட பெண்ணொருவருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார்.

கடந்த 16.01.2016 அன்று நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்த பெண் ஒருவரைக் கைது செய்தனர். அவரின் வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் நீதிபதி. (இ-5,60)

## வீடுகளுக்கு விண்ணப்பிக்கலாம்

அரசினால் வடக்கு கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ள நிலையில் அதற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு தகுதியுடைய பயனாளிகளின் விபரம் கிராம சேவையாளரினால் பூரணப் படுத்தப்படவுள்ள நிலையில் பொதுமக்கள் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெறமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

## இலவச கண் பரிசோதனை இன்று

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியும் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கரவெட்டி அரசினர் வைத்தியசாலையில் நடைபெறும்.

இவ் இலவச கண் பரிசோதனையில் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்கள் பங்குபற்றி பயன்பெற்றுக் கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-5,60)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியோருக்கு அபராதம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்தவாகனச் சாரதிக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்தார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சாரதி தொடர்பானவழக்குநேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் நடைபெற்றபோது 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார். (இ-5,60)

# விண்ணரசை மண்ணகத்தில் விதைத்திட விரைந்திடுவோம்

இன்று குருத்தோலை ஞாயிறாகும். குருத்து ஞாயிறு - (Palm Sunday) அல்லது குருத்தோலைத்திருவிழா என்பது இயேசு கிறிஸ்து எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்போடு நுழைந்த ஒருவிழா. பைபிளின் படி மக்கள் அன்று குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு இயேசுவை வரவேற்கும்

## பரமபிதா காட்டிய பாதை

படியாக அவரை எதிர் கொண்டு போனார்கள். இவ்வாறு, குருத்தோலைகளை அசைத்து, வழியில் துணிகளை விரித்து, இலைதழைகளைப் பரப்புவது ஓர் ஆழ்ந்த பொருள் படைத்த செயலாகும்.

எகிப்தியர்களிடம் பல நூறாண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்த யூதர்களாகிய இஸ்ரயேலர்கள், பின்னர் அவர்களிடமிருந்து விடுதலைபெற்று தங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்பினார்கள். விடுதலை பெற்று நாடு திரும்பிய விடுதலை பயணத்தின் நினைவாக இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் பாஸ்கா பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். பாஸ்கா என்ற எபிரேயச் சொல்லுக்கு 'கடந்து வருதல்" என்று பொருள். 2000 ஆண்டுகளுக்கு முன் யூத இனத்தில் பிறந்த இயேசு தனது 33 வயதில் பாஸ்கா பண்டிகையைக் கொண்டாடுவதற்காகத் தாம் பிறந்து வளர்ந்த எருசலேம் நகருக்கு வருகிறார். அப்போது அவர் கழுதையின் மீதேறி வந்தார். வழிநெடுகிலும் சாலையின் நடுவே அவருக்குத் தரை விரிப்புகளை விரித்து கையில் பேரீச்சை குருத்துக்களையும், ஒலிவ மரக்கிளைகளையும் பிடித்தபடி அவரை முன்னால் வரச்செய்து அவர் பின்னால் பவனியாக அணிவகுத்து வருவார்கள்.

கத்தோலிக்க சபை வழக்கப்படியும், மக்கள் குருத்தோலைகளை கையிலேந்தி தேவாலய முன்றலிலிருந்து பவனியாக சென்று ஆலயத்திற்குள் நுழைவார்கள். பவனியின்போது பாடல்கள் பாடப்படும். குறிப்பாக, ஓசன்னா என்று பாடுவார்கள். அச்சொல்லுக்கு எபிரேய மொழியில் 'இறைவா, விடுவித்தருளும்" என்பதுடன் 'வாழ்க!' என்பதும் அதன் பொருளாகும்.

எருசலேம் நோக்கி இயேசு பயணம் தொடங்கிய நேரம் முதல், எருசலேமில் நுழைந்த பொழுதும், அதன் பின் அங்கு நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் இதயத்திற்கு இதமானது அல்ல.

வெற்றியும் தோல்வியும் கலந்த ஒரு அனுபவம். குருத்து ஞாயிறு இந்த இரு வேறு நிலைகளையும் நமக்கு உணர்த்துகிறது. தோல்வியில் நம்பிக்கையையும் வெற்றியில் நிதானத்தையும் சமன் செய்து வாழ உணர்த்துகிறது. அர்ப்பணவாழ்வில், இலட்சிய பயணத்தில் வேதனையும் விரக்தியும் விமர்சனமும் நம் வாழ்க்கையை விகாரப்படுத்தி விடலாம். குருத்து வெளிப்படுத்தும் இளமை, புதுமை, செழுமை இங்கு நம்பிக்கை




உரம் ஊட்டுகிறது. இந்த குருத்து ஞாயிறு தந்த உயிர்ப்பின் நம்பிக்கையில் தமது பெரும் துன்பம் நிறைந்த பாடுகளின் பெரிய வெள்ளியைச் சந்திக்கும் வலிமையைப் பெற்றார். இந்த உயிர்ப்பின் நம்பிக்கையை நினை

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

வூட்டும் குருத்து ஞாயிறைக் கொண்டாடும் நாம், வாழ்வின் பெரிய வெள்ளிகளை வலிமையோடு சந்திக்க வேண்டும் ஆகவே, இன்றைய இக்குருத்தோலைப் பவனியில எமக்கும் அமைதி கிடைக்க நாமும் செபிப்போம், செயற்படுவோம்!

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

## மின்னொளி வி.கழகம் சம்பியன்







ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கரப்பந்துப் போட்டிகள் அண்மையில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டியில் மின்னொளி விளையாட்டுக்கழகத்தினர் முதலாமிடத்தையும் பரந்தாமன் விளையாட்டுக் கழகத்தினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை ஆண்களுக்கான போட்டியில் மின்னொளி விளையாட்டுக் கழக அணி முதலாமிடத்தையும் இளந்துளிர் விளையாட்டுக்கழக அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (சு-28)

### வலிகாம கல்வி வலய வலைப்பந்தாட்டம்

# தெல்லிப்பழை யூனியனை வீழ்த்தி சம்பியனாகியது அராலி சரஸ்வதி





வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 15, 17 வயதுப் பிரிவுகளில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

15 வயதினருக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. முடிவில் சரஸ்வதி அணி 24:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை மகாஜனாக் கல்லூரி அணி பெற்றது.

17 வயதுப் பிரிவிலும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 27:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை மகாஜனா கல்லூரி அணி பெற்றது. (கு)

# மாகாண மட்ட பூப்பந்தாட்டத்தில் உடுவில் மான்ஸ் மகா வித்தி.

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட பூப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்று உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் மாகாண மட்ட போட்டியில் பங்கு பற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வலிகாமம் கல்வி வலய மட்ட பூப்பந்தாட்ட போட்டியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் 19 வயது ஆண்கள் பிரிவு , 19 வயது பெண்கள் பிரிவு , 15 வயது ஆண்கள் பிரிவு ஆகிய மூன்று அணிகளும் 2 ஆம் இடத்தினை பெற்றுக் கொண்டன.

அவ் அணிகளே மாகாண மட்ட பூப்பந்தாட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

மேலும் 15 வயது பிரிவுப் பெண்கள் அணி மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

சரசாலை வடக்கு சன சமூக நிலையமும் விவசாய சம்மேளனமும் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சரசாலை வடக்கு குருவிக்காடு தரவையில் இடம் பெறவுள்ளது.

முதலாம் இடத்தினை பெறும் வெற்றியாளருக்கு தங்கப்பதக்கமும் ஏனைய வெற்றியாளர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங் கப்படும் என வடக்கு சரசாலை சன சமூக நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (கு)

# இன்றைய நாள் நிகழ்வுகள்

## கரவெட்டி மகேசன் வி.கழக கிரிக்கெட் இறுதிப்போட்டி இன்று

யாழ்.மாவட்ட ரீதியாக நடைபெற்று வந்த அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கழக தலைவர் எஸ்.தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இத் தொடரில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் உடுவில் சலஞ்சர்ஸ் அணியை வெற்றி பெற்று தொண்டைமானாறு ஒற்றுமை அணியும் கரவெட்டி நவசக்தி அணியை வெற்றி பெற்று மாலுசந்தி மைக்கல் அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தன.

மூன்றாமிடத்துக்கான போட்டியில் உடுவில் சலஞ்சர்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணி மோதவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் ஆ.ரகுநாதனும் கௌரவ விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர்கள் க.தர்மலிங்கம் மற்றும் இ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (கு)

# கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான இருபாலாருக்குமான மெய்வல்லுநர் போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்வுகள் வருமாறு,

முற்பகல் 10 மணிக்கு 10 ஆயிரம் மீற்றர் ஆண்,பெண் இருபாலாருக்குமான ஓட்டப் போட்டி, 4X100 ஆண்,பெண் இருபாலாருக்குமான அஞ்சல் ஓட்டப் போட்டி , 110 மீற்றர் ஆண்கள் தடை தாண்டல் தெரிவு, இறுதிப் போட்டி 100 மீற்றர் பெண்கள் தடை தாண்டல் தெரிவு, இறுதிப் போட்டி ஆண்களுக்கான முப்பாய்ச்சல், ஈட்டி எறிதல், கோலூன்றிப் பாய்தல், ஆண்களுக்கான இறுதிப் போட்டி கோலூன்றிப் பாய்தல் பெண்களுக்கான இறுதிப் போட்டி ஆண்,பெண் இருபாலாருக்குமான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்ட இறுதிப் போட்டி.

பி.ப. 2 மணிக்கு பின்னர் ஆண்,பெண் இருபாலாருக்குமான 100 மீற்றர், 800 மீற்றர்,4 X100 மீற்றர், அஞ்சல் ஓட்டப் போட்டியின் இறுதிப் போட்டி மற்றும் ஆண்களுக்கான குண்டெறிதல் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளன. (கு)

# காற்பந்து தொடர்

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் ஆண்கள் அணிகளுக்கு இடையே காற்பந்தாட்டத் தொடர் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக தைானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள மேற்படி தொடரில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

# இன்றைய போட்டிகள்

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 9 மணிக்கு நடை பெறும் போட்டியில் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிங்ஸ்டார் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக் கழகமும் மு.ப. 11.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் சங்கானை உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகமும் நண்பல் 12 மணிக்கு நடைபெறும் போட்டியில் கொட்டடி இளங்கதிர்-ஏ அணியினை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (கு)

# மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கல்

இலங்கை கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த வட மாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் கி.மனோகரன் தலைமையில் பண்ணையில் அமைந்துள்ள நன்னடத்தை சிறுவர்கள் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் பியந்த செனவிரத்ன கலந்து கொள்ளவுள்ளார். (கு)

# வலைப்பந்தாட்டக் கருத்தரங்கு

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் சர்வதேச வலைப்பநதாட்ட புதிய அவிதிகள் தொடர்பான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப 2 மணி வரை கொழும்பு டொறிங்டன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள ஏ,பி தர நடுவர்களைப் பங்குபற்றுமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சி.சுரேந்தினி கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

## மூன்று நாடு...

முக நகர திட்டம் உட்பட நேரடி முதலீடுகள் மற்றும் புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து சீன தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சீன விஜயத்தின் பின்னர் பிரதமர் விக்கிரமசிங்க, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எனினும் இது தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## ஒரே விதமா...

லும், மர்மமான முறையில் வெடிப்புகள் ஏற்பட்டதையடுத்து மின் விநியோகத்தில் பாதிப்புகள் ஏற்பட்டன.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்ட மின்சக்தி அமைச்சின் செயலர், சுரேன் பட்டகொட, இரண்டு மின்மாற்றிகளில் ஏற்பட்ட வெடிப்புகளுக்குமான காரணம் குறித்து பொறியியலாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

பியகம, கொட்டுகொட உபமின் நிலையங்களுக்குள் பாதுகாப்பு போடப்பட்டிருந்த நிலையிலும் இந்த இரண்டு மின்மாற்றிகளிலும் எவ்வாறு ஒரேவிதமான வெடிப்பு ஏற்பட்டது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த வெடிப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது மர்மமாகவே இருப்பதாக இந்த துறையில் 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம்மிக்க பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

உலகின் வேறெங்கும் இது போன்று மின்மாற்றிகளில் வெடிப்பு ஏற்பட்டதாகப் பதிவாகவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும்பழுதடைந்த மின்மாற்றிகளை திருத்தும் பணிகள் முடியும் வரை, நீர்கொழும்பு பிரதேசத்தில் மின்தடை ஏற்படும் என்றும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் வெடிப்பு ஏற்பட்ட கொட்டுகொட உபமின்நிலையத்துக்கு விமானப் படையினர் பாதுகாப்பு வழங்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## எட்கா உடன்...

வை.கே.சின்ஹா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போதுதான் இந்த உடன்பாட்டை முன்மொழிந்திருந்தார்.

இந்த உடன்பாட்டின் மேலோட்டமான வரைபை மட்டும்தான் இந்தியா வழங்கியது. இதுதொடர்பான முறையான பேச்சுக்கள் இன்னமும் தொடங்க வில்லை.

ஆனால் இலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகள், இந்த உடன்பாடு இலங்கைக்கு நன்மை தராது என்கின்றன.

இலங்கையுடன் எந்த உடன்பாட்டைச் செய்து கொள்வதானாலும், அது இரண்டு நாட்டு மக்களுக்கும் நன்மையானதாக இருக்க வேண்டும் என்பதை இந்தியா உறுதிப்படுத்தும்.

சாத்தியமான எல்லா வழிகளிலும். இலங்கைக்கு உதவ இந்தியா தயாராகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# தரவை மாவீரர் துயிலுமில்ல பகுதிகளில் சிங்களவர் குடியேற்றப்படுவதை அனுமதிக்க முடியாது

### நல்லாட்சிக்கு இது தகாத செயல் - யோகேஸ்வரன் எம்.பி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தரவையில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலுமில்லம் அழிக்கப்பட்டு அந்த பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேற்றப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனதுரையில் குறிப்பிடுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பிமலை பகுதியில் திட்டமிட்ட முறையில் பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

எங்களது பிரதேசத்தை பெரும்பான்மை இனத்தவர்கள் சுவீகரிப்பதற்காக எமது இனத்தின் விடுதலைக்காக தங்களைத் தியாகம் செய்து போராடி சாவடைந்த எமது உறவுகளை விதைத்த தரவை மாவீரர் துயிலுமில்லக் கட்டடங்களை இடித்து சிங்கள மக்களுக்கு காணி பெற்றுக்கொடுக்க நடவடிகை எடுக்கப்படுகிறது.

இதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். நல்லாட்சி எனக் கூறும் அரசாங்கம் அதர்மமான செயல்களில் ஈடுபடக்கூடாது. எமது உறவுகள் விதைக்கப்பட்ட பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

பண்டைய மன்னன் துட்டகைமுனு தன்னுடன் போரிட்டு வீரச்சாவடைந்த தமிழ் மன்னன் எல்லாளனின் வீரத்தை உணர்ந்து அவரை அநுராதபுரத்தில் அடக்கம் செய்த இடத்தை பாதுகாத்து வணக்கம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளான்.

தமிழினத்தின் விடுதலைக்காக போராடிய எமது உறவுகளின் உடலங்கள் விதைக்கப்பட்ட இடங்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் துயிலுமில்லங்கள் தொடர்ந்து இருப்பதற்கும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் நல்லாட்சியின் மகத்துவம். மாவீரர் துயிலுமில்லங்களை இடித்து, ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்த தமிழ் மக்களின் மனங்களை துன்புறுத்தாதீர்கள் என அவர் தனதுரையில் தெரிவித்துள்ளார். (செ-12)

## மகிந்தவின் தேர்தல்கால...

ராஜபக்ஷவிடம் விசாரணைகளை நடத்தியிருந்தது.

இதுகுறித்து மேல்நீதிமன்ற நீதிபதி கிஹன் குலதுங்க நடத்திய விசாரணையின் போது சாட்சியமளித்த கோத்தபாய ராஜபகஷ, ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனம் ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை என்று கூறினார்.

இதன்போது ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளில் மகிந்த ராஜபக்ஷக்கு ஆதரவாக ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டமைக் கான சாட்சியங்கள் உள்ளதாகவும், இது ஊழல் இல்லையா என்று நீதிபதி கிஹன்குலதுங்க கேள்விஎழுப்பினார்.

அதற்கு, ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளில் ரக்ன லங்கா பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டமைக்கு அந்த நிறுவனத்தின் முன்னாள் உயரதிகாரிகளே பொறுப்பு என கோத்தபாய ராஜபக்ஷ பதிலளித்துள்ளார்.

நாட்டில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளில் படைத்துறை அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டு வந்த ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பாரிய மோசடிகள் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது, ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் பணியாளர்கள் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்தப்படவில்லை என்று அதன் முகாமையாளராக இருந்த மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர சாட்சியம் அளித்திருந்தார்.

அதேவேளை, இந்த தேர்தல் பரப்புரைகளில் பயன்படுத்தப்பட்ட ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் பணியாளர்களுக்கு ஏற்பட்ட செலவுகள் குறித்த விபரங்களை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் கணக்காளர் தாக்கல் செய்திருந்தார்.

இதையடுத்து, தவறான தகவல்களை வழங்கியதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் மன்னிப்புக் கேட்ட மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர, கோத்தபாய ராஜபக்ஷ மீதுள்ள அன்பினால் தான் அவரைக் பாதுகாப்பதற்காக பொய்ச்சாட்சியம் அளித்ததாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## போர் குறித்த நீதி விசாரணை...

நடந்த சட்ட கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் உள்நாட்டு நீதித்துறை மீது நம்பிக்கை கொண்டுள்ளேன். நீதித்துறையை வலுப்படுத்த தேவையான அனைத்தையும் செய்ய வேண்டும் என்றும், அதன் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் உணர்கிறேன்.

போருடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடத்தப்படும் உள்நாட்டு விசாரணைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டு நீதிபதிகளை அழைக்க வேண்டும் என்று அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையின் பின்னர், நீதித்துறைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை இருந்தால், வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்கு வருமாறு அழைப்பதற்கோ அல்லது அவர்கள் இதில் தலையீடு செய்வதற்கோ இணங்க மாட்டேன்.

உள்நாட்டு நீதித்துறை எந்த அரசியல் தலையீடுகளும் இன்றி சுதந்திரமாகச் செயற்படுவதற்கு எனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-12)

## இனப்பிரச்சினைக்கான...

தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பாலமுனையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19 ஆவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து சமூகங்களும் அதிகாரப் பகிர்வில் நன்மையையடைய வேண்டும் என்பதற்காகவே தமிழ்த தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியாக அதிகார பகிர்வினை வலியுறுத்தி வருகின்றது.

அதிகார பகிர்வினை மேற்கொள்ளவதில் அரசாங்கம் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது.

எனினும் இலகுவாக தீர்க்க கூடிய விடயங்களை காலம் தாழ்த்தி மேற்கொள்வதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் அதிகார பகிர்வு எனும் விடயமானது 13ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்துடன் தொடர்புடையது. எனினும் அதனை அமுல் படுத்த கடந்த அரசாங்கங்கள் முயற்சிக்கவில்லையெனவும் இரா.சம்பந்தன் குற்றம் சுமத்தியுள்ளார், (செ-12)

## மதுபான விற்பனை நிலை...

மதுபான விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றனர்.

களுத்துறையை சேர்ந்த அரசியல்வாதி ஒருவரின் மனைவி பெயரில் மூன்று மதுபான விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த மூன்று அரசியல்வாதிகளுக்கு மதுபான விற்பனை நிலையங்கள் உளளன. களுத்துறையில் இரண்டு அரசியல்வாதிகள் மதுபான விற்பனை நிலையங்களை கொண்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் நான்கு பேர், கண்டி மாவட்டத்தில் இரண்டு பேர், காலி மாவட்டத்தில் மூன்று பேர், குருநாகல் மாவட்டத்தில் மூன்று பேர், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒருவர் என அரசியலவாதிகள் மதுபான விற்பனை நிலையங்களை கொண்டுள்ளனர்.

இதனை தவிர ஏனைய மாவட்டங்களிலும் அரசியல்வாதிகள் மதுபான விற்பனை நிலையங்களை கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மதுபான விற்பனை நிலையங்களுக்கு மேலதிக சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடு முழுவதும் பெட்ரோல் நிரப்பு நிலையங்களை கொண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## க.பொ.த. (சா/த) பரீட்சை...

இரவுவரை எமக்குக் கிடைக்கப்பெற்ற பரீட்சை முடிவுகளின் படி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 15 மாணவர்கள் 9 பாடங்களில் ஏ தரசித்தியும் 30 மாணவர்கள் 8 பாடங்களில் ஏ தரசித்தியும் பெற்றுள்ளனர், கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரசித்தியும், 5 மாணவர்கள் 8 பாடங்களில் ஏ தர சித்தியும் பெற்றுள்ளனர்.

குறித்த பரீட்சைபெறுபேறுகளை www.doenets.lk என்ற இணைத்தின் மூலம் பார்வையிட முடியும் என பரீட்சை திணைக்களம் அறிவித்திருந்தது.

அத்துடன் கை தொலைபேசிகள் மூலம் பெற்றுக்கொள்வதாயின் EXAMS எனபதிவு செய்துஒரு இடை வெளிவிட்டு Index Number ஐ பதிவுசெய்து, Dialog எனில் 7777 என்ற இலக்கத்திற்கும், Mobitel எனில் 8884 என்ற இலக்கத்திற்கும், Airtel எனில 7545 என்ற இலக்கத்திற்கும், Etisalat எனில் 3926 என்ற இலக்கத்திற்கும், Hutch எனில் 8888 என்ற இலக்கத்திற்கும் SMS அனுப்புவதன் மூலம்பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த 2015 ஆம் ஆண்டுகல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம்17 ஆம்திகதிவரை நடைபெற்றிருந்தமைகுறிப்பிடத்தக்கதாகும். (செ-9)

## தாயும் மக...

கிணற்றினுள் தவறிவிழுந்து உயிரிழந்த பரிதாபசம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் வசிக்கும் நி.தயாபோதினி என்ற தாயார் மற்றும் ஒன்றரை வயது பிள்ளையான வினோயன் ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிறுவன் கிணற்றினுள் தவறிவிழுந்ததை அடுத்து தாயார் குறித்த மகனை காப்பாற்ற கிணற்றினுள் பாய்ந்திருக்கலாம் என உறவினர்கள் சந்தேகம் வெளியிடுகின்றனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## இறுதிப் போர்க் குற்றங்களுக்...

பீல்ட் மார்ஷலும் அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்களால் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் ஊடகங்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு அவர் பதிலளிக்கையிலேயே மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் தனது பதிலில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இறுதி யுத்தத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்த குற்றங்கள் மற்றும் வெள்ளைக்கொடி விவகார சர்ச்சை, இறுதி யுத்த நேரத்தில் இராணுவத்தினர் வசம் சரணடைந்த பொதுமக்களின் நிலைமைகள் தொடர்பில் பொதுமக்கள் முன்வைத்து வரும் வாக்குமூலங்கள் தொடர்பிலும அரசாங்கம் தீவிரமாக ஆராய்கிறது.

இந்த விவகாரங்கள் சர்வதேச விசாரணைகளுக்கு உட்படுத்த வேண்டும் என சரத் பொன்சேகா கூறிவருகின்றார். ஆனால் இப்போதிருக்கும் நிலையில் சர்வதேச விசாரணைகள் அவசியமில்லை. இப் போதிருக்கும் நிலையில் உள்ளக விசாரணைகள் மூலம் இப்பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வைக்காணும்.

கடந்த ஆட்சியில் உள்ளக விசாரணைகளின் மூலம் தீர்வு எதுவும் கிடைக்காமையே சர்வதேச விசாரணைக்கான தேவை எழுந்தது.

இந்த நிலையினாலேயே சர்வதேச அழுத்தங்களில் இருந்து நாட்டையும் இராணுவத்தையும் காக்க ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தன.

பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளை நல்லாட்சி அரசு முன்னெடுத்து வருகிறது.

மேலும், உள்ளக விசாரணைகளாக எவை அமைந்தாலும் இராணுவம் செய்தவை எனக் கூறப்படும் குற்றங்களுக்கு தண்டனை அமைகக்கும் பொறிமுறையாக அவை ஒரு போதும் இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார். (செ-12)

## பாணின் விலை...

முன்னிட்டு மீண்டும் அது குறைக்கப்பட்டது.

நுகர்வோர் வாரத்தை முன்னிட்டு இடை நிறுத்தப்பட்டிருந்த கோதுமை மாவின் விலையை நாளை 21ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அதிகரிக்க திட்டமிட்டுள்ளமை தொடர்பில் தமக்கு அறியக் கிடைத்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக அனைத்து பேக்கரி உற்பத்திகளின் விலையையும் 3 அல்லது 5 ரூபாயினால் அதிகரிக்க வேண்டி ஏற்படும் என அவர் கூறியுள்ளார்.

கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் அவற்றின் விலையை அதிகரிக்கும் பட்சத்தில் கட்டாயம் பாணின் விலை அதிகரிக்கும் என பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிக்கும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. (செ-12)

## 23ஆம் திகதி...

நேரப்படி பிற்பகல் 3.09 மணிமுதல் 7.24 மணிவரை நிகழும் என தெரிவிக்கப்படுகின்றது. பிற்பகல் 6.23 மணியளவில் நிலவின் 77 சதவீத பகுதி பூமியின் நிழல் படிந்திருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

## முடிவு...

டன் முரண்பட்ட வெளிநாட்டவர் மன்னிப்பு கோரியதனாலும், தாதிய உத்தியோகத்தருக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கினை மீளப்பெறுவதாகவும் உறுதியளித்ததனைத் தொடர்ந்தே நேற்றைய தினம் முதல் தாதியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் பார்வையாளர் நேரம் முடிந்ததன் பின்னர் உறவினர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது உறவினரை பார்க்க சென்ற போது கடமையிலிருந்த ஆண் தாதியர் ஒருவர் குறித்த உறவினரிடம் உங்களது நேரம் முடிந்துவிட்டது ஆகவே நீங்கள் சென்றுவிட்டு மாலை வந்து பார்க்குமாறு கூறியுள்ளார்.

இந்நிலையில் தாதியர் பேச்சை குறித்த நபர் கவனத்தில் எடுக்காமையை தொடர்ந்து இருவருக்கு மிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து நோயாளரை பார்வையிட வந்த நபரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் தாதியர் தன்னை மிரட்டியதாகவும் தன்னை தாக்கியதாகவும் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து குறித்த தாதியரை பொலிஸார் விசாரணைக்கு என அழைத்து சென்று கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதாக அரச தாதியர் உத்தியோகத்தர் சங்க தலைவர் நற்குணராஜா தெரிவித்தார்.

இதன்பின்னர் குறித்த தாதியர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் உண்மையான குற்றவாளியை விடுத்து தவறு செய்யாதவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனால் உண்மையான குற்றவாளியை கைது செய்யும் வரை தமது போராட்டம் தொடரும் என தாதியர்கள் அறிவித்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்றுத் தொடக்கம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் வழமையான சேவைகள் இடம்பெறும் எனவும் தாதியர்கள் அறிவித்துள்ளனர். (செ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வேலையாட்கள் தேவை
யாழ் நகரிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு வேலையாட்கள் தேவை.
அலுமினிய பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
T.P : 0777 737072 / 021 222 7043
இல. 192, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(3740)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்கு மான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 0767070069
M.Suren (3900)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-4066)










பண்டிகைக்கால விசேட சலுகைகள்
இந்த சலுகை சித்திரை மாதம் 15ஆம் திகதி வரை மட்டும்
220ற்கு மேற்பட்ட உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவைகள்!
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், உணவுப்பொருட்கள், கருவாடு, மருந்து, எண்ணெய் வகைகள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம்
11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கு மிக குறைந்த கட்டணம்.
UK-600/- Canada-900/- Swiss-750/- France-700/- Germany-650/-
மற்றைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் அனுப்பி கொள்ள முடியும்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
➤ 271A k.k.s Road, Jaffna.
➤ 46, Aadiyapatham Road, Thirunelvely
➤ 18, பிரதான வீதி, நெல்லியடி.
➤ பிரதான வீதி, பருத்தித்துறை. (பஸ் நிலையம் முன்பாக)
➤ பிரதான வீதி, சங்கானை 021 222 7835 (ஆசைப்பிள்ளை நகைக்கடை முன்பாக)
(3948)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 20.03.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 57



## எங்கே? எப்போது? விசாரணை!

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. விதானையார் விசுவலிங்கத்தை தவிர மற்றெல்லோரும் ஆலடி மாநாட்டிற்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாடு ஆரம்பமாகியது.

மாநாட்டின் ஆரம்பத்தோடு விதானையார் விசுவலிங்கம் வேர்க்க விறுவிறுக்க ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார். நாசமாப் போனவியள் இந்த நேரம் பார்த்து மின்சாரத்தை தடை செய்யினம். வெயில் கொடுரத்தில மனுசர் என்ன செய்யிறது, ஏது செய்யிறது எண்டு தெரியாமல் ஓடித்திரிய வேண்டி இருக்கு.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறதும் சரிதான். கடும் வெயில், காற்றில்லாத நேரத்தில் மின்விசிறிகளும் வேலை செய்யாவிட்டால் எப்படி இருக்கும்.

**பண்டிதர்:** மின்சாரத் தடைக்குப் பின்னணியில ஏதோ சதித்திட்டம் இருக்கிறதாகக் கேள்வி.

**கங்காணி:** சதித்திட்டமாக இருக்கலாம். நல்லாட்சி என்பதற்காக பலவீனமாக நடந்து கொள்ளக் கூடாது பாருங்கோ. புலனாய்வுத்துறையினர் இது தொடர்பில தகவல்களை அறிந்து வருமுன்னர் காப்பாற்றியிருக்கவேணும். மகிந்தவின்ர அரசாங்கத்தோட ஒப்பிக்க இந்த அரசில பலவீனம் தெரிகிறது.

**விதானையார்:** அரச எண்டால் உசாரா இருக்க வேணும். எடுத்த முடிவை அமுல்படுத்துவது அவசியம். எல்லாவற்றிலும் தாமதமும் தீர்மானமும் எடுக்கிறதில சோம்பலுமாக இருந்தால், ஆட்சி செய்யிறது பெரும் கஷ்டம் என்பதுதான் என்ர கருத்து.

**மூப்பர்:** விதானையார் சொல்லுறது நூறுவீதம் சரி, ஊடகவியலாளர்களுக்கு வரிவிலக்குக் கொடுத்து மோட்டார்சைக்கிள் கொள்வனவு செய்யிறது தொடர்பில மக்கள் தொடர்பாடல் அமைச்சு விண்ணப்பம் கோரியிருந்தது. ஊடகவியலாளர்களும் நம்பிக்கையோடு விண்ணப்பித்து பின்னர் கொழும்பில நடந்த நேர்முகத் தேர்வுக்கும் போன பிறகு இப்ப என்னடா வெண்டால் வரிவிலக்குப் பற்றி ஒரு கதையும் கிடையாது.

வங்கியில கடன் வாங்கி மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்யுமாறு கடிதம் அனுப்பியிருக்கினமாம். நிலைமை இதுவெண்டால் எப்படி என்பதைப் பாருங்களன்.

மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்கு கடன் திட்டம் எண்டால் அதை முதலிலயல்லோ சொல்லியிருக்கவேணும். இப்படியான செயற்பாடுகளாலதான் மக்கள் வெறுப்படையிற கட்டம் ஏற்படுகுது.

எதுவா இருந்தாலும் மின்சாரத் தடை தொடருமாக இருந்தால் நல்லாட்சி மீதான நம்பிக்கை குறைவடையும் என்பது மட்டும் உண்மை.



**வாத்தியார்:** பொதுவில நல்லவர்கள் பலவீனமானவர்களாக இருப்பது பெரியதொரு துரதிர்ஷ்டம்தான். அது சரி விதானையார் ஏன் இன்றைக்கு லேற்றா வந்தனீங்கள்?

**விதானையார்:** இன்றைக்கு வடமராட்சியில வல்லிபுரக் கோயிலுக்குப் போனனான். அங்கயும் பிரச்சினை எண்டு அறிந்தன். எல்லாம் கவலையா இருக்கு.

**கங்காணி:** என்ன? வல்லிபுரக் கோயிலிலும் பிரச்சினையோ.

**விதானையார்:** ஓமோம். யாப்பு விதிமுறைகளுக்கு முரணாக நிர்வாகம் அமைந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. 75 வயதுக்குமேல ஒருவர் தர்மகர்த்தா சபைக்குத் தலைவராக இருக்க முடியாது என்று யாப்புச் சொல்லுதாம். ஆனால் அந்த நடைமுறையை மீறி தர்மகர்த்தா தலைமை இருப்பதாக குற்றஞ்சாட்டி யாழ்ப்பாண அரச அதிபர் வேதநாயகனிட்ட மகஜர் ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டுள்ளதாகக் கேள்வி.

**பண்டிதர்:** என்ன செய்யிறது எங்கட இந்துக் கோயில்களில இருக்கிற பிரச்சினைகளை நினைத்தால் எங்களுக்குச் சமயம் தேவையோ எண்டமாதிரி இருக்கு.

கோயில் வழக்குகள்தான் நீதிமன்றங்களில நிறைய என்று அறிய முடியுது.

**விதானையார்:** கோயில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதி ஆயம் ஒன்றை இந்து சமயத் தலைமைகள் ஏற்படுத்த வேணும். இல்லையெண்டால் கோயில்கள் பிரச்சினைகளுக்குள் அகப்பட்டு தெய்விகத்தை இழந்துவிடும்.

**கங்காணி:** கோயில்களில வழிபாடு செய்யிறதுக்கே ஆட்கள் இல்லை எண்டதாக நிலைமை மாறிவிட்டது. அதிலும் குறிப்பாக எங்கட இளைஞர்கள் கோயிலுக்குப் போறது மிகக் குறைவு.

**வாத்தியார்:** அதுக்காக எங்கட இளைஞர்கள் எல்லோரும் கோயிலுக்குப் போறது குறைவு எண்டோ, கடவுளை வழிபடுவது குறைவு எண்டோ சொல்லிவிட முடியாது.

எத்தனையோ இளைஞர்கள் நிறைந்த கடவுள் பக்தி உள்ளவர்களாக இருக்கினம். யாழ்ப்பாணம் சுந்தர்மடத்தில உள்ள வேதாந்தமடம் (சிவ குருநாத குருபீடம்) அண்மையில ஒரு நல்ல வேலை செய்திருக்குது. மடத்து அடியவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வேதாந்த மடம் அமைந்துள்ள சுந்தர் மடம் குமாரசாமி வீதியைத் துப்புரவு செய்திருக்கினம்.

இப்ப அந்த வீதி தூய்மையாக- வித்தியாசமாக இருக்கிறதைப் பார்க்க முடிகிறது. அத்தோட இது எங்கள் விதி, இதைத் துப்புரவாக வைத்திருப்போம் என்ற பதாகைகளைத் தொங்கவிட்டு காட்சிப்படுத்தியிருக்கினம்.

இதுபோல எல்லோரும் செய்தால் எங்கட விதிகள் எவ்வளவோ துப்புரவாக இருக்கும்.

**விதானையார்:** உண்மையில வேதாந்த மடத்து அடியவர்கள் செய்த முன்மாதிரியான வேலையை அனைவரும் செய்தால் விதிகளில குப்பை கூழங்களைக் கொட்டுவதை உடனடியாக நிறுத்தமுடியும்.

இது எங்கட விதி என்ற உணர்வு முதலில எங்களிட்ட இருக்கவேணும். அப்பதான் விதிகளைச் சுத்தமாக வைத்திருக்க முடியும்.

**மூப்பர்:** விதிகளைச் சுத்தமாக வைத்திருப்பதில் அந்தந்த விதிகளில் இருக்கக்கூடிய இளைஞர்கள் விழிப்படைந்தால் எல்லாம் சரியாக நடக்கும். இப்பதானே எங்களிட்ட எந்தப் பொறுப்பும் இல்லை. விதி எண்டால் அதை உள்ளூராட்சி சபைகள்தான் சுத்தமாக வைத்திருக்க வேணும் என்று நினைக்கிறம். நாங்களும் பங்களிப்புச் செய்தால் எங்கட தமிழ்ப் பகுதிகளில இருக்கிற விதிகள் அனைத்தும் தூய்மைப்படும் என்பதால இது தொடர்பில ஆலடி மாநாட்டில ஒரு தீர்மானம் எடுப்பம்.

(மூப்பரின் கருத்தை ஏற்றுக்கொண்ட ஆலடி மாநாடு அதைத் தீர்மானமாக நிறைவேற்றச் சம்மதித்தது. பண்டிதர் பரமலிங்கம் தீர்மானத்தை வாசித்தார்)

**பண்டிதர்:** ஒவ்வொரு விதியிலும் இருக்கின்றவர்கள் அதைத் தமது விதி என்ற உணர்வுடன் துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்றும் விதிகளைத் துப்புரவாக வைத்திருப்பதை அனைவரும் உறுதி செய்யவேண்டும் என்றும் இது விடயத்தில் ஆலயங்கள், பொது அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள் ஒன்றுசேர்ந்து சிரமதானங்களைச் செய்து விதிகளைத் துப்புரவாக வைத்திருக்கவேண்டும் என்றும் ஆலடி மாநாடு தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

இந்தத் தீர்மானத்தை அமுல்படுத்தி எங்களுக்குத் தெரியப்படுத்தினால் நிச்சயம் அது பற்றி ஆலடி மாநாட்டில தெரியப்படுத்துவம் என்பதையும் அறியத்தருகிறோம்.

**கங்காணி:** அதுசரி பண்டிதர் ஐயா, எங்கட தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளை வைப்பதில் தீவிரம் காட்டப்படுவதாகக் கேள்வி. நல்லாட்சியிலும் புத்தர் சிலையை நிறுவுவதுதான் வேலையெண்டால் இலங்கை மண்ணில எப்பதான் முன்னேற்றம் வருமோ எனக்குத் தெரியாது.

**வாத்தியார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் புத்தர் சிலையை வைப்பதற்கு கடுமையான முயற்சி நடப்பதாகக் கேள்வி.

**பண்டிதர்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில புத்தர் சிலையை வைப்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் ஒருக்காலும் விடாது.

**விதானையார்:** பண்டிதர் ஐயா எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்லுறியள்.

**பண்டிதர்:** தமிழ் மக்கள் பேரவையின்ர கூட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில வைக்கிறதுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் புத்தர் சிலையை வைக்க விடுவினமோ?

தமிழ்மக்கள் பேரவையின்ர கூட்டத்தையே கைலாசபதி கலையரங்கில வைக்கிறதுக்கு எதிர்ப்புத் தெரிவித்த இந்தத் தமிழ்ப்பற்றாளர்கள் எப்படி புத்தர் சிலையை வைக்க அனுமதிப்பினம்.

**மூப்பர்:** சிலவேளை புத்தர் சிலையை வைத்தால்...

**பண்டிதர்:** அரசாங்கத்தோட சேர்ந்த தமிழ்ப் பற்றாளர்கள்தான் இவர்கள் என்பதையும் அரசுக்கு ஆதரவாகத்தான் பேரவைக்கூட்டத்தைப் பல்கலைக்கழகத்தில நடத்த எதிர்த்தவர்கள் என்பதும் தெரியுந்தானே! அதை அந்த நேரம் பார்ப்பம்.

பேரவைக்கூட்டம் தொடர்பில யார் யார் என்னென்ன சொன்னவர்கள் என்பதையும் அவர்களுக்கும் அரச தரப்புக்குமான தொடர்பு பற்றியும் இந்த இடத்தில வெளிப்படையாகச் சொல்லுவம். ஆதாரம் கேட்டால் பதிவுகளைக் காட்டுறது தானே!

இப்படிப் பண்டிதர் கூற ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# இன்னும் எத்தனை குற்றச்சாட்டுக்கள் விசாரணையை முன்னெடுக்க தேவை



## எங்கே? எப்போது? விசாரணை!

இறுதிக்கட்டப் போரில் நடந்த உண்மைகளை வெளிப்படுத்தக் கோரியும் அழிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதி கோரியும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதும் பல போராட்டங்கள் முன்னெடுத்து வருகின்றன.

ஆட்சி மாற்றத்துடன் சர்வதேச நாடுகளின் நிலைப்பாடுகளில் மாற்றங்கள் காணப்படுகின்ற போதும் அரச சார்புடைய தமிழ்த் தலைமைகளின் சுயநலம் மேலோங்கிய நிலையிலும் தமிழரில் பெரும்பான்மையினரின் நிலைப்பாடுகளில் இன்னும் மாற்றத்தை யாராலும் ஏற்படுத்த முடியவில்லை.

போர்க் குற்றச்சாட்டுகள், மனிதப் படுகொலைகள், மானுட வர்க்கத்துக்கெதிரான வன்முறைகள் இலங்கையில் இடம்பெற்றது என்பதை உலகறியச் செய்யும் அதேவேளை அந்தக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல்களும் வலுக்குறையவில்லை.

சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை தமிழர்கள் முன்வைப்பதில் தவறில்லை என்பதை சர்வதேச நாடுகள் நன்குணர்ந்துள்ளன. இருப்பினும் அந்த நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கைகள் தமிழரின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க இடமளிக்கவில்லை.

இலங்கையில் நீடித்த மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தம் தமிழினத்துக்கெதிரானதாக மாற்றங்கொண்டு மனிதப் படுகொலை வன்முறைகளின் உச்சத்தை தொட்டதால் போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

2009 ஆம்ஆண்டுமே மாதம் 18 ஆம் திகதி தமிழரின் காவலரணாகயிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனித்ததைத் தொடர்ந்து மேலும் வன்முறைகள் அதிகரிக்கும் போக்கே காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை அழிக்கும் நோக்குடன் திட்டமிட்ட போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் தமிழர் தாயகத்தை நோக்கி நகர்த்தப்படுகின்றனவா? என்ற பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சட்டநடவடிக்கைகள் மூலம் சமூகவிரோதச் செயற்பாடுகளை ஒடுக்க பல வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும்கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களின் பொதிகளும் நாளுக்கு நாள் வடக்கில் மீட்கப்பட்டு வருகின்றன.

இன அழிப்புக்குள்ளான தமிழினம் இழப்பதற்கு ஒன்றுமில்லாத கையறு நிலையிலுள்ள இக்கட்டான சூழ்நிலையில் படுகுழி நோக்கி ஒட்டுமொத்த தமிழினத்தையும் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை போதைப்பொருட்கள் மீட்புச் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழினத்தின் நிலை இதுவாக நீண்டுகொண்டு செல்கையில், தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றுக்கு தெரிவாகி நல்லாட்சி அரசின் தலைவர்களால் அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்ட சரத்பொன்சேகா தனது கன்னியுரையின் போது ராஜபக்ஷ குடும்பத்தை நிலைகுலைய வைத்துள்ளார்.

ஏற்கனவே பணச்சலவைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 40 நாட்களுக்கு மேலாக சிறையிலடைக்கப்பட்டிருந்த யோஷித ராஜபக்ஷ அண்மையில்தான் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யோஷிதவின் கைதுடன் இனி என்ன நடக்குமோ என்ற அங்கலாய்ப்பிலுள்ள ராஜபக்ஷவினருக்கு சரத்பொன்சேகா ஏற்படுத்தியுள்ள நெருக்கடி எதிர்கால அரசியலை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

மகிந்த ஆட்சியில் தமிழினம் பட்டபாடு வார்த்தைகளால் கூறிமாளாது. இந்நிலையில் இலங்கையின் வடபகுதியில் தமிழினத்தை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட கொடிய யுத்தத்தில் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக நாளுக்கு நாள் குற்றச்சாட்டுக்களும் அதிர்ச்சியளிக்கும் தகவல்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அரசோ இன்னும் எத்தனை குற்றச்சாட்டுக்கள் வந்தாலும் பரவாயில்லை அல்லது இன்னும் பல குற்றச்சாட்டுக்கள் வெளிவர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காலத்தை கடத்தும் வேலையிலேயே ஈடுபட்டுள்ளது.

அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்பட்ட சரத் பொன்சேகா, மகிந்த தரப்பை பழிக்குப் பழிவாங்கும் நோக்குடன் இறுதிப்போரில் நடந்த தவற்றை வெளிப்படுத்துவதாக பல குற்றச்சாட்டுக்களை கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டம்மான் போன்றவர்கள் தொடர்பாகவும் கருத்துரைத்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர்கள் சிலர் வாக்குறுதியளித்துள்ளனர்.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சரத் பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மௌனமாகயிருந்து வருகின்றனர்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உள்நாட்டில்விசாரணைகளை அரசு முன்னெடுக்கும். சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் அரசு அனுமதிக்காது என்று ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுவிட்டதாக 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி மகிந்த அரசு அறிவித்த காலம் தொட்டு இற்றைக்கு ஏழாண்டு காலமாக போரில் நடந்த பல உண்மைச் சம்பவங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் வாயிலாகவும் முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை உள்ளிட்டவர்களின் அறிக்கைகள் ஊடாகவும் பல அதிர்ச்சிச் சம்பவங்கள் வெளியுலகிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதுதவிர போரை வழிநடத்திய பொன்சேகா போன்றவர்களும் இறுதிப்போரில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருக்க வாய்ப்புள்ளது என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

வெள்ளைக்கொடி விவகாரம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே வெளியாகிய போதெல்லாம் அவற்றை ஒரு பொருட்டாக கருதாத இலங்கை அரசு இன்னும் எத்தனை குற்றச்சாட்டுகள் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்துள்ளது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இறுதிப் போரில் நடந்த உண்மைகளைக் கண்டறிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று வாக்குறுதியளித்துள்ள அரச தரப்பினர் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பாகவும் புலிகளின் முக்கிய தளபதி பொட்டம்மான் தொடர்பாகவும் சரத்பொன்சேகா எழுப்பியுள்ள கேள்விக்கு விடையளிக்க முற்பட வேண்டும்.

மகிந்த அரசாங்கம் உண்மையைக் கண்டறிவதற்கு பதிலாக உண்மையை மூடிமறைக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை மைத்திரி-ரணில் கூட்டு அரசும் முன்னெடுக்காது நல்லாட்சியை சொல்லாட்சியுடன் நிறுத்திவிடாது செயற்படுத்த வேண்டும்.

போர்க்குற்றங்களைப் புரிந்தவர்கள் இனங்காணப்பட்டு உரிய தண்டனைகள் வழங்குவதோடு அழிக்கப்பட்ட தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா போன்றவர்கள் இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை 40 ஆயிரத்திலிருந்து 23 ஆயிரத்துக்கு குறைத்து மதிப்பிடுவதுடன் புலிகள் தான் கொல்லப்பட்டனர் என்று கூறி போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களில் தனக்கு சாதகமானவர்களை காப்பாற்றவும் அரசிற்கு நெருக்கடியைக் கொடுக்காமல் உண்மையை மூடிமறைக்கவும் முற்படலாம்.

எனவே போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உள்ளக விசாரணைப் பொறிமுறையை உதறித்தள்ளிவிட்டு சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணைக்கு இலங்கையில் இடம்கொடுக்க வேண்டும்.

உண்மையான குற்றவாளிகளை இனங்காண்பதற்கும் பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு நம்பிக்கைக்குரிய அரசாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் நல்லாட்சி அரசுக்கு உள்ள ஒரேவழி அதுவே.

காண்டீபன்




# அன்பு வேணும்...

வள்ளியூரில் பெரும் பணக்காரர் சூரியகாந்தன் என்பவர். அவரிடம் பத்து வருடங்களாக மிகவும் விசுவாசமாக வேலை செய்தான் சந்திரன் என்பவன். திடீரென்று ஒருநாள் அந்த வேலையை விட்டுவிட்டு வேறு ஒருவர் வீட்டில் வேலைக் குச் சென்றான் சந்திரன். அங்கே சம்பளம் குறைவு.

ஒருநாள்- சந்திரனை சந்தித் தான் அவனது பால்ய நண்பன் தனஞ்சி.

"என்னடா இது... எங்க மொதலாளி, மொதலாளி என்று எதற்கெடுத்தாலும் உயிரை விடுவ. இப்ப என்னடான்னா, அந்த வேலையை விட்டுட்டு, அதை விட குறைவான சம்பளம் தரும் இந்த வீட்டுக்கு வந்துட்ட... அவனவன் அதிக சம்பளம் தரும் வேலைக் குத்தான் போவான். நீ என்னடான்னா இப்படி இருக்க... என்ன விஷயம்?" என்றான்.

"முதலாளிக்கு அடிபட்டப்போ, அவருக்காக ஆஸ்பத் திரிக்கும், வீட்டுக்குமா நாயா அலைஞ்சிருக்கேன். முதலாளியம்மாவுக்கு விபத்து நடந்த போது படாதபாடு பட்டிருக்கேன். ஆனா, போன மாசம் எனக்குக் காய்ச் சல் வந்தப்போ, டிரைவரை விட்டு தர்மாஸ்பத்திரி யிலே சேர்த்துட்டாங்க. ஒரு தடவைகூட யாரும் வந்து பார்க்கலை. டிரைவர்தான், ரொட்டியும் பாலும் வாங் கித் தந்தார்.

"முதலாளி மகனுக்கு சளிபிடிச்சா எனக்குத் தொத் தாது. தூக்கித் தோளிலே தட்டித் தூங்க வைப்பேன். முதலாளிக்கு கண்வலின்னா எனக்குத் தொற்றாது. முகத்தைப் பார்த்துப் பேசணும். ஆனா, எனக்குக் காய்ச்சல் வந்தா தொத்திக்குமாம். என்னாப்பா நியாயம்? அவங்களிலே ஒருத்தரா பழகினதுக்கு இதுவா பலன்? போதும்பா! ஆயிரமாயிரமாகக் கொட்டிக் கொடுத் தாலும் அன்பில்லாத இடத்துலே வேலை செய்ய முடியாது. இது ஆபீஸ் வேலையில்லே... மனுஷாளோட மனுஷாளா ஒத்தாசை பண்ற வேலை. இதுக்கு மனிதாபிமானமும், அன்பும் தான் வேணும்,"" என்றான் சந்திரன். அவன் சொல்வதில் உள்ள நியாயத்தை உணர்ந்தான் நண்பன். வேலைக்காரர்களையும் மனிதர்களாய் நினைக்க வேண்டும்.





## பாசக்காரப் பயபுள்ள

ஒரு பூனை 3000 மைல்களுக்கு அப்பால் சென்றுவிட்ட தன் எஜமானனை நடந்தே சென்று தேடிக் கண்டுபிடித்த அதிசயத்தைக் கேளுங்கள்.

கலிபோர்னியாவிலுள்ள பஸடெனாவைச் சேர்ந்தவர் "சார்லஸ் பி.ஸ்மித்" என்பவர். இவர் "டாம்" என்ற பூனையை வளர்த்தார். இவர் பிளோரிடாவைச் சேர்ந்த ஸெயின் பீட்டர்ஸ் பர்க்கில் முதலில் வசித்து வந்தார்.

1949 இல் அங்கிருந்து பஸடெனாவிற்குக் குடும்பத்துடன் போய்விட்டார். போகும் போது டாமை நண்பர்களின் பாதுகாப்பில் விட்டுச் சென்றார். இரண்டு வாரங் கழித்து நண்பர்களிடமிருந்து டாமை காணவில்லை என்று ஸ்மித்திற்கு ஒரு கடிதம் வந்தது.

ஆகஸ்ட் மாதம் 1951 ஆம் வருடம், 1 ஆம் தேதி ஸ்மித் தன் வீட்டு கதவினருகில், "மியாவ்" சத்தம் கேட்டுத் திறந்தார். வாசலில் நின்று கொண்டிருந்த டாம் குபீரென்று தன் எஜமானனின் மீது பாய்ந்து ஏறிக் கொண்டது.

தன் சொந்த வீட்டையும், சொந்த எஜமானரையும் அடைந்த டாம் 3 வாரம் வரை எழுந்திருக்காமல் தூங்கிற்று. அதன் உரோமம் சூரிய வெப்பத்தினால் அப்படியே உதிர்ந்து போய்விட்டது. பாதங்கள் கொப்பளித்து வெடித்துப் போயிருந்தன. என்ன கஷ்டப்பட்டாலென்ன? டாம் இரண்டு வருடம் ஆறு வாரங்கள் நடந்து தன் எஜமானனைக் கண்டுபிடித்து விட்டதே!

வாவ்... என்னவொரு பாசம்.




☐ BAT ☐ BET

☐ NEXT ☐ NEST

☐ IRON ☐ IRAN

☐ IGLU ☐ IGLOO

கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயரை சரியான எழுத்தோடு கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.





வியாசர் பதில்கள்
அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்
வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
SMS (குறுந்தகவல்) 021 567 1532



## பிச்சைக்காரன் வெற்றிப்படமா?

**தீபன் — கரவெட்டி**

**சரத் பொன்சேகாவின் புதிய மாற்றத்திற்கு காரணம்?**

உண்மை என்பது எப்போதுமே புதைந்து விடுவதில்லை. அது மண்ணில் புதைந்து கிடக்கும் விதைபோல நீர் கண்டவுடன் முளைத்தெழுந்து விடும். நாம் பட்டபாடுகளுக்கு எல்லாம் பதில் ஒன்றை தர ஐ.நா. தவறினாலும் இறைவன் தரு வான். இது சர்வ நிச்சயம்.

**கௌசிதாஸ் — குப்பிளான்**

**இலவசக் கல்வி பற்றி?**

இன்று அறிஞர்கள் பலர் எம் சமூகத்தில் இருக்கக் காரணமாகிறது.

**ரத்னகுரு — அல்வாய்**

**பிரபாகரனின் முடிவுதான் என்ன?**

பிரபாகரன் இருக்கிறாரோ இல்லையோ என்பது சத்தியமாய் எனக்குத் தெரியாது. ஆனால் பெரும்பான்மை அரசியலில் தேவைக் கேற்றாற்போல் இருக்கிறார் - இல்லை என தமது வண்டியை ஓட்டுகிறார்கள் என்பது மட்டும் உண்மை.

**ஜெனீபா — கொக்குவில்**

**அம்மாவின் அன்பின் அர்த்தம் என்ன?**

இந்த உலகில் அந்த ஜீவன் தரும் அன்பு மட்டும் தான் எந்த எதிர்பார்ப்பும் இல்லாதது. ஒரு வருடம் வெளியூர் போய் வீடுவந்து பாருங்கள். வீட்டிலுள்ளவர்களின் எதிர்பார்ப்புகள்.
அப்பா – வேலை எப்படி?
அண்ணா – சம்பளம் ஒழுங்கா தந்தவங்களா?
தங்கச்சி – எனக்கு என்ன வாங்கிவந்தனி?
மனைவி – சாமான்களை கெதியா இறக்கி அறைக்குள்ள பூட்டவேண்டும்.
அம்மா – வாடா ராசா ஏன் இப்படி முகமெல்லாம் கறுத்து மெலிஞ்சு போனாய்?

**வினோத் — கொக்குவில்**

**கணவன் மனைவி மேல் வைத்திருக்கும் அன்பை எப்படி கண்டுபிடிப்பது?**

பாலில் கலந்த தண்ணீரைப் போலத்தான். அளவாகக் கலந்தால் தெரியாது அதிகமாய் கலந்தால்தான் கண்டுபிடிக்க முடியும்.

**கவிநிலா — கொக்குவில்**

**காதலா, நட்பா பெரிது?**

காதல் கடலைப் போல. செல்லும் வழிதவறி விட்டால் அவ்வளவுதான். தண்ணீருக்குள்ளேயே நிற்போம். தாகமெடுக்கும் ஆனால் குடிக்க இயலாது. நட்பு தரையைப்போல. தவறிவிட்டால் ஏதோ ஒருவழியில் செல்லுமிடத்தை அடைந்துவிடலாம். உலகில் நிலப் பரப்பை விட கடல்பரப்புதானே அதிகம்.

## பிரபாகரனின் முடிவுதான் என்ன?

**நிக்ஷன் — உடுப்பங்குளம்**

**இருவருக்குள் காதல் எப்படித் தொடங்கும்?**

உண்ண மறந்திட உணர்வுகள் ஒன்றிட அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் இது அந்தக் காலம். உன்னை மறந்து உறவெல்லாம் மறந்து பேஸ்புக்கில் அவனும் சட் பண்ணினான் அவளும் சட் பண்ணினாள். இது இந்தக் காலம்.

**டெனிஷன் — வளலாய்**

**அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்குமா?**

அதை தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தான் கேட்க வேண்டும். இப்படிப் பதில் எழுதும் போது யாழ் எப்.எம்-ல்
“எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே...”
எனும் பாடல் ஒலித்தது. நான் சிரித்துக் கொண்டே மனதை நொந்து கொண்டேன் அந்த அப்பாவிக் கைதிகளின் நிலையை எண்ணி.

டாக்டர் என் மாமியாருக்கு இப்போ உடல்நிலை எப்படி இருக்கு?
மெகா சீரியல் மாதிரி இருக்கு!
புரியலையே... இழுத்துக்கிட்டே இருக்கு...



**செந்துஜா — வளலாய்**

**ஸ்ருதிஹாசனுக்கு எப்ப கல்யாணம்?**

அவர் கடந்த வருடம் ஒரு பேட்டியில் திருமணம் செய்யாமல் குழந்தை பெற்றுக் கொள்வது தவறு இல்லை எனச் சொன்னார். அதை நீங்கள் படிக்கவில்லை போல.

**நிதர்சன் — சாந்தைபுரம்**

**விஜயின் தெறி எப்ப வரும்?**

சித்திரை 14-ல் தெறி வெளிவருகிறது. இதனால் பல நடிகர்களின் நித்திரை போயுள்ளது.

## விஜயின் தெறி எப்ப வரும்?

**துலக்ஷன்**

**ஒரு பெண்ணிடம் எப்படி காதலைச் சொல்லலாம்?**

பூக் கொடுக்கலாம், புளியம்பழம் கொடுக்கலாம், வாய் கொடுக்கலாம், வாங்கிக் கட்டலாம்.

நல்லா வாயில வருது... உன்னையெல்லாம் பெத்தாங்களா? செஞ்சாங்களா?

**கிருஷா — வரணி**

**வெயில் வெக்கையின் கொடுமை தாங்க முடியலப்பா?**

கடந்த வருடம் ஒருகிழமையா மழை ஓயாமல் ஊத்தினப்ப சீ... ஆயிரம் நாள் வெயிலைத் தாங்கலாம் ஒருநாள் மழையைத் தாங்க முடியாது என்று பழமொழி கூறியது நீர் தானே.

**நிவேத் — உடுப்பங்குளம்**

**காதலிக்கும் போது காதலர்களின் எதிர்பார்ப்பு எப்படி இருக்கும்?**

காதல் ஐஸ்பழம் போல. அந்த பழத்தை உருக முன்னால் எப்படியாவது குடித்து முடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புதான் காதலர்களிடம் இருக்கும்.

ஆனால் அது நடப்பதில்லை. இறுதியில் ஐஸ் உருகிவிட அவன் அல்லது அவள் கையில் குச்சிமட்டும் மிஞ்சியிருக்கும்.

**நேசன் — மல்லாவி**

**ஒருவன் செய்யும் தவறு யாரை சேரும்?**


அது அவன் செய்யும் தவறைப்பொறுத்தது. உனது உடலிலேயே இருந்து உனது இரத்தத்தை உறிஞ்சும் நுளம்பை நீ அடிக்காமல் உஸ்... உஸ்... என்று துரத்தியா விடுவாய்?

**லயன்சன் — அல்வாய்**


**பிச்சைக்காரன் வெற்றிப்படமா?**

விஜய் அன்ரனியின் படம் என்றாலே வித்தியாசமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கிவிட்டார்.

படத்தின் தலைப்பிலேயே 50% வெற்றியை நிர்ணயித்துவிடுவார். பிச்சைக்காரன் 8 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளது. அவரின் அடுத்த படம் பிசாசு



# கவிதைக் கலசம்



### மதங்களும் மனிதங்களும்

வரையறைகளும்
வேண்டாம்
வாதங்களும்
வேண்டாம்...
வட்டத்தைவிட்டு
வெளியே வா...
உனக்கும் எனக்கும்
இடைவெளிகள்
அதிகமில்லை...
உன் மதமும்
என் மதமும்
ஒன்றுதான்...
மனிதம் பூக்கும்
மனங்களில்
இனியும் வேண்டாம்
வன்முறையின் சாயல்கள்
வக்கிரங்களுக்கு
முழுக்கிடுவோம்
வாழ்வின் வரையறைகளுக்கு
முக்காடிடுவோம்
மாண்டுபோன
மதக்கொள்கைகளை
மறுசீரமைப்போம்
மனிதத்தையும்
மதங்களையும்
மனதால்
பூஜிப்போம்
மடைமைகளை
மலையேற்றுவோம்
மாற்றங்களை
நிலையாக்குவோம்..
வட்டத்தை விட்டு வெளியே வா

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

### காற்றோடு கலந்து சென்று

என்னைக் காணவில்லை இன்று
தேடிப்பார்க்கின்றேன் காற்றோடு சென்று
என் உணர்வுகள் தனிமையில் இன்று
அவளைக் கண்ட அக்கணமதில் இருந்து
எனில் சுனையாக சுரக்கும் கவிகள் இன்று
அவளை ஸ்வரமாக இரசிப்பதற்கென்று
நான் வாடுகிறேன் தேடுகிறேன் இன்று
அவளை வர்ணிப்பது எவ்வாறென்று
வார்த்தையிலடங்கா வதன நிலவும்
வயலினைக் கொண்ட இடையழகும்
வாய்திறவா அவள் வார்த்தைகளும்
வடிவழகாய் வார்த்தையோர மச்சமும்
செவ்விதழ் விரிந்த சிரிப்பும்
ஜாடை காட்டும் கடைக்கண் பார்வையும்
நாட்டியமாடும் அவள் நயனங்களையும்
நானறிந்த மொழிதனில் வர்ணித்திட
வரையெல்லாம் தாண்டி
வான்மேகத்தையும் தோண்டி
தேடுகிறேன் இன்று
காற்றோடு கலந்து சென்றுமே

**ஞா.கட்டைக்கவிதன்**
**நெடுந்தீவு**

### நீ வருவாய் என!

முன்னோக்கி செல்கையிலே
முழு நிலவாய் நீயிருந்தாய்
அமாவாசை நேரமதில்
பௌர்ணமியாய் நீயிருந்தாய்
சுற்றத்தார் அன்பையெல்லாம்
துச்சமாக நீ தெரியவிட்டாய்
தேவி உன் வரவுக்காய்
தூக்கமின்றி இருக்கவிட்டு
ஆனந்தசயனமது அன்பே
நீயும் கொள்ள
அலைபாயும் மனதுடனே
அன்புக்காய் நானும் இங்கே
சுதந்திரமாய் இருந்த என்னை
சுத்தமாய் சிறையெடுத்தாய்
கண்மூடும் நேரமெல்லாம்
கண்ணெதிரே வந்து நின்றாய்
தொலைதூர நிலவு நீயும்
என் தொடு தூரம் வருவதெப்போ
வழிமீது விழிவைத்து
வருத்தமின்றிக் காத்திருப்பேன்

**எம்.ஆர்.கலீபன்**
**புத்தூர் கிழக்கு**

வெறுப்புக்களுக்கு உன்னை
பழக்கப்படுத்துவதை நிறுத்து
நினைப்புக்களை என்றும்
நல்லதாய் நினை
நடப்பவற்றைச் சிந்தி
நடந்தவற்றை மறந்து
நடக்கும் என நம்பு
கிடைக்கும் என்பது கிடைக்கும்
எனவே
வெறுப்புக்களை விட்டுத்தள்ளு
சிரிப்புக்களுக்குள்
உன் வாழ்வு சிறகடிக்கும்

மாவை. நா.கஜேந்திரன்

### இப்படியுமா?

இப்படியும் நடக்குதிங்கே
இளைஞனை குழந்தையாக்கி
குழந்தையை கொன்றுவிட்ட
கொடிய விஷப்பாம்பு கூறுவது சரியா
உடல் முழுதும் விஷம் பூசி
உயிர் பறிக்க துணைபுரிந்து
உருமறைப்பு செய்து கொண்டு
உலகை ஏமாற்றி
உலையிடும் கூட்டங்கள்
கூறுவது சரியா
இரத்தம் சிந்தி
இரையாகிப் போனதுண்டு
இதைக்கூட
மறுப்பறிக்கை விட்டுவிட்டு
மரத்துக்கு மரம்
தாவும் மந்திகளாய்
ஜெனனித்த மானுடமே
இப்படியுமா உங்கள் செயல்

**இளவரசன்**
**ஒட்டுசுட்டான்**

# மௌனத்தின் தேடல்- 293



### நம்பிக்கையில் காத்திருக்கிறேன்

அன்பு எனும் பொக்கிஷத்தை
இரு கரம் பற்றி
மார்போடு அணைத்து
வாய்பேசா ஜீவனுடன்
மழையோ! வெயிலோ!
என் பயணத்தில் தடையில்லை
கரைசேரா ஆசைகளுடன்
காத்திருக்கின்றேன்– என்
வாழ்க்கையின் புதிருக்கு
காலம் ஒருநாள்
விடை சொல்லும் என்ற
நம்பிக்கையோடு...

*ச.அகல்யா*
*சண்டிலிப்பாய்*

### வாக்குறுதிகள்

நிலத்தில் பேறாக
வானத்தின் தூறல்
ஆட்டின் மேய்ச்சலுக்கு
இடைஞ்சலாக
விடுபடாத நிலம்
அகதி வாழ்வு தந்த
ஆறாத மனங்களுக்கு
வழங்கும் வாக்குறுதிச் சிதறல்களில்
தெறிக்கும் காலக்கேடுகளை
இறப்பர் போல் இழுபடும்
இன்னல் வாழ்வு...!

*அராலியூர் சோ.சிவகுமாரன்*

### ஆக்கத்தை அழித்திடாதீர்

ஆக்கிட ஆயிரம் முயற்சிகள் நான்
அழித்திட ஆயிரம் முயற்சிகள் நீ
ஆக்கத்தை அழித்திடும் ஆருயிரே
உன்னையும் அழித்திட காத்திருப்பர்
எத்தனை இன்னல்கள் நேரினும்
ஆக்கத்தை அழித்திட எண்ணாதீர்

*நா.தளையசிங்கம்*
*கொக்குவில்*

### மறியும் இரையாகிடும்

மாரி பொழிகிறது மறியும் நனைகிறது
மாலையும் கருகுகிறது
மதி கொண்ட மானிடனே
காரிருள் சூழமுன்
மனைநோக்கியோடு மறியுடன்
மறந்திடின் மறியும் இரையாகும்
நம் மானிடர்க்கு

*சந்நிதி*
*கதிர்ஷன்*

### காலமாற்றம்

பட்டப்பகலில் வெளியில்
மேயவிட்ட ஆட்டைக்கூடத்
திட்டமிட்டுப் பிடிக்கின்றனர்
நவீனரக திருடர்கள்
போரொன்று வந்த பின்பு நாட்டில்
அராஜகம் தலை தூக்கி நிற்கிறது
கொலையும் கொள்ளையும் பலாத்காரமும்
நிலை கொண்டு நிற்கிறது மண்ணில்
பண்பும் பாசமும் கலாசாரமும்
நாசமாய்ப் போகிறது இன்று

துரை
தென்மட்டுவில்

### தெய்வீகம்

பால்தரும் ஜீவன்
பாசம் தரும்
தாய்போல் என்று
கிருஷ்ணரே
இடையர் குலத்தில்
வளர்ந்து அன்பு
பெறப்படும் போது
கொடுக்கப்படவும்
வேண்டும் அப்போதுதான்
தெய்வீகம் இருக்கும்
என்று விளக்கினார்

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

### இயற்கையின் கருணை

வரண்ட நிலமாகிய
இருண்ட கண்ட
ஆபிரிக்க நாடுகளிலும்
திரண்ட நீரலைகளாய்
பெய்துவிடு மழையே!
ஜீவராசிகள் உயிர்
குளிர்ச்சி பெற...!

*சி.சுகிர்தமலர்*
*உரும்பிராய்*

### புகார் மழை

உடலும் கூட பஞ்ச
பூதங்களின் சேர்க்கைதான்
இதில் உலகைப் போல்
நீரின் அளவே யதிகம்
உயிரினங்களைப் போல
பயிரினங்களின் வாழ்விற்கும்
இது வரப்பிரசாதமாகும்
இச்சூழ்நிலையில்
மேயப்போன ஆட்டை
தேடிப்போன மகனும்
காணாமற் போனதால்
கண்டுபிடித்துத் தரும்படி
குறைகேள் குழுவிடம்
முறைப்பாடுகள் பெருகினாலும்
இவையின்றும் நிலுவையில்

*க.நாகராசா*
*நுணாவில்*

# மௌனத்தின் தேடல் –294



**அன்பு வாசகர்களே !**

*உங்கள் எண்ணத்தில் தோன்றும்*
*கவிதைகள் மற்றும் வியாசர்*
*பதிலுக்கான கேள்விகளை*
*ஆசிரியர்*
*'மௌனத்தின் தேடல்'*
*சங்குநாதம்*
*இல3,2ம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு 23.03.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.*

*குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.*

*-ஆசிரியர் -*

# தொடரும் சமூகவிரோதச் செயல்கள் பிள்ளைகளின் எதிர்காலம் யார் கையில்?

உலகத்தில் முதுமை வாய்ந்த தமிழர் பண்பாடு போற்றுதற்குரியது. உலகிலுள்ள அனைவரும் எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் வியந்து போற்றுகின்ற தன்மை இப்போது காணப்படுகிறது. உறவுமுறைகள், பண்டிகைகள், விழுமியங்கள் என்று எமது கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை தொடக்கம் கல்வி, வீரம் போன்றவற்றை வியப்போடு திரும்பிப் பார்க்கின்றது இன்றைய உலகு. அதிலும் மிக முக்கியமாக இளையவர்கள் வயதில் மூத்தவர்களுக்குக் கீழ்ப்படிகின்ற உத்தமம் எமது கலாசாரத்தில்தான் இழையோடிக் காணப்படுகிறது என்பதை உலகிலுள்ள பிற கலாசாரங்களும் பார்த்துக் கற்கின்ற அளவுக்கு எம் முன்னோர்கள் எமது பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்துத் தந்துள்ளனர். அந்தந்த வயதிற்குரியவர்கள் தமக்குரிய பொறுப்புணர்ச்சியில் இருந்தும் விலகாத தன்மை இன்றுவரை எமது பண்பில் தொடர்ந்தும் வருகின்றது என்றால் மிகையானதல்ல.

இத்தகைய பெருமைகளெல்லாம் ஒருபுறமிருக்க இன்றைய காலகட்டத்தில் சில எமது பண்பாட்டிற்கு முரணான விடயங்கள் தமிழ்க் கலாசாரத்திற்கும் தமிழர் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் விரோதமாகவும் கொடிய சவாலாகவும் அமைகின்றது. அவை எமது கலாசாரத்தின் குறிப்பாக கல்விக் கலாசாரத்தின் எதிர்கால அச்சத்தை உண்டு பண்ணு கின்றது.

எங்கே செல்லும் இந்தப் பாதை; இதை யாரோ யாரோ அறிவாரோ? என்ற சினிமாப்பாடல் இன்றைய தமிழ்க் கலாசாரத்தின் நிலைமைக்கு எதிர்வு கூறுகின்ற வரிகளாகுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கடந்து வந்த காலங்கள் கற்றுத்தந்த பாடங்கள் அத்தனையையும் இன்றைய சமூகம் மறந்துவிட்டது போல. போர் வரலாற்றின் போது கல்விதான் எமது ஒரே ஒரு சொத்து. அதுவென்றால் மட்டும்தான் தமிழர்கள் நாம் இந்நாட்டில் நிலவுகைக்குரிய இனமாக முன்னேறமுடியும் என்ற எண்ணம் ஒவ்வொருவர் மத்தியிலும் நிலை பெற்றிருந்தது. இப்போது காலமாற்றமா? கலிமாற்றமா? தெரியவில்லை. கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் மத்தியில் தான் அதிகளவு விரும்பத்தகாத பொருத்தமற்ற பழக்கவழக்கங்கள் வேர் விட்டுள்ளன.



சினிமாப் பாணியில் அண்மையில் தட்டா தெருவில் இடம்பெற்ற சம்பவம் மாணவர்கள் தொடர்பில் சமூகத்தின் அச்சத்தை வலுவூட்டியுள்ளது. இன்றைய மாணவர்கள் நாளை தமிழ்ச் சமூகத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள் என்பதே அவ் அச்சம். ஏனென்றால் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் அத்தகையது. கடந்த காலங்கள் எமக்கு வலிகளைத்தான் தந்தன. இப்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள சுமுகமான சூழல் ஓரளவுக்கு எமதளவில் நாம் வலிமைகொள்ள ஏதுவானதாக உள்ளது.

ஆகவே நாம் எமது முன்னேற்றத்தில் அதிகளவு பிரயத்தனத்துடன் எமது தடங்களை நகர்த்தலாம். எமது மாணவர்கள் சுயாதீனமான தமது கல்விச் செயற்பாடுகளில் பூரண கவனம் செலுத்தமுடியும் என்ற எம் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைகளுக்குத் தடையாக அமைந்துவிடுகிறது தட்டா தெரு வாள்வெட்டுச் சம்பவம் போன்ற நிகழ்வுகள்.

எமது நிலை அறியாதவர்களா? அவர்கள். நாம் இதற்காகத் தானா எண்ணற்ற வலிகளைக் கடந்து வந்தோம். இப்போதும் ஆறாத வடுக்களாய் எம்மைப் போன்ற எத்தனையோ உறவுகள் அடையாளம் இன்றிப் போனார்களே? அவர்களுக்காகச் செய்கின்ற உபகாரம் இதுதானா? இத்தகைய கேள்விகளுக்கு இச்சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் எத்தகைய பதில்களைச் சொல்ல விளைவார்கள்? முடியாது. ஏனென்றால் அவர்கள் அவர்களாக இல்லை. தற்போது எம் மத்தியில் புதுமையான கலாசாரம் ஒன்று உருவாகி வருகிறது. அது எந்த நோக்கத்துடன் உருவாக்கப்படுகிறது? அல்லது மாணவர்கள் எவ்வாறு அதன்பால் கவரப்படுகிறார்கள்? என்பது மாயையாகவே உள்ளது. ஆனால் அது எமது இனத்தின் நன்மைக் கானது அல்ல என்பது திட்டவட்டம்.

நாம் இப்போது முக்கியமான கட்டத்தில் உள்ளோம். எமது இனத்தை இந்நாட்டில் கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் எமது இருப்புக்களை நிலைநாட்ட வேண்டிய தேவைப்பாடுடையவர்களாக உள்ளோம். ஆகவே இவ்விடயத்தைப் பொருத்தமான முறையில் இம்மாணவர்களுக்கு உணர்த்த வேண்டியவர்கள் யார்?

பூனைக்கு மணி கட்டுவது யார்? என்பது போல எமது சமுதாயத்தின் தேவைக்கு முரணாகத் தடம் மாறிச் செல்லும் மாணவ சமுதாயம் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார்? என்பதுதான் இவ்விடத்தில் எழுந்துள்ள கேள்வி.

மாணவர்களின் கடிவாளம் யார் கரங்களில் உள்ளது? அவர்கள் நெறி பிழைத்தால் கவனிக்க வேண்டியவர்கள் யார்? முற்று முழுகாக [illegible] பொறுப்புக் கூறவேண்டியவர்கள் பெற்றோர்களே! இதற்கு மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இருக்கமுடியாது.

அதனால் தான் கவியரசர் எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே ; அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்று பாடினார். அவரது காலத்தில் பிள்ளைகள் தமது நேரத்தின் பெரும் பகுதியைத் தாயுடனேயே செல வழித்திருந்தால் அது அன் றைக்குப் பொருந்தியது அந்த வரிகள். ஆனால் இன்றைய காலத்தில் அப்பிள்ளை சார்ந்த குடும்பத்திற்கும் பொருந்துகிறது. எமது மத்தியில் இலட்சக் கணக்கான மாணவர்கள் உள்ளார்கள். அவர்கள் எல்லோரும் பிழையானவர்களா? இல்லை விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் நெறி தவறுகின்றனர் என்றால் அவர்கள் வீட்டிற்கு அடங்காதவர்களாகவோ அல்லது பெற்றோர்களால் வழிநடத்தப் படாதவர்களாகவோதான் இருக்கமுடியும். இவ்விடத்தில் சமுதாயத்தையோ அல்லது பாடசாலைச் சமூகத்தையோ கடிவதென்பது பொருத்தமற்றதாகும்.

ஒரு பாடசாலையைத் திறவுங்கள்; ஆயிரம் சிறைச் சாலைகள் மூடப்படும் என்று எம்முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளனர். ஆனால் கல்லூரி மாணவர்களே இன்றைக்கு சிறைச் சாலைகளுக்கு அனுப்பப் படுவதென்பது அவர்கள் சார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாகவே அமையும்.

காரணம் எதுவாக இருப்பினும் இதற்கான முழுப் பொறுப்புக்கூறலும் பெற்றோர்களிலேயே தங்கும். அவர்கள் பொருத்தமான வேளைகளிலே தம் பிள்ளைகளின் செயற்பாடுகளை, அவர்களது கல்விச் செயற்பாடுகளை, ஒழுக்காற்று விடயங்களை முறையாகக் கண்காணித்து வருவார்களேயானால் சாதாரண பிள்ளைகளைப்போலவே ஒவ்வொரு பிள்ளைகளையும் உருவாக்க முடியும் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

தமிழர்களின் எதிர்காலம் இருப்பு என்பது எம் கல்வியின் பலத்திலேயே உள்ளது. அதுதான் எம்மிடத்திலுள்ள நிலையான சொத்து. அவ்வாறிருக்கையில் இதற்கு முரணான மாணவர் குழுக்களின் உருவாக்கம் ஏனைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் பாதகமாக அமைந்துவிடும்.

ஆதலால் அண்மையில் எமது செவிகளுக்கு எட்டிய செய்தியே முதலும் முடிவுமானதுமாக அமையுமானால் ஆரோக்கியம். இதனை மாணவர்களும் பெற்றோர்களும் விழிப்புணர்வாக எடுத்துச் செயற்படவேண்டும் என்பதே சமூகத்தின் பேரவா.

பெற்றோர்களால் சரியான முறையில் வழிகாட்டுதலுக்குள்ளாகாத பிள்ளைகளால் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாக முடியாது. அவர்கள் மொழிப்பற்று , ஊர்ப்பற்று அற்றவர்களாகவே மிளிர்வார்கள். இதனை உணர்ந்து பெற்றோர்களோ அல்லது பாதுகாவலர்களோ தமக்குரிய கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டும். அப்போதுதான் எமக்காகவும் எமது சுபீட்சத்திற்காகவும் தமது இளமைக்காலத்தையும் இன்னுயிரையும் தியாகம் செய்த சகோதர சகோதரிகளின் அர்ப்பணிப்புக்கு தாங்கள் செய்யும் சிறு மரியாதையாகவேனும் அமையும்.

இது சமுதாயச் சீர்திருத்தத்திற்கான அதிகப்பிரசங்கித்தனம் அல்ல. எதிர் காலத்தில் எம் உறவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சுயநலமே!

தெய்வீகன்

# பறவைகளின் விசித்திரங்கள்

பனிக்காலத்தில் உறங்கும் பூர்வில் (Poorwill)மேற்கு மற்றும் மத்திய வட அமெரிக்கக் காடுகளில் காணப்படும் பறவை யாகும். இது விசித்திரமாக பனிக்காலத்தில் தூங்கிவழியும் பறவை. இரவில்பறக்கும்பூச்சிகளை உண்டுவாழும். இதன்பழக்க வழக்கங்கள் இதுவரை அறியப்படவில்லை. இந்த பூர்வில் பறவை 'இப்' என்னும் சத்தத்துடன் பாடலைப் பாடிக கொண்டே பறக்கும். இதை அமெரிக்கப் பழங்குடியினர் 'தூங்கும் பறவை' என்றே அழைத்தனர்.



முதன்முதலில் பூர்வில் பறவையை தூங்கிய நிலையில் கண்ட விஞ்ஞானிகள் இறந்துவிட்டது என்றே நினைத்தனர். காரணம், இதன் கண்கள் மூடிய நிலையில் உடம்பு சில்லிட்டிருந்தது. அந்தப் பறவையைத் தொட்டபோது கண்விழித்து பறந்துவிட்டது. இந்தப் பறவையை வரை இப்பறவை உணவே சாப்பிடாமல் உயிர் வாழ உதவி செய்கிறது.

மீன்விழுங்கி பாம்புத் தாரா (Darter)டார்டர் என்ற பறவை இந்தியத் துணைக் கண்டம் முழுக்க வசிக்கிறது. இதன் கழுத்து பாம்பைப் போன்று இருக்கும். கூரிய அலகை உடையது. கறுப்பு நிறத்தில் உள்ள இதன் உடல் முழுவதும் சில்வர்க்ரே வண்ணத்தில் கோடுகள் காணப்படும். இதன் தலையும், கழுத்தும் வெல்வெட் பிறவுண் நிறத்தில் இருக்கும். தாடையும் தொண்டையும் வெள்ளை நிறத்தில் இருக்கும். நீந்தும்பொழுது இதன் உடல் முழுவதும் தண்ணீரில் இருக்கும்.



கழுத்தும் மூக்கும் மட்டுமே பாம்பு போல் வெளியில் தெரியும். இதன் விருப்ப உணவு மீன். இப்பறவை குஞ்சு பொரிக்கும் காலங்கள் ஜூன் முதல் ஒகஸ்ட் வரை. தண்ணருக்கு அருகில் உள்ள மரங்களில் கூடுகள் அமைத்து குஞ்சுகள் பொரிக்கும். ஒரே சமயத்தில் பல முட்டைகளை இடும். முட்டைகள் நீலப்பச்சை நிறத்தில் இருக் கும்.பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒதுக்குப்புறமான 'கலயான்' என்னும் தீவில் பறக்க முடியாதபறவை ஒன்று இருப்பதை இனத்தைச் சார்ந்தது அல்ல. எனவே கலயான் தீவின் பெயரையே இதற்குச் சூட்டிவிட்டார்கள்.

### தேசியப் பறவைகளை அறிவோம்




- இலங்கை-காட்டுக்கோழி
- இந்தியா - மயில்
- இங்கிலாந்து - ராபின் (வானம்பாடி போன்றது)
- கொலம்பியா - ஆண்டியன் காண்டர் (தென்னாப்பிரிக்காவில் வாழும் ஒரு வகைப் பருந்து)
- பெல்ஜியம் - கெஸ்ட்ரல்
- அமெரிக்கா - கழுகு
- ஆஸ்திரியா - டேர்ன் ஸ்வாலோ (இது தலையில்லாத குருவி)
- லக்ஸம்பர்க் - கோல்டு க்ரெஸ்ட்
- குவாதமாலா - க்வட்ஸெல்
- கனடா - வாத்து
- மியன்மார் - பர்மிய மயில்
- ஜேர்மனி - தங்கக் கழுகு
- ஜப்பான் - பச்சைக் கொண்டை காட்டுக் கோழி
- வெனிசுலா - ட்ரௌப்பியல்
- டென்மார்க் - ஊமை அன்னம்
- வட அயர்லாந்து - ஆப்ஸ்ர் கேட்டர் (முத்துச்சிப்பிதின்னும் பறவை

### விநோத பறவை இனங்கள்

- நெருப்புக் கோழிக்கு மட்டுமே இமை உண்டு.
- டெர்ன் பறவை எட்டு மாதங்கள் தொடர்ந்து பறக்கும் தன்மை கொண்டது.
- மேற்கத்தேயஅரசர் என்ற பறவை தேனீக்களை மட்டுமே உணவாக உட்கொள்ளும்.
- ஹரியால் பறவை இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் மாநிலப் பறவையாகும். இந்தப் பறவை தன் கால்களை தரையில்பதிக்காது. அதன் இருப்பிடம் மரங்களே.
- பூங்கொத்திப் பறவையின் எடை ஐந்து கிராம் மட்டுமே.
- கூக்ரா புர்ரா என்னும் பறவை மனிதர்களைப் போல் சிரிக்கும்.
- நெருப்புக் கோழியின் கண்கள் அதன் மூளையை விட மிகப்பெரியவை.
- மார்ஷ் வார்ப்பனர் எனும் பறவை பிற பறவைகளைப் போல குரலை மாற்றி மாற்றி ஒலியெழுப்பும் தன்மை கொண்டது.
- உலகில் 322 வகையான கிளிகள் உள்ளன.
- ஆந்தையால் கழுத்தை 360 டிகிரி கோணத்தில் சுழற்ற இயலும்.
- நாரைக்கு ஒலி எழுப்பத் தெரியாது.
- பறவைகளில் அதிக நாட்கள் உயிர் வாழ்வது ஆந்தை.
- பறவைகளுக்கு வியர்வை நாளங்களே கிடையாது.
- கிவி பறவைகள் முகர்ந்து பார்த்து வேட்டையாடும் தன்மை கொண்டவை.
- கண்களுக்குப் பின்புறம் உள்ள சிறு துவாரம் மூலமாகக் கேட்கும் சக்தியைப் பெற்ற பறவை காகம்.
- புறாவின் இறகின் எடை அதன் எலும்பின் எடையை விட அதிகம்.
- கிரேட் ஆக் பறவை தண்ணீருக்குள் நீந்திச் செல்லும்.
- கூக்குரல் நாரை சப்தமிட்டால் 3 கி.மீ. தூரம் வரை கேட்கும்.
- பாபின் பறவை வானத்திலும் நீருக்கடியிலும் பறக்கும்.
- மாலிக் என்னும் கோழி வாரம் ஒரு முட்டை வீதம் இடும்.
- சேவல் மட்டுமே அதிகாலையில் கூவும் பறவை.
- சாண்டி இனக்கோழிகள் பச்சை நிறத்தில் முட்டை இடுகின்றன.
- ஸ்லாட்பில் எனும் பறவையின் அலகு அதன் உடலை விட நீளமானது.












"தலைவர் டபுள் மீனிங்ல பேசுறாரா?
ஆமா...நாங்க இருக்கும் வரையாரையும் இலஞ்சம் வாங்க விடமாட்டோம்என்றுசொல்றாரே"

+++++++





"அந்த பொலிஸ் கண் முன்னால அநியாயம் நடந்தா அவர் டியூட்டில இல்லையன்னா கூட பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டாரு"
"நிஜமாவா?"
"ஆமாம்"போய் இலஞ்சம் கேட்பாரு

+++++++

"இந்த வழக்கு உனக்கு என்ன பாடம் *கற்றுத்தந்தது?*

பிறந்தா, **சல்மான் கானா** பிறக்கணும் எசமான்!"



+++++++



"எனக்கு பொய் சொல்கிறவர்களைக் கண்டாலே பிடிக்காது. **உங்களுக்கு...?**"
"எனக்கு உங்களை **ரொம்பப் பிடிக்கும்!**"

+++++++

" மன்னர் பதுங்கு குழியில் இருந்ததை எதிரிநாட்டு மன்னன் எப்படிக் கண்டுபிடித்தான்?"
" **வெளிச்சம் பத்தலைனு** டோர்ச்லைட் அடிச்சு பதுங்கு குழியில் செல்ஃபி எடுத்தாரம்!"



+++++++



" எதுக்கு வரதட்சணை பணத்தை கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாடியே கேட்குறீங்க?"
அப்போ தான் மாப்பிள்ளையை பிணையில எடுக்க முடியும்!"

+++++++



"20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய மனிதர்கள் பற்றிச் சொல்ல முடியுமா?
**ஓ முடியுமே!**
அவர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள்!

+++++++

டாக்டர் இந்த ஆஸ்பத்திரியை சுத்திப் பார்க்கலாமா?
ஏன் அவசரப்படுறீங்க , ஆபரேஷனுக்கு பிறகு இங்கே தானே சுத்திக்கிட்டு இருக்கப் போறீங்க!

+++++++



# வாழு! வாழ! விடு



## சிறுகதை

''மலர்விழி விசயம் கேள்விப்பட்டாயா?'' எனக் கேட்டவாறு தகரப்படலையைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் தமிழரசி.

சித்திரை-வைகாசி மாதத்து இளவேனிற்காலப்பகுதியில்,முழு இலைகளையும் உதிர்த்துக் கொட்டிவிட்டு நின்ற வேப்பமர அடியில் சருகுகளை ஒன்று குவித்துக் கொண்டிருந்த தமிழரசி நிமிர்ந்து பார்த்தாள்.

வாருங்கள் அக்கா, உடலைச்சுட்டெரிக்கிற இந்த வெயிலுக் காலை என்னக்கா அவசரமாய் இந்தப்பக்கம்.

அப்ப,உனக்கு இன்னமும் விசயம் தெரியாது போலை.அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்தபடி கதைத்தாள்.மலரவன் நின்றானென்றால் இவையளைப் போல ஊர் விசயங்களைக் காவிக்கொண்டு திரிபவர்களை ஏசிக்கலைத்து விடுவான். கடந்த தடவை க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கிறான்.

அக்கா,நீங்கள் பயப்பிட வேண்டாம்.அவன் இப்ப கொஞ்சம் முன்னமாய்த்தான் உழைப்போர் ஒன்றியம் வரை போய் வாறன் அம்மா எனக் கூறிக்கொண்டு போனவன். நீங்கள் விசயத்தைக் கூறுங்கோ.

இவள் வெண்ணிலா எல்லா பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போய் செழியன் மாஸ்ரர் வீட்டோடை சேர்ந்து இருக்கிறாளாம்.

ஏற்கனவே தனக்குத் தெரிந்திருந்த விசயம்தான் என்றாலும் காட்டிக்கொள்ளாமல் அப்பிடியா அக்கா.நல்லவிசயம். இப்பவென்றாலும் துணிந்து முடிவு எடுத்தாளே அதுவரை சந்தோசம்தான்.

என்ன மலர்?இப்படிக் கூறுகிறாய்?அவற்றை வயசென்ன? இவளுக்கு வயசு என்ன? தகப்பன், பிள்ளை போல உறவு கொள்ள வேண்டியவர்கள்....புருஷன்,பெண் சாதியாய்....எப்படியடி?என்னால் ஒத்துக்கொள்ள முடியாது.

அக்கா,அவள் சரியான முடிவுதான் எடுத்திருக்கிறாள். மலரவனும் இரண்டொரு தடவை கதைக்கேக்கை சொன்னவன்.இப்படி அவமரியாதைப்படுவதிலும் பார்க்க மாஸ்ரர் வீட்டை போய் இருப்பதுதான் மலருக்குப் பாதுகாப்பென்று. தன்ர படிப்பாலும் முயற்சியாலும் தனித்திருந்து பிள்ளைகளை வளர்த்து வந்தவள். கண்ட கண்ட காவாலிப் பயலுகள் அவளை நிம்மதியாய் இருக்க விட்டினமே. கையைப் பிடித்திழுக்கிறதும் வீட்டுக்குக் கல் எறிவதும் தனிய இருந்து கஷ்டப்படுவதிலும் பார்க்க, மாஸ்ரருக்கு உதவி செய்து கொண்டு அவரோடை போய் சேர்ந்ததுதான் சரி அக்கா.

என்ன பிள்ளை கதைக்கிறாய்? ஊருலகம் இவளைப் பழிச்சுக் கதைக்குதே.ஏன் இவள் இப்படி நடக்கிறாள்.

எப்பிடி அக்கா நடக்கிறாள். தன்ர படிப்பை வைச்சு நல்ல அரச வைத்தியராய் சேர்ந்து சுகமாய் வாழ விரும்பாமல் தனது ஊர், தனது மக்கள், அவர்களது சேவை என வாழ்வது பிழையா அக்கா? உவன் துலைவான் செழியன் நடுச்சந்தியிலை வைத்து இவளின்ர கையைப் பிடித்திழுத்தவன் தானே. அதை யார் தட்டிக் கேட்டினம்? 6-7 வருடங்களுக்கு முன்னரென்றால் இப்படி நடக்குமோ? தன்ர வீரம்,வலிமை, கௌரவம் எல்லாம் இழந்து வந்திருந்து இந்தக் குந்தில இருந்து அழுதவள் மானம் போனாப்போல சீவிக்கக் கூடாதென்று கதறினவள். தான் இருந்த இடத்தில் 50-60 ஆயிரம் பிள்ளைகள் எப்படிச் சுதந்திரமாய் சந்தோசமாயும் வாழ்ந்ததுகள் என்று ஏங்கிப் போனாள்.பிள்ளைகள் இருவரது திறமை, ஆற்றல் கீர்த்திகளை எடுத்துக்கூறி ஒருவாறு ஆற்றுப்படுத்தி அனுப்பினான்.

அக்கா,சும்மா ஒரு கதைக்காகத்தான் கேட்கிறன்.மாஸ்ரருக்கு ஒரு 60 வயசிருக்குமோ? இந்த வயசுக்குப் பிறகும் அவர் தாம்பத்தியம் தேடுவாரா? ஆன்மீகம் தேடுவாரா?

எலும்பில்லை என்பதற்காக-எல்லாப்பக்கமும் நாக்கு வளையும் தானே என நினைத்துக் கண்டபடி கதைக்கிறதை விட்டுடுங்கோ அக்கா. ஒருவகையில் அவள் நல்ல முடிவு எடுக்க நீங்களும் உங்களைப் போல ஆட்களும்தான் உதவியிருக்கிறீங்கள்.மனோதிடம் உள்ளவள் என்றபடியால் துணிச்சலான முடிவு எடுத்திருக்கிறாள்.

சரிபிள்ளை,என்னோட கோவிக்காதை.நீ அவளுடன் நல்ல நட்பாய் இருக்கிறாய் என எண்ணித்தான் உன்னோட கதைச்சனான். பங்கை மலரவன் வாறன் போலை. நான் போயிற்றுப் பிறகொருநாள் வாறன்.ஒருவகையில் பார்த்தால் நீ கூறுவதும் சரிபோலத்தான் கிடக்கு.

வெண்ணிலா க.பொ.த. உயர்தர பரீட்சையின் பெறுபேறுக்ளுக்காகக் காத்திருந்த காலத்தில் நாட்டில் நடந்த கொடூரங்களைக் கண்டு இயக்கத்தில் சேர்ந்தவள் 3-4 வருட காலம் போராளியாகிப் பங்காற்றிவிட்டு விலகி வந்து கல்வியைத் தொடர்ந்து தனது திறமையாலும் விடா முயற்சியாலும் டாக்டராகி, அக் காலச் சூழலில் காயப்பட்டிருந்த மக்களுக்கும் போராளிகளுக்கும் சேவை செய்து கொண்டிருந்தாள். கல்வியை வைத்துப் பணம் பண்ணிப் படாடோபமாக வாழ விரும்பவில்லை.அவ்வேளையில் ஷெல்பட்டுக் கால் உடைந்த நிலையில் சிகிச்சைக்காக வந்த வருணன் என்ற படையணித் தலைவனை விரும்பி மணம்புரிந்து வாழ்ந்தவள்.தமது விருப்பத்துக்கு மாறாக, அரச சேவையில் இணைந்து டாக்டராகி வசதி வாய்ப்புக்களுடன் வாழாதது மட்டுமல்ல,கால் ஊனமடைந்த போராளித் தலைவனை மணந்து கொண்டதாலும் பெற்றோரும் உறவினர்களும் உறவு வைத்திருக்கவில்லை. இரண்டு பிள்ளைகள் பிறந்த வேளையிலும் மலர்விழி தான் தாய்போல இருந்து பராமரித்து வந்தாள்.இறுதி யுத்தம் 19.05.2009 முடிவுக்கு வர முகாம் வாழ்க்கை, விசாரணைகள், தடுத்து வைப்புகள் என எல்லாம் அனுபவித்து 6 வருடங்களுக்கும் மேலாகி விட்டன.சரணடைந்த வருணனைப் பற்றித் தகவல்கள் எதுவும் இல்லை. போராட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள்,மகஜர்கள் எல்லாம் பயனற்றுப் போய்விட்ட நிலை. பிள்ளைகளும் வளர்ந்து விட்டனர். பாடசாலைக் கல்வியுடன் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள். பாராட்டுகள், பரிசுகள், விருதுகள் பெறுகின்ற ஒவ்வொரு நிகழ்விலும் வருணனின் நினைவு வந்து வருத்தும்.

சேவையாகத்தான் டாக்டர் தொழில் பார்த்தாலும்,நோயாளிகள் தருகின்ற அற்பசொற்ப பணத்துடன் கோழி,ஆடு வளர்த்தும் வந்தாள். இயக்கக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்தவளாதலினால்,எல்லாம் மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு வாழ்ந்தாள்.அப்பா இல்லையே என்ற ஏக்கம் ஒன்றைத் தவிரப் பிள்ளைகளுக்கு வேறெந்தக்கவலையும் இல்லை.

வருணனும் தானும் இராணுவச் சுற்றிவளைப்புள் அகப்பட்டிருந்த வேளை வருணன் சயனைட் கடித்து இறந்தான் என்றும் இறக்கும் தருணத்தில் வெண்ணிலா பற்றிய விபரங்களும் முகவரியும் கொடுத்து அவளுக்குத்துணையாயிருந்து காக்க வேண்டுமெனத் தன்னிடம் சத்தியம் வாங்கினான் என்றும் கூறியவாறு அமைதியான வாழ்வின் இடிபோல முகிலன் எனத்தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஒருவன் வந்தான். வருணன் இராணுவத்திடம் சரணடைந்தமையை நேரில் கண்டவர்கள் கூறக்கேட்டும், சரணடைந்தவர்களை ஒளிபரப்பியவேளை கூட்டத்துள் வருணனைக் கண்டிருந்தாலும் முகிலன் பொய் கூறுகிறான் என்பதை நன்கு அறிந்திருந்தும் வரவேற்று உபசரித்து அனுப்பினாள்.

முகிலன் அடிக்கடி வருவதும், பிள்ளைகளுக்குப் பரிசில்கள் தருவதும் பிடிக்காமல் போகவே, நீங்கள் ஏதாவது வேலை தேடிச் செய்யலாம் தானே என்று வெண்ணிலா கூறினாள்.வேலைவெட்டி இல்லாமல் நான் திரியவில்லை.வருணன் சாகும் தறுவாயில்உங்களுக்குஉதவிக் கொண்டிருக்கும்படி கூறியதால் தான் அடிக்கடி வரவேண்டியிருப்பதாகவும் கூறினான்.இவனது கபட நோக்கறிந்தவெண்ணிலாசெழியன்ஆசிரியருடனும் மலர்விழி அக்காவுடனும் கலந்துரையாடி,மாஸ்ரர் பிள்ளைகளுக்கு மேலதிக வகுப்புகள் எடுப்பவராக அடிக்கடி வெண்ணிலா வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்.மாஸ்ரர் வீட்டுக்கு வருவதை விரும்பாத முகிலன்,இங்கைபார் வெண்ணிலா இந்த வாத்தி என்ன அடிக்கடி இங்கை வந்து போறார் என்றான்.

பிள்ளைகளுக்கு மேலதிக வகுப்புகள் எடுக்கிறார்.அதுதான் வாறார்.

அவர் இங்கு வருவது எனக்குப் பிடிக்கவில்லை.

எங்களுக்குப் பிடிக்கின்றதே. பிள்ளைகளும் இப்ப கவனமாகப் படிக்கிறார்கள்.

கிழவனுக்குக்என்னஇங்கவேலை? என்ன பேசுகிறீர்கள்,என்று தெரிந்துதான் கதைக்கிறியளா?அவர் மட்டுமா வருகிறார்? மருந்தெடுக்க, வைத்தியம் பார்க்க,கோழிவாங்க ஏன் நீங்களும்தான் ஒரு காரணமும் இல்லாமல் வருகிறீர்களே. அவை எல்லாம் பெண் பிடிக்கவா வந்து போகினம்.

உங்களுக்குக் கள்ளப் புத்தி அதுதான் எல்லாரையும் உங்களைப்போல நினைக்கிறீங்கள். என்ன சொன்னனீங்கள். வருணனுக்கு நீங்கள் சத்தியம் செய்து கொடுத்ததா? வருணன் சயனைட் கடித்து இறந்து விட்டாரா? எல்லாம் பொய் என்பதும் உங்கள் நோக்கம் என்ன என்பதும் நீங்கள் வந்ததன்று கூறிய வார்த்தைகள், பார்த்த பார்வைகளிலிருந்தும் நான் நன்கு புரிந்து கொண்டன்.

விசயத்தைப் பெரிதாக்க விரும்பாமல் தான் நான் பேசாமல் இருந்தனான்.2 வாரங்களுக்கு முன் வருணன் கடிதம் அனுப்பி இருக்கிறார்.தனது விசாரணைகள் யாவும் முடிந்து விட்டதாம் ஒருமாதமோ இரண்டு மாதகாலப் பகுதிக்குள் தான் வீட்டை வருவன் என்றும் எழுதியிருந்தார்.அப்பவும் வழமை போல நான் அமைதியாக இருந்தன்.அவர் வந்ததும் எல்லாம் சரியாகிவிடும். அமைதியாக நண்பர்களாக நாம் இருந்திடலாம் என்று எண்ணினான்.எல்லாத்தையும் போட்டுடைத்து விட்டீர்களே? இவ்வளவு சதைக்குவியல்களையும் ரணங்களையும் முண்டங்களையும் கண்ட பின்னும் எலும்பு தோல் சதைக்காக அலைகிறது உங்களைப் போல ஆட்களை விட்ட பாடில்லைப்போல என்று இயல்பாகவே வெண்ணிலா கூறியபோதும், கோரப்பற்களுடன் சூலத்தைக் கையிலேந்திய காளியைக் கண்டது போல நிலைகுலைந்து போனான்.

அது...அது...என்று தயங்கியவனைப்பார்த்து இப்பவும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை.பழையபடி நல்ல நண்பர்களாக இருப்போம். வருணனுக்கு நான் எதுவும் கூறமாட்டன்.நீங்கள் மீண்டும் நண்பர்களாயிருங்கள். அடிக்கடி வந்து போங்கள்.என்னைக் கட்டுப்படுத்த நினைக்க வேண்டாம். உங்களுக்குள்உள்ளமிருகம்எலும்பு, தோல் தசைக்கு அலையுது.அதைக் கட்டுப்படுத்துங்கள் என்று இயல்பாகக் கூறி அனுப்பினாள்.

தாீன் சொன்னவை அனைத்தும் பொய் என்பதும் வருணன் வரவுள்ளான் என்பதை அறிந்ததும் முகிலன் பயந்த தன்மையையும் எடுத்துக்கூறி,மலர்விழி அக்காவுடன் கலந்து தொடர்ந்தும் தனியே வாழமுடியாது என்று முடிவெடுத்திருந்தாள்.மீண்டும் சில நாட்கள், வீட்டின் மேல் கல்விழுவதும் சாடைமாடையான பேச்சுக்களும் பேசிய போதும் வெண்ணிலா இயக்கத்தில் பயிற்சி எடுத்தவள் என்ற பயம் இவர்களிடையே இருந்ததால்,கவனமாக இருந்தார்கள்.

முகிலனையும் அவனைப் போல் ஆட்களைச் சமாளித்து சாம,பேத தான தண்டங்களைப் பிரயோகித்து அனுப்பும் ஆற்றல் இருந்தும்கூட அவள் அமைதியை விரும்பி பிள்ளைகளின் கல்வியை விரும்பி, செழியன் மாஸ்ரர் வீட்டில் இருந்து வாழ்ந்து வருகிறாள்.


மயூரதன் யாழ்ப்பாணம்.

# கடையின் சாவி கஸ்டமரிடம்



- 24 மணி நேர அங்காடி
- பணியாளர்கள் இல்லை
- திருடினால் மாட்டிக் கொள்வீர்கள்





## எப்படி சாத்தியம்?

“ஹலோ சார்... கடையை எப்ப திறப்பீங்க?” என நடிகர் வடிவேலு பாணியில் போன் செய்து கேட்க வேண்டியதில்லை இந்தக் கடையில். இந்தக் கடை பூட்டியேதான் இருக்கும். ஆனால் யார் வேண்டுமானாலும் திறந்து தங்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளலாம். சாவி? அது எல்லோரது செல்போனிலும் இருக்கும்!

சுவீடன் நாட்டில் வீகன் எனும் கிராமத்தில் வசிப்பவர் ராபர்ட் இலிஜாசன். தன் குழந்தையுடன் ஒருநாள் அவர் தன்னந்தனியே வசிக்க வேண்டி வந்தது. இரவு நேரம்... குழந்தை பசியில் அழுகிறது... கைவசமிருந்த கடைசி பக்கெற் உணவும் கை தவறி விழுந்து வீணாகி விட்டது. கடைகள் எல்லாம் மூடியிருக்கின்றன. இப்போது ராபர்ட் 20 கி.மீ. பயணித்து நகரத்துக்குப் போனால்தான் 24 மணி நேர சுப்பர் மார்க்கெட்டில் ஏதாவது வாங்க முடியும். அந்தக் கணத்தில்தான் ராபர்ட் மனத்தில் இந்த ஐடியா உதித்தது... ஆளில்லாத பல்பொருள் அங்காடி!

“இது போன்ற சின்ன கிராமங்களிலும் 24 மணி நேரம் இயங்கும் கடைகள் தேவை. ஆனால், அதற்கான பணியாளர்களுக்கு சம்பளம் கொடுத்து கட்டுப்படி ஆகாது என்பதால் யாரும் கடை நடத்துவதில்லை. இந்த ஆளில்லா கடை அந்தக் குறையைப் போக்கும்!” என்கிற ராபர்ட், இந்தக் கடைக்கு நாராஃபிர்(Narffar) எனப் பெயர் வைத்திருக்கிறார்.

இந்தக் கடைக்குச் செல்ல வேணடுமானால், நமது ஸ்மார்ட் போனில் ‘நாராஃபிர்’ என்ற அப்பை டவுன்லோடு செய்து நிறுவிக் கொள்ள வேண்டும். நமது வங்கி விபரம் உட்பட சில தகவல்களைப் பெற்றுக் கொண்டு அந்த அப்பிளிகேசன் நம்மை வாடிக்கையாளராய் பதிவு செய்து கொள்ளும். அதன் பின் அந்தக் கடைக்கு நாம் எந்த நேரத்திலும் போகலாம்.


கடை எப்போதும் பூட்டியேதான் இருக்கும். வாசல் அருகில் போய் நமது அப் மூலம் ஒரு கட்டளை பிறப்பித்தால் அந்தக் கதவு தானாகத் திறக்கும். உள்ளே போய் வேண்டிய பொருட்களை நாமே எடுத்துக் கொள்ளலாம். அந்தப் பொருட்களின் பார் கோட்களை நமது போன் மூலமாக ஸ்கான் செய்தால் நமது கணக்கில் அந்த பில் போடப்பட்டுவிடும். மாதம் ஒரு முறை போன் பில் போல இந்தத் தொகை நம் வங்கிக்கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

சரி, யாராவது விசமிகள் பொருட்களை ஸ்கான் செய்யாமல் பையில் போட்டுக்கொண்டு விட்டால்? அடிப்படையில் ஐ.டி வல்லுநரான ராபர்ட்டிடம் இதற்கு பளிச் பதில் இருக்கிறது. “இந்தக் கடையில் மொத்தமுள்ள 480 சதுர அடி பரப்பும் கமராக்களால் கண்காணிக்கப்படுகிறது. என் வீடு கடைக்கு அருகில்தான் இருக்கிறது. இதன் கதவுகளை யாரும் உடைக்க முயன்றாலோ, கதவுகளைத் தாமாக மூடவிடாமல் நீண்ட நேரம் திறந்து வைத்திருந்தாலோ, என் போனுக்கு அலேர்ட் வந்துவிடும். அடுத்த நிமிடம் நான் ஸ்பொட்டில் இருப்பேன்.

மேலும் இந்தக் கண்டயில் புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் விற்கப்படுவதில்லை. மது வகைகளும் இல்லை. இப்படிப்பட்ட பொருட்களை நாடுகிறவர்களுக்குத்தான் திருடும் எண்ணமும் வரும். இந்தக் கடையின் வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் 24 மணி நேரக் கடைகளுக்காக ஏங்கிக் கிடப்பவர்கள். அவசர நேரத்தில் இது கைகொடுக்கிறதே என்ற நன்றி உணர்ச்சியைத்தான் அவர்களிடம் பார்க்க முடிகிறதே தவிர, களவாடும் எண்ணம் யாரிடமும் இல்லை!” என்கிறார் ராபர்ட்.

இரண்டரை மாதங்கள் இயங்கியிருக்கும் இந்தக் கடையில் அப்படி எந்த திருட்டு முயற்சியும் நடந்ததில்லையாம். “24 மணி நேரக்கடை என்பதற்காக இங்கே இரவில்தான் வர வேண்டும் என்று அர்த்தமல்ல. பக்கத்தில் பல கடைகள் திறந்திருந்தாலும் நான் இங்கேதான் வருவேன். காரணம், இங்கே பில் போடுவதற்காக வரிசையில் நிற்க வேணடியதில்லை. நொடியில் உள்ளே நுழையலாம்... நொடியில் வெளியேறலாம். ஐ லைக் இட்!” என்கிறார் நாராஃபிர் கடையின் வாடிகையாளர்களில் ஒருவரான ரேமண்ட் அர்விட்சன்.

“இந்த ஐடியாவுக்கு நான் வைத்திருக்கும் பெயர் ‘ஜெனரல் ஸ்டோர் 2.0’. இந்த மாதிரி கடைகளை சின்னச் சின்ன கிராமங்களில் பலரும் நடத்த முன்வர வேண்டும். சுவீடன் முழுக்க இதைப் பரப்புவதுதான் என் நோக்கம்!” என்கிறார் ராபர்ட் ஆர்வம் பொங்க! நீங்க இதை உலகத்துக்கே பரப்பலாம் பாஸ்!






உருகுவே நாட்டின் மான்டி வீடியோ நகரில் அண்மையில் நடைபெற்ற கார்னிவேல் நிகழ்ச்சியில் வண்ணமயமான ஆடைகளில் அணிவகுத்து வந்த நடன கலைஞர்கள்.

## நீங்கள்

## காதலிக்கிறீர்கள் என்றால்.,

- உண்மையாக இருங்கள்
- சந்தேகம் தவிருங்கள்
- காதலை ரசித்து அனுபவிங்கள்



## காதலில் தோல்வி/பிரிவு அடைந்தவர் என்றால்.,




- அழுவதை நிறுத்துங்கள்
- தனிமையை தவிருங்கள்
- சோகப் பாடல்களை கேட்காதீர்கள் (மேலும் காயப்படுத்தும்)

## காதலும் இல்லை, கல்யாணமும் ஆகவில்லை என்றால்.,

- மிக மிக சந்தோசமாக இருங்கள்






# நிறைவேறுமா ஆஸியின் உலகக் கிண்ண கனா

ஐந்து ஒருநாள் உலகக் கோப்பையை வென்றுவிட்ட அவுஸ்திரேலிய அணியால், இன்னும் ஒரு முறை கூட இருபது-20 உலகக் கோப்பையை வெல்ல முடியவில்லை. கிரிக்கெட்டில் பெரும்பாலான சாதனைகளுக்கு சொந்தமான அவுஸ்திரேலிய அணியின் நிறைவேறாத ஆசை இருபது-20 உலகக்கோப்பையை வெல்வதுதான்.

இருபது ஓவர் உலகக் கோப்பையை வெல்லும் சூத்திரத்தை இன்னமும் அவுஸ்திரேலிய அணியால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஐ.பி.எல்லாக இருந்தாலும் சரி, பிக்பாஷ் போட்டிகளாக இருநதாலும் சரி, அவுஸ்திரேலிய வீரர்களின் ஆதிக்கம் எங்குமே நிறைந்திருக்கும். ஷேன் வோர்ன, ஸ்மித், வோர்னர், வோட்சன், பெய்லி என பலர் ஐ.பி.எல்லில் அணிக்கு தலைமை தாங்கியிருக்கின்றனர். திறமையான வீரர்கள் இருந்தாலும் அவுஸ்திரேலியாவால் உலக கோப்பையை ஏன் வெல்ல முடியவில்லை என பலருக்கும் ஆச்சர்யம் இருக்கவே செய்கிறது. இந்திய மண்ணில் பல அவுஸ்திரேலிய வீரர்கள், இருபது-20 களில் விளையாடி பழகியவ ர்கள் என்பதால் இம்முறை உலகக்கோப்பையை வென்றே தீரு வது என்ற முடிவில் வந்திருக்கிறா ரகள். சரி, அவுஸ்திரேலியாஅணியின பலம்,பலவீனம் என்ன?

**பலம்:**

வலுவான பட்டிங் வரிசையும், அதிரடியான துடுப்பாட்டக்காரர்களும், சிறந்த ஓல்ரவுண்டர்களும் அணிக்கு பலம். அவுஸ்திரேலிய அணியில் எந்த ஒரு குறிப்பிட்ட வீரரை நம்பியும் அணி இல்லை என்பதால் தெம்பாக வலம் வருகிறது. உஸ்மான் கவஜா, பின்ச், வோர்னர், வோட்சன் என நான்கு பேரில் யாரை தொடக்க வீரர்களாக களமிறக்குவது என கப்டன் ஸ்மித் குழம்பிபோய் உள்ளார். ஏனெனில் நான்கு பேரும் சிறந்த தொடக்க வீரர்கள். நடுவரிசையில் ஸ்மித், மக்ஸ்வெல் பலம் சேர்க்கின்றனர். தொடக்க ஜோடிகள் நன்றாக விளையாடி கொடுத்தால், கடைசி கட்டத்தில் இருபது பந்துகள் சந்தித்தாலே அபாரமாக சிக்ஸர்கள், பவுண்டரிகள் விளாசி ரன்களை குவிக்கும் ஆற்றல் உள்ளவர் மக்ஸ்வெல். இந்தியா டம் சொந்த மண்ணில் வொயிட் வாஷ் ஆன பாலும இரண்டு வாரத்துக்கு முன்பு நடந்த தென்னாபிரிகக தொடரை அவுஸ்திரேலியா வென்றுள்ளது. இருபது-20 இல் வலிமையான அணி என கருதப்படும் தென்னாபிரிக்காவை அசத்தலாக வென்றதால் தன்னம்பிக்கையோடு இருக்கிறது அவுஸ்திரேலிய அணி.

**பலவீனம்:**

மோசமான பவுலிங்தான் மிகப் பெரிய பலவீனம். எளிதாக 150 ரன்களுக்கு மேல் விட்டுத்தந்துவிடுகிறார்கள் அவுஸ்திரேலிய பவுலர்கள். ஜான்சன் ஓய்வு பெற்றுவிட்டதாலும், மிட்செல் ஸ்டார்க் காயத்தால் அவதிப்படுவதாலும் பவுலிங் டிப்பார்ட்மெண்ட் சோடை போயிருக்கிறது. பால்க்னர் தவிர நம்பிக்கை தரும் வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லை. ஹாசில்வுட், மிட்செல் மார்ஷ் போன்றோர அதிக ரன்களை விட்டுத் தந்து விடுகிறார்கள். இந்தய மண்ணில் சுழற்பந்து வீச்சுக்கு முக்கிய இடம் உண்டு. அவுஸ்திரேலிய அணியில் மக்ஸ்வெல்,ஸ்மித் போன்ற பகுதி நேர சுழற்பந்து வீச்சாளர்கள் தவிர, தரமான அனுபவமிக்க சுழற்பந்துவீச்சாளர்கள் இலலை என்பது பெரிய மைனஸ். சேஸிங்கில் அவுஸ்திரேலிய அணி கொஞ்சம் வீக்தான். கடந்த ஆறு ஆண்டுகளில் இரண்டு முறை மட்டுமே 160 ஓட்டஙகளை தாண்டிய இலக்கை துரத்தி வெற்றி பெற்றிருக்கிறது. கடந்த தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில் தான் சேஸிங்கில் சிறப்பாக செயறபட டிருக்கிறது அவுஸ்திரேலிய அணி.

இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து என வலுவான அணிகள் இருக்கும் பிரிவில் இருப்பதால் அவுஸ்திரேலியா, அரையிறுதிக்கு முன்னேறுவது சாதாரண விடயமல்ல. ஆனால் அரையிறுதி வரை முன்னேறிவிட்டால், அதன் பின்னர் மீண்டும் ஒரு கோப்பையை மிஸ் பண் ணி விடக் கூடாது என கவனமாக இருக்கும் அவுஸ்திரேலியா. (க)

# நடப்புச் சம்பியன் இலங்கையின் வெற்றிப் பயணம் தொடருமா?

இந்த முறை இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத் தொடரின், இலங்கை அணியின நிலை என்பது தெளிவாக ஆராயப்பட வேண்டிய கட்டாயம் ஒன்று உண்டு.

இலங்கையின் தலைமைத்துவத்திலேயே சில குழப்பங்கள் ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் மலிங்கவினை தலைவராகத் அறிவித்தாலும பின்னர் அவரே அந்த பதவியிலிருந்து விலகுவதாக அறியப்படுத்த தலைமைத்துவத்தினை அஞ்சேலோ மத்யூஸ் பொறுபபேற்றிருந்தார்.

உண்மையில் மலிங்க இல்லை என்பது இலங்கைக்கு பெரிய இழப்பாகக் காணப்படுகிறது. பந்து வீச்சு மிக மோசமாக உள்ளது என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உலக கிண்ணத்தின் இலங்கை அணிக்கான ஆரம்ப போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி மிகச் சிறப்பாக 153 ஓட்டங்களைக் கடந்திருந்தது. பெரிதாக பலமில்லாதது என அறியப்பட்ட ஆப்கானிஸ்தான் அணியினரே மிகப் பெரிய இலக்கினை இலங்கைக்கு எதிராக தீர்மானிக்கும் போது, இலங்கை அணியின் பிரிவில் பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணி, மேற்கிந்திய தீவுகள் அணி மற்றும் இங்கிலாந்து அணி என்பவற்றுடன் எவ்வாறு விளையாடப் போகிறது என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் என்று பார்க்கும் போது உண்மையில் ஒரு பலம் வாய்ந்த வீரர்கள் உள்ளனர். ஆனால் சரியான முறையில், அவர்களை தலைவர் மத்யூஸ் பயன்படுத்துகிறாரா என்பது சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகிறது.

லசித் மலிங்க அணியில் இல்லாத நிலையில் இலங்கையின் அனுபவ வீரரான நுவான் குலசேகர, ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நான்கு ஓவர்கள் வீசி 43 ஓட்டங்களை வாரி வழங்கி இருந்தார்.

சுழல் பந்து வீச்சாளர் ஹேரத் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தியிருந்தார். சில நேரங்களில் இந்த மைதானம் அந்த நேரத்தில், சுழற்பந்து வீச்சு சாதகமாக இருந்திருக்கலாம். அந்த நேரத்தில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்த டில்ஷானைக் கூட பயன்படுத்தியிருக்கலாம்.

ஆனால் தேவையில்லாமல் வழமை போலவே மிலிந்த சிறிவர்த்தனவினை பயன்படுத்தியதன் நோக்கம் புரயவில்லை. சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாத்தியமாக மைதானம் காணப்பட்டால், இன்னொரு சரியான சுழற்பந்து வீச்சாளரிற்கு ஓவரினைக் கொடுத்திருக்கலாம். அதனை விட திசர பெரேராவின் பந்து வீச்சில் என்ன புதிதான உத்தி உள்ளது என்று இன்னும் விளங்கவில்லை. 3 விக்கெட்டுக்களை எடுத்திருந்தாலும், ஓட்டங்களை வாரி வழங்கி இருந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை.

அடித்தாடக் கூடிய துடுப்பாட்ட வீரர்களிற்கு அடிக்கும் வசதியினை தானே ஏற்படுத்திக் கொடுக்கின்றார் என்பது வேதனையான விடயம். இலங்கைக்கான ஆறுதல் கொடுக்க கூடிய பந்து வீச்சாளராக விளங்குபவர் தற்பொழுது துஸ்மந்த சமீர மாத்திரமே. 140km/h வேகத்தில் பந்துகளை வீசக் கூடிய ஒரு பந்து வீச்சாளர். சமீர, ஹேரத் என்பவர்களிற்கு மாத்திரம் நான்கு ஓவர்களை முழுமையாக வீசக் கொடுத்து, மிகுதி ஓவர்களினை ஏனைய பந்துவீச்சாளர்களிற்கு சரியான முறையில் கொடுக்க வேணடும் என்பதே முக்கியமான விடயமாகும். 8 பந்து வீச்சாளர்கள் விளையாடிய போட்டியில், சரியான முறையில் பந்து வீச்சாளர்களை மத்யூஸ் பயன்படுத்தினாரா என்பது கேள்விக்குறியே !!!

துடுப்பாட்டத்திலே நீண்ட நாட்களின் பின்னர் அனுபவம் வாய்ந்த டில்ஷான் கலக்கி இருந்தார். உண்மையில், அனுபவம் வாய்ந்த வீரர்கள் ஏனைய வீரர்களுக்கு உதாரணமாக அமைய வேண்டும். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பத்திலேயே ஆட்டமிழக்கும் சந்தர்ப்பத்தில், ஏனைய வீரர்களுக்கு அந்த அழுத்தம் கடத்தப்படும் என்பதை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் எப்பொழுதும் மனதில் நிறுத்த வேண்டும். முதல் ஆறு ஓவர்களில் ஐம்பது ஓட்டங்களை ஆரம்ப இணைப்பாட்டமே பெறுமெனில், மத்திய துடுப்பாட்ட வீரர்கள் எந்தவொரு அழுத்தமும் இல்லாமல் அடித்து ஆடக் கூடிய வசதி காணப்படும்.

இலங்கை அணிக்கு இன்னொரு பலமான விடயம் லகிரு திரிமன்ன மற்றும் கப்புகெதரவினது துடுப்பாட்ட பலம்தான். பத்து பந்துகள் களத்தில் நின்றால் இவ்விருவரும் சரியான முறையில், மற்றைய எல்லா பந்துகளையும் அடித்தாடக் கூடிய வல்லமை பெற்றவர்கள். திசர பெரேராவினை போட்டியின் நிலைமையினைப் பார்த்தே களத்திற்குள் அனுப்ப வேண்டும். சரியான ஒரு வழிகாட்டி, பெரேராவுடன் இணையும் பட்சத்தில், கொஞ்சம் யோசித்து எல்லா பந்துகளுக்கும் அடித்தாட நினைக்காமல் இருந்தாலே பெரேராவின் துடுப்பாட்டம் சிறப்பாக அமையும் என்பது எதிர்பார்ப்பு.

மத்யூஸ் வழமை போலவே அவரது யோசனைப்படி விளையாடும் வல்லமை பெற்றவர். மத்திய துடுப்பாட்டத்திற்கு இன்னொரு வலிமை செஹான் ஜெயசூரிய. இவரையும் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். மொத்தத்தில் இலங்கை அணி, சமயோசிதமாக சிந்தித்து விளையாடினால், நிச்சயம் தங்களின் நூறு வீதத் திறமையை வெளிப்படுத்தும் பட்சத்திலேயே, மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியில் வாய்ப்புக்கள், உண்டு. (க)



# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்-பொன்னூஞ்சல்
பாடல்-ஆகாயப் பந்தலிலே
பாடியவர்- ரி.எம்.எஸ், பி.சுசீலா
இசை- எம்.எஸ்.விஸ்வநாதன்




ஆகாயப் பந்தலிலே
பொன்னூஞ்சல் ஆடுதம்மா
ஆகாயப் பந்தலிலே
பொன்னூஞ்சல் ஆடுதம்மா
ஊர்கோலம் போவோமா
உள்ளம் அங்கே ஓடுதம்மா
ஊர்கோலம் போவோமா
உள்ளம் அங்கே ஓடுதம்மா
ஆகாயப் பந்தலிலே
பொன்னூஞ்சல் ஆடுதம்மா
ஓ ஓ....
பூச்சூடி புதுப்பட்டு நான் சூடி
மணச்செம்பு கையேந்தி
நாம் அங்கே போவோமா
பூச்சூடி புதுப்பட்டு நான் சூடி
மணச்செம்பு கையேந்தி
நாம் அங்கே போவோமா
மீனாவின் குங்குமத்தை
மீனாவின் குங்குமத்தை
நானாள வேண்டுமம்மா
மானோடு நீராட மஞ்சள்
கொண்டு செல்வோமா
ஆகாயப் பந்தலிலே
பொன்னூஞ்சல் ஆடுதம்மா
ஊர்கோலம் போவோமா
உள்ளம் அங்கே ஓடுதம்மா
பால்வண்ணம் பழத்தட்டு
பூக்கிண்ணம்
மணப்பெண்ணின் தாய் தந்த
சீராக காண்போமா
பால்வண்ணம் பழத்தட்டு
பூக்கிண்ணம்
மணப்பெண்ணின் தாய் தந்த
சீராக காண்போமா
ஊராரின் சன்னதியில்
ஒன்றாக வேண்டுமம்மா
தாயென்றும் சேயென்றும்
தந்தையென்றும் ஆவோமா
ஆகாயப் பந்தலிலே
பொன்னூஞ்சல் ஆடுதம்மா
கண்ணென்றும் வளை கொண்ட்
கை என்றும்
இவள் கொண்ட அங்கங்கள்
நீ காணும் சின்னங்கள்
பொன்மாலை அந்தியிலே என்
மானை தேடி வரும்
அம்மா உன் பெண்ணுள்ளம்
நாணம் சொல்லி ஆடி வரும்
ஆகாயப் பந்தலிலே
பொன்னூஞ்சல் ஆடுதம்மா
ஊர்கோலம் போவோமா உள்ளம்
அங்கே ஓடுதம்மா
ஆ...ஆ
ஆ....ஆ

இப்பாடலை
SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:
சண்முக தாஸ், ஜோன்சன்ஸ் குடும்பம்- அல்லைப்பிட்டி, ரேவதி, புவனேஸ்வரி, விமலதாஸ், வீரசிங்கம். அந்தோனிப்பிள்ளை குடும்பம்.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## Spiritism -குறும்படம்-ஓர் விமர்சன நோக்கு

Science fiction thriller வகையாக வெளிவந்திருக்கும் குறும்படம் spiritism.ஏறத்தாழ ஹொரர் வகையாக உருவாக்கப்பட்டுள்ள குறும்படமாகவும் கொள்ள முடியும். ஆவிகள், ஆன்மா தொடர்பான விஞ்ஞான ரீதியான விளக்கங்களை அதிகம் கொண்டிருப்பதோடு உரையாடல் வடிவ குறும்படமாகவும் இது இருக்கின்றது. பல்கலைக் கழகத்தில் புரொபசராக இருக்கும் ஒருவரை சந்திக்க இரண்டு மாணவர்கள் வருகிறார்கள். புரொபசரர் ஆன்மாக்கள் தொடர்பான ஆராய்ச்சியில் இருக்கிறார்.

$Co_2$ வாயு மூலக்கூறுகளுக்கும் ஆன்மாவின் நடத்தைக்கும் உள்ள தொடர்பை அவர் விளக்குகிறார். நோய் வாய்ப்பட்டு இறக்கும் ஒருவர் தன் சக்திகளை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து மரணத்தை நோக்கிச்செல்கிறார். ஆனால் விபத்து ஒன்றினால் திடீர் என்று மரணிக்கும் ஒருவரின் உடலிலுள்ள சக்திகள், வாயு மூலக்கூறுகளிலுள்ள $Co_2$வில் தம் சக்தியை கடத்துகின்றன. அதிர்வுகள் மூலம் கடத்தப்படும் இவ்வாறான சக்திகள், நேரான சக்தியாகவோ அல்லது மறையான சக்தியாகவோ இருக்கலாம். அது மரணிக்கும் கணப்பொழுதில் இறப்பவரின் மனதின் தன்மையில் தங்கியிருக்கிறது. இவற்றை விளக்கும் புரோபசரிடம் இருக்கும் தடிமனான புத்தகங்களைப் பற்றிக்




கேட்கிறான அங்கு வந்த மாணவன் ஒருவன். அப் புத்தகங்களைப் பற்றிச் சொல்லும் இடம் சுவாரசியமானது. அவற்றை எழுதியவர்கள் அழுத்தத்தில் மரணித்து இருக்கிறார்கள்.பஞ்சமியில் என்பது கூடுதல் தகவல்.அதிகம் உரையாடல் வடிவில் நகரும் இக்குறும்படத்தின் கமரா சொல்லும் அழகியல் சிலாகிக்கக் கூடியது. மாணவர்களை புரொபசரின் அறையில் நடந்துகொள்ளும் முறையை மிக கவனமாக ஒளிப்படம் பிடித்திருப்பத்தோடு, கமராக் கோணங்கள் நேர்த்தியானவையாகவும் உள்ளன.

புரொபசராக நடித்துள்ளவரின் நடிப்பு யதார்த்தமாக காட்சிப் படிமங்களுடன் ஒட்டும் வண்ணம் அமைந்திருக்கின்றது. அழுத்தத்தில் இருக்கும் முகபாவமும் அதற்குள் எட்டிப் பார்க்கும் அறிவார்ந்த முகமும் அட்டகாசமாக இருக்கின்றது. மாணவர்களாக நடித்துள்ளவர்கள் தான்தோன்றித்தனமாக நடித்துள்ளது போன்ற அனுபவத்தை தருகின்றது. இறுதிக் காட்சியில் புரொபசர் இறந்துள்ள காட்சியில் மாணவர்களாக நடித்துள்ளவர்களின் நுண்மையற்ற நடிப்பினை உதாரணம் காட்ட முடியும்.

விஷுவல் எபக்ஸ்ட் அதிகம் யதார்த்தத்தை மீறி இல்லாமல் கசசிதமாக அமைந்திருககின்றது. எடிட்டிங்கும் ஒலியமைப்பும் உறுத்தாமல் இருக்கின்றன. வித்தியாசமான கதைக்கருவுடன் உருவாக்கப்பட்டுள்ள இக்குறும்படம் புரிதல் தன்மையை தனக்குரிய புத்திசாலி பார்வையாளர்களிடம் மட்டும் விரித்துள்ளது. இக்குறும்படத்தை எழுதி இயக்கியுள்ள விபிஷனின் வருகை உற்சாகமான ஒன்று.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# மனித சமுதாயத்தின் வேற்றுமைகள் களைவோம்



12ம் நூற்றாண்டு பக்தி இலக்கியங்களின் எழுச்சியுடன் பல ஆலயங்கள் புனருத்தாரணங்களையும் நூதன பிரதிஷ்டைகளையும் கண்டடைந்தன. அதன் பிரதிபலிப்பாய் பாரத தேசத்திற்கு வெளியே கடல்கடந்த தேசங்களில் இலங்கை, இந்தோனேசியா,மலாயா போன்ற இடங்களில் ஆலயவழிபாடு மேன்மை பெறத் தொடங்கின.

இலங்கை ஆழ்வார்களினதும் நாயன்மார்களினதும் பாடல்களில் இடம்பெற்ற பூமி என்பதாலும் புராணப்படிப்புக்களை கண்டிப்பாக ஆலயக் கிரியைகளில் ஒன்றாக்கிக் கொண்ட தேசம் என்பதாலும் ஸ்கந்தபுராண கலாசார பூமி என்னும் சிறப்பைப் பெற்றது.

உலகமயமாதல் முறைமைகளும் சிதைவுற்ற சமூக வாழ்வும் ஆன்மபலத்தை காலப் போக்கில் மழுங்க வைத்துள்ளன. கலியுக தர்மம் ஹரிநாம கீர்த்தனம். அத்தர்மத்தை நிலை நாட்டி இறைவனது கருணையால் துன்பங்கள் விலகி நிலையான அமைதி வளர வேண்டிய காலம் கனிந்து வருகிறது.

மனித சமுதாயத்திற்கும் மதங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளையும் தவறான எண்ணங்களையும் அகற்றி அவைகளுக்குள் ஒற்றுமையை உருவாக்க வேண்டிய காலநிலையில் நாம் இருக்கின்றோம். பாரபட்சமும் முரண்பாடுகளும் நிறைந்த கொள்கைகள் அகற்றப்பட்டால்தான் ஒற்றுமை சாத்தியமாகும்.அந்த ஒற்றுமை கடவுளின் நாம ஜெபமான நாம சங்கீர்த்தனத்தின் தன்னிகரில்லா கொடையாகும். அது மக்களை வேற்றுமைகளிலிருந்து மாற்றி ஒரு பொதுவான ஆன்மீக நிலைக்கு உயர்த்துகிறது.

சரித்திர ரீதியாகப் பார்த்தால் நாம் வாழும் காலம் பெரிய மாற்றங்களும் புரட்சிகளும் நிறைந்ததாக உள்ளது. நன்மைகள் என்றுகூற எதுவுமில்லை. ஆனால் ஒரு பழைய தீர்க்க தரிசனத்தின்படி ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகா பிரபுவின் தோற்றத்தினால் அடுத்த பத்தாயிரம் ஆண்டுகள் பொற்காலமாகத் திகழும். இறைவனின் பெயர்களை புகழும் கீர்த்தனங்களை கொண்ட ஆலயங்களை எதிர்கால உலகம் உருவாக்கும் சக்தியை கொண்டது. இவ் இறைபக்தி ஒவ்வொரு மனிதனையும் போராட்டமில்லாத வாழ்க்கை வாழ தகுதியுடையவனாக்கும்.

கோவில் என்றால் ஆன்மீக வாழ்க்கையின் கல்விக்கூடம். மக்கள் கோவிலுக்கு வந்து ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன? கடவுள் யார்? அவருக்கும் எமக்கும் என்ன தொடர்பு? என்பதை அவர்கள் கற்க வேண்டும். அதன்மூலம் அனைவருக்கும் ஒரு சந்தர்ப்பமும் குழந்தைகளுக்கும் கூட இறை உணர்வில் முன்னேறுவதற்கான ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

யாழ்.உடுவில் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம் அமைய வேண்டி கட்டப்பட்டுள்ள உப கட்டடங்களில் 2016 மார்ச் 23 அன்று ஸ்ரீஸ்ரீ கௌர நித்தியை ஆவாஹணம் செய்து நாம சங்கீர்த்தனம் இறைபக்தி, ஆன்மீக கல்வி இவற்றை ஆரம்பித்து வைப்பதற்கு நல்ல தருணம் கைகூடியுள்ளது எனும் நற்செய்தியை உங்கள் எல்லோருக்கும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்,
உடுவில், சுன்னாகம்.**

சினிமா செய்தி

# திரைவிமர்சனங்கள்

## புகழ்



தமிழ் சினிமாவில் இளைஞர்களின் அரசியல் குறித்து வந்த படங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த வகையில் இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்பதை மட்டுமன்றி ஒரு அரசியல் பிரமுகர் தவறு செய்தால் தட்டியும் கேட்க வேண்டும் என்ற கதைக்களத்தில் வெளிவந்துள்ள படம் தான் புகழ்.

ஜெய், சுரபி, RJ பாலாஜி, கருணாஸ் நடிக்க மணிமாறன் படத்தை இயக்கியுள்ளார்.

### கதைக்களம்

தவறு எங்கு நடந்தாலும் தட்டிக்கேட்க வேண்டும் என்று தன் அப்பா, மாமா வளர்ப்பில் வளர்ந்தது மட்டுமன்றி ஊருக்கு ஒரு எம்.ஜி.ஆராக ஜெய் வலம் வருகிறார். சிறு வயதிலிருந்தே தன் ஊரில் இருக்கும் ஒரு மைதானத்தில் ஓடி ஆடி சந்தோஷமாக தன் நண்பர்களுடன் ஜெய் பொழுதை கழிக்கின்றார்.

கல்வி அமைச்சர் அந்த ஊரில் உள்ள ஒரு அரசியல் பிரமுகர் உதவியுடன் அந்த மைதானத்தை கைப்பற்றி ஒரு பில்டிங் கட்ட வேண்டும் என்று முயற்சி செய்கிறார். ஆனால், ஜெய் அது நாங்கள் வாழ்ந்து, விளையாடி வரும் மைதானம் என கங்கனம் கட்டி போராடுகிறார்.

தன் விரலை வைத்து தன் கண்களையே குத்துவது போல், ஜெய்யின் நண்பருக்கு அரசியல் ஆசைகாட்டி மேலும், அவரின் பணத்தேவையை பூர்த்தி செய்து அந்த மைதானத்தை பிடிக்க பார்க்கின்றார்.

ஆனால், எத்தனை சோதனை வந்தாலும் அந்த மைதானத்தை விட்டுக்கொடுக்காமல் இருக்கும் ஜெய், இத்தனை பெரிய அரசியலை தாண்டி வெற்றி பெற்றாரா என்பதே மீதிக்கதை. படத்தை பற்றிய அலசல் ஏற்கனவே இதே சாயலில் சமீபத்தில் மெட்ராஸ், அஞ்சல ஆகிய படங்கள் வந்தாலும், 100 காதல் கதைகள் வந்தாலும் நாம் பார்க்க தான் செய்கின்றோம்.

அந்த வகையில் இதுபோல் நல்ல கருத்துக்களை கொண்ட படங்கள் ஒரே சாயலில் வந்தாலும் பார்ப்பதற்கு என்ன? என்று தான் தோன்றுகின்றது.

ஜெய் தன் திரைப்பயணத்திலேயே பெஸ்ட் கதாபாத்திரம் என்று கூறலாம், புகழாக ஊரில் எந்த அநியாயம் நடந்தாலும் போராடும் குணமுடையவராகவும், தன்னை கொலை செய்ய முயற்சித்தவன் உன் நண்பன் தான் என பலர் சொல்லியும் கேட்காமல் நட்பிற்கு மரியாதை கொடுக்கும் இடத்திலும் செம்ம ஸ்கோர் செய்கிறார்.

சுரபி படத்திற்கு எந்த விதத்தில் தேவைப்படுகிறார் என்று தெரியவில்லை. பல காட்சிகளில் ஒட்டாமல் ஏதோ காதல் காட்சிகள் தேவை என்பதற்காக வந்து செல்கின்றார்.

இதே வரிசையில் தான் RJ பாலாஜி, காமெடி எல்லாம் ஓரங்கட்டி கொஞ்சம் எமோஷ்னல் முயற்சி செய்துள்ளார். சில இடங்களில் நன்றாக இருந்தாலும் பல இடங்களில் செட் ஆகவில்லை பாஸ்.

ஒரு தவறு நடந்தால் கண்டிப்பாக இளைஞர்கள் தட்டிக்கேட்க வேண்டும், அது எத்தனை பெரிய கொம்பனாக இருந்தாலும் தைரியமாக போராட வேண்டும் என்று ஒரு கதைக்களத்தை தேர்ந்தெடுத்ததற்காகவே இயக்குநர் மணிமாறனுக்கு ஒரு சல்யூட். ஆனால், இதை கமர்ஷியலாக எடுப்பதா? அல்லது ரியலிஸ்டிக்காக எடுப்பதா? என்பதில் கொஞ்சம் தடுமாறியுள்ளார்.

வேல்ராஜின் ஒளிப்பதிவு இரவு நேர காட்சிகளையும் தெளிவாக படம்பிடித்து அசத்துகின்றது. விவேக் - மெர்வின் இசையில் பாடல்கள் பெரிதும் கவரவில்லை என்றாலும் பின்னணி இசையில் மிரட்டியுள்ளனர்.

### க்ளாப்ஸ்

நல்ல கதைக்களம், இதற்கு நன்றாக பொருந்திய ஜெய் மற்றும் அவர் நண்பர்களின் கதாபாத்திரம். இவர்கள் அனைவரையும் விட லோக்கல் சேர்மனாக நடித்திருக்கும் வில்லன். பெரியதாக அதட்டலும் இல்லாமல், மேனரிசத்தில் கலக்கியுள்ளார்.

பல படங்களில் இனி வாய்ப்பு காத்திருக்கின்றது. ஜெய்யின் அண்ணனாக கருணாஸ், இத்தனை யதார்த்தமாக ஒரு அண்ணனை பார்த்திருக்க முடியாது.

இனி கருணாஸிற்கு குணச்சித்திர கதாபாத்திரம் குவிய போகின்றது. படத்தின் வசனம் பல இடங்களில் கைதட்ட வைக்கின்றது. அரசியலை விட வேறு எந்த தொழில் பணம் அதிகம் கிடைக்க போகின்றது.

அரசியலுக்கு வாங்க, என்பது போல் பல வசனங்கள் பொலிஸை வைத்துக்கொண்டே, பொலிஸிற்கு தெரியாமல் மக்களுக்கு பணத்தை கொடுத்து விடுங்கள் என்று கூறுவது போன்ற காட்சியமைப்புக்கள் நகைச்சுவை தாண்டி நாட்டில் நடக்கும் விடயத்தை அப்பட்டமாக காட்டுகின்றது.

### பல்ப்ஸ்

முன்பே கூறியது போல் படத்தை எப்படி கொண்டு செல்வது என்று தெரியாமல் ஒரு கட்டத்திற்கு மேல் திரைக்கதை கொஞ்சம் தடுமாறுகின்றது.

படம் முழுவதும் யதார்த்தமாக சென்று கிளைமேக்ஸில் ஒரு மாஸ் ஹீரோ போல் ஜெய் நடந்து கொள்வது ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஜெய்யின் நண்பர் தன் பதவியை ராஜினாமா செய்தால், தன் சேர்மன் பதவி போய் விடும் என்று தெரிந்தும் கிளைமேக்ஸில் அவரை வில்லன் வெட்ட நினைப்பது என்ன லொஜிக்?

மொத்தத்தில் தவறுகளை தட்டிக் கேட்கும் இளைஞர்களுக்கு மட்டுமில்லை, ஜெய்யிற்கும் இந்த படம் புகழ் சேர்க்கும்.



## காதலும் கடந்துபோகும்

சூது கவ்வும் வெற்றிக்குப் பிறகு நலன் குமாரசாமி கொடுத்திருக்கும் இரண்டாவது ட்ரீட், காதலும் கடந்து போகும். சென்னையில், ஐடி துறையில் வேலை செய்துவிட்டு, நிறுவனம் இழுத்து மூடப்பட்டதால், வேறு வேலை தேடுகிறார் மடோனா செபாஸ்டியன். ஊருக்குள் பார் வைத்திருக்கும் சத்யா சுந்தரிடம் அடியாளாய் வேலை செய்கிறார் விஜய் சேதுபதி. வேலை போய் விட்டதால், அறையைக் காலி செய்துவிட்டு, விஜய் சேதுபதி வீட்டிற்கு எதிர் வீட்டில் குடிவருகிறார் மடோனா.

அதைத் தொடர்ந்து மோதலும், நட்புமாய்த் தொடர்கிறது அவர்கள் உறவு. இதற்கிடையில், 'ஜெயிலுக்குப் போய்ட்டு வந்தா பார் எடுத்துத் தர்றேன்னு?" என்று இடம் விஜய் சேதுபதி நச்சரித்துக் கொண்டிருக்க, எக்ஸ் பொலிஸான சமுத்திரக்கனியிடமிருந்து தொடர்ந்து தொல்லைகள் இவர்கள் கூட்டத்திற்கு.

மடோனாவின் வீட்டில், அவருக்கு வேலை போய்விட்டதை அறிந்து 'மொதல்ல கௌம்பி வா' என்று அப்பா அழைக்கிறார். வேலைக்குப் போகும் ஆவலில் இருக்கும் அவர், அதைச் சமாளிக்க ஒரு பொய் சொல்கிறார். இங்கே சமுத்திரக்கனியை சத்யா சுந்தர் கூட்டம் சமாளிக்கத் திணறுகிறது.

இரண்டும் என்னவாகிறது என்பதையும், மடோனா - விஜய் சேதுபதி உறவு காதலா-நட்பா என்பதையும் தனக்கே உரிய பாணியில்... இல்லையில்லை... கொரியன் படப்பாணியில் சொல்லியிருக்கிறார் நலன் குமாரசாமி. மைடியர் டெஸ்பரேடோ என்கிற கொரியன் படத்தை, முறையாக அனுமதி வாங்கி திரைக்கதை செய்திருக்கிறார் நலன் குமாரசாமி.

அதற்காக அதே மாதிரி இத்தனை மெதுவாகவா இருக்க வேண்டும் படம்? டாப் கியர் இல்லாவிட்டாலும், நான்காவது கியரிலாவது பயணித்திருக்கலாமே என்று தோன்றுகிறது. வசனங்களிலும், கதா பாத்திரங்களை வேலை வாங்கிய விதத்திலும் கவர்ந்து இந்த 'ஸ்லோ'த்தனத்தை மறக்கடிக்க முயல்கிறார். பல காட்சிகள் யூகிக்கக் கூடியதாகவே இருக்கிறதென்பதும் குறையாகப் படுகிறது.

விஜய் சேதுபதி என்ன பேசினாலும் அவரது மாடுலேஷனுக்கு ரசிக்கப்படுகிறது. 'நான் ஒரு பழமொழி சொல்றேன்.. பழசாத் தான் இருக்கும்.....' என்பதெல்லாம் டிரெய்லரிலேயே வந்து ஹிட்டாகிவிட்டது.

மடோனாவிடம் நேர்முகத் தேர்வாளர் கேட்கும் 'ஏன் உங்களுக்கு இது வரைக்கும் வேலை கிடைக்கல' கேள்விக்கு அவர் சொல்லும் பதில்.. நச்!

விஜய் சேதுபதி.. கதிர் என்கிற அடியாளாக வெரைட்டி காட்டியிருக்கிறார் மனுஷன். படத்துக்குப் படம் உடல்மொழியிலும் சரி, வசன மாடுலேஷனிலும் சரி பின்னி எடுக்கிறார். 'ககககபோ..' பாடலில் சரியான ஆட்டம் போடுகிறார்.

அறிமுகப்பாடலாக வைக்காமல், சரியான இடத்தில் அதைச் செருகிய இயக்குநருக்கு நன்றி! மடோனா செபாஸ்டியன்! ஏம்மா, பொண்ணே... தமிழ்ல உங்களுக்கு இது முதல் படமா என்ன? நம்பவே முடியவில்லை. திறமையான நடிப்பால் கவர்ந்திழுக்கிறார்.

சத்யா சுந்தர், இன்னொரு அடியாள் கிரண் என்று எல்லா கதாபாத்திரங்களும் தத்தமது பணியை சிறப்புறச் செய்திருந்தாலும், விஜய் சேதுபதி கூடவே வரும் பையனாக நடித்திருக்கும் மணிகண்டன், ஒரு பெரிய ரவுண்ட் வருவார் என்று தோன்றுகிறது.

பாடல்கள் ஓகே என்றாலும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது பின்னணி இசையைத்தான். இப்போதைய இசையமைப்பாளர்களில் பின்னணி இசையை செறிவாக, சரியாக அமைக்கக் கூடியவராக சந்தோஷ் நாராயணன் இருக்கிறார். இந்தப் படத்தில் அது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

படத்தின் சில காட்சிகள் இனித்தாலும், ஒன்றுமில்லை என்றுதான் இருக்கிறது. இந்தக் கூட்டணியால் இதைவிடவும் சிறப்பான படத்தை நிச்சயம் தர முடியும் என்றிருக்க, இதை அப்படியே கொடுக்க வேண்டியது ஏன் என்று தெரியவில்லை. படம் முழுவதும் பயணிக்கும் அவர்களுக்கிடையேயான உறவின் அழகை ரசிப்பதற்காகவே பார்க்கலாம்



# நந்தா விளக்கு

## யோகர் சுவாமிகளின் 52 ஆவது குருபூசைத்தினம்



திருவருளானது ஆறுமுகநாவலரை ஆகம அச்சில் வார்த்தெடுத்தது. அவர் ஆகமவிதிமுறைக்கு மாறானவற்றை ஈவிரக்கமின்றி ஒதுக்கித் தள்ளினார்கள். ஆகம நெறிமுறையை நிறுத்த அரும்பாடுபட்டார். இதனால் நமது மண் ஆகமப் பண்பாடுற்ற சிவபூமி ஆயிற்று. இச்சிவபூமியிலே ஞானதாரு ஒன்றை நடுவதற்கு ஞானநாடகனான இறைவன் திருவுளம் பற்றினன். அவன் செல்லப்பவேடம் தாங்கி நல்லூர்த்தேரடியில் இருந்து அந்த ஞான தாருவை நட்டு வளர்த்தான். அந்த ஞானதாரு சிவயோக சுவாமிகள்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்பது நமது திருமந்திரம். பக்குவமுற்றோரைப் பற்றிப் பிடித்தற்கென இறைவன் கொள்ளும் போர்வையே குருவுரு எனச் சாத்திரம் கூறும். செல்லப்பா சுவாமிகள் சிவபெருமானே ஆவார். பிறரெல்லாம் விசரெனக் கண்ட செல்லப்பரை சிவயோக சுவாமிகள் மூவரும் ஒன்றாகச் சேர்ந்த நல்ல மூர்த்தம் எனவே கண்டார்.

இருவினையான் மதிமயங்கி இடர்பட்டுக்கிடப்பேனைக்

கருணையினால் ஆண்டுகொள்ளக் கடவுள் திருவுளம் கொண்டு

அருள் மேனி தாங்கி அவனியிலே வந்தானை

திருவாளும் நல் லைநகரத் தேரடியில் கண்டேனே

- நற்சிந்தனை

ஆகிய அவர் தம் திருவாய்மொழிகள் இதற்குச் சான்று. தன்னைச் சிவ சொரூ பமாகக் காணவ ல்ல சிவயோக சுவாமிகளைச் செல்லப்பர் சிவஞானி யாக மலரச் செய்தார். ஆசான் அருளால் ஆசா னாக மலர்ந்த சிவ யோகசுவாமிகள் கொழும்புத் துறை யூரில் இருந்த ஒரு கொட்டிலைத் தமது ஆச்சிரமமாகக் கொண்டார் செல்லப்பர். தமக்கு உணர்த்திய ஞானத்தை உலகம் உய்ய வெளிப்படுத்தி வைப்பது அவர்தம் பணியாக இருந்தது. அது இறைபணியேயாம். அவ் இறை பணியை அவர் நிறைவாகச் செய்தார்.

அவரிடம் செல் லப்பர் தந்த நன்மருந்து இருந்தது மாணிக்கவாசக சுவாமி களுக்குச் சிவபெருமான் பரமாசாரி யாராக வந்து குருந்த மரத்தின் கீழ் இருந்து ஈந்த அதே மருந்தேயாம் அந்த நன்மருந்தை செந்தமிழ் நாவலனான செல்லப்பர் பழகு தமிழில் வடித்து வைத்தார். அதனை பாடுதுறையறிந்த பைந்தமிழ் நாவ லரான சிவயோகசுவாமிகள் நல்ல முதமொழியாக அருளிச் செய்தார்.

சிவயோகசுவாமிகள் தான் திருவடிக் கலப்புறுவதற்கு முன்னர் தமக்கென்ற இறைபணியை நிறைவாகச் செய்து விட்ட திருப்தியை அடைந்திருந்தார். அவரைச் சூழ்ந்து ஒரு திருக்குழாம் உருவாகியிருந்தது. அவர்தம் சிந்தையில் மலர்ந்த சிவதொண்டன் (செந்தமிழ் ஆங்கில திங்கள் ஏடு) வயது முதிர்ந்த ஆண்டகையாய் வளர்ந்திருந்தான் இலங்கைத் திருநாடு பெற்ற இரண்டு புண்ணியக் கண்களென வடக்கிலும் கிழக்கிலும் இரு சிவதொண்டன் நிலையங்கள் கால்கொண்டிருந்தன.

அவர்தம் திருவாய் மொழிகளில் பாவடிவான பலவும் உரைவடிவான சிலவும் நற்சிந்தனை என்னும் நூலாக உருப்பெற்று இருந்தது. எங்கள் ஆசான் அருள் மொழிகள் என் னும் இன்னொரு நூலுக்குரிய அமுத மொழிகள் சிவதொண்டன் ஏட்டிலும் அன்பர்களது தினக்குறிப்புப் புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டு இருந்தன. இவ்விறை பணிகளெ ல்லாம் இலங்கச் செய்வன இலங்கையான் எனத் தம்மைக் கூறிக் கொண்ட சிவயோகசுவாமிகள் சோதியை என்றும் நின்று நிலவச் செய்வன .

சிவயோக சுவாமிகளுடன் உடனுறையும் பேறுபெற்ற அணுக்கத் தொண்டரும், அவ்வப்போது அவரின் அருள் வெள்ளத்தில் தீர்த்த நீர் ஆடிக்கொண்ட பக்தர்களும், அவரிடத்து கொத்தடிமை பூண்ட குடும்பங்களும் இலங்கையிலும் உலகின் பல பாகங்களிலும் இன்றும் வாழ் கின்றனர். அவர்களது நெஞ்சகம் தோறும் சிவயோக சுவாமிகளும் வாழ்கின்றார். அவர்களெல்லாம் வாழையடி வாழையாகத் தம் சந் ததியாருள் சுவாமிகள் உறைய வேண்டும் என்னும் பெரு விருப்பினர் ஆவார். அவர்களுள் ஞானியராய் மலர்ந்தோரும் சிவயோகசுவாமிகளுடன் உடன் உறையும் பேறு பெற்றோருடன் அவரின் வளர்கின்ற கருணைக் கையின் அரவணைப்புக்குள்ளானோரும் அவரை ஓரிரு தடவைகளே தரிசித்தாலும் அத்தரிசனத்தின் சுகத்தையும் என்றும் நினைவில் வைத்துப் போற்றுவோரும் இன்றுமுள்ளனர். அவர்கள் சுவாமி நினைவுகளைத் தித்திக்கப் பேசும் திறத்தை நயப்போர் சற்குருதரிசனம் சகல பாக்கிய சுகம் என்பதன் பொருளை உணர்வர். சுவாமிகளோடு உடனுறைந்து சகல சம்பத்தும் பெற்ற மெய்யடியார்கள் சுவாமி உணர்த்திய சிவஞானம் உயிர்ப்புள்ளதென்பதற்குத் தக்க எடுத்துக் காட்டாவார்கள். அவர்களது கருத்தினிற் கருத்தாக சிவயோக சுவாமிகள் உள்ளார். அவர்களுக்குச் சிவயோகசுவாமிகள் தேகக் கோலத்தை உகுத்தமை பற்றிய குறையொன்றுமில்லை "எங்கு நீ அங்கு நான்" என்ற அவர் எங்கு போய் விட முடியும்? அவர் போக்கு வரவில்லாப் புண்ணியன் .

சிவதொண்டன் சபையினர்
434,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# அச்சுறுத்திய வெளிநாட்டவர் மன்னிப்பு கேட்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தாதியர் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் வைத்தியர்கள் நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது தாதியரை அச்சுறுத்திய வெளிநாட்டவர் மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இப்போராட்டம் நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில்கலந்து கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நிர்வாகமே உறங்காதே, ஊழியரை பாதுகாக்க தயங்காதே, குற்றச்சாட்டு முன்வைத்த வெளிநாட்டவரை அழைத்து ஊழியர் முன்பாக பகிரங்க மன்னிப்பு கேட்கவை, நோயாளர்களுக்கும் வைத்தியசாலைக்கும் ஏற்படும் இடையூறுகளுக்கு வைத்திய சாலை சமூகம் மனம் வருந்து கின்றது.


வசதி படைத்தவர்களுக்கு அரச ஊழியர்கள் அடிமையா?, நிர்வாகமே வைத்தியசாலையின் சகல ஊழியர்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய், பொய்க்குற்றச்சாட்டு முன்வைத்த நபரை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்து, ஜனநாயக நாட்டில் எங்களுக்கு உரிமை இல்லையா? என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த 15 ஆம் திகதி ஜேர்மன் நாட்டினை சேர்ந்த வெளிநாட்டவர் ஒருவர் கண் விடுதிக்கு நோயாளர் ஒருவரை பார்வையிடுவதற்காக சென்றுள்ளார். அவர் இவ்வாறு செல்லும் போது நோயாளர்களை பார்வையிடும் நேரத்துக்கு செல்லவில்லை. இதன்போது குறித்த விடுதியில் நின்ற தாதிய உத்தியோகத்தர் ஒருவர் இந்த நேரத்தில் நோயாளர்களை பார்வையிட முடியாது எனக் கூறியுள்ளார்,

எனினும் தன்னை வெளிநாட்டவர் என இனங்காட்டிய அவர் வெளியே செல்ல மறுத்ததாக தாதிய தரப்பில் கூறப்படுகின்றது.

இதன் போது இரு தரப்பிற்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் நடைபெற்று முடிந்தபின்னர், குறித்த வெளிநாட்டவர் தாதிய உத்தியோகத்தர் தன்னை அவதூறான வார்த்தை பிரயோகங்களால் திட்டியதாகவும்,நெஞ்சில் தள்ளியதாகவும் முறைப்பாடொன்றை யாழ்.பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனை அடுத்து மறுநாள் 16 ஆம் திகதி குறித்த தாதிய உத்தியோகத்தரும் மேற்படி வெளிநாட்டவர் தனது பணிக்கு இடையூறு செய்ததாக கூறி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.



சம்பவம் தொடர்பில் இரு தரப்பும் சமாதானமாக செல்லாத நிலையில், இருவரையும் நேறறு முன்தினம் யாழ்.பொலிஸார், யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தி உள்ளனர். இதன்போது இருவரையும் நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்ல நீதி மன்றம் அனுமதியளித்திருந்தது.

இந்நிலையில் பொலிஸார் குறித்த தாதியரை கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தாதியர் மீது பொய்க்குற்றச்சாட்டு முன்வைத்த வெளிநாட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தாதியர்களிடம் அவர் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் வலியுறுத்தியே மேற்படி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் வைத்தியசாலையில் பணியாற்றும் சகல பிரிவு ஊழியர்களும் பங்கெடுத்தமையால் நோயாளர்கள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கி இருந்ததனை அவதானிக்க முடிந்தது. மேலும் குறித்த வெளிநாட்டவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-4)

# facebook

## டீக்கடை

அந்த டீ கடையின் முதலாளி மீரா மொகைதீன். அவனுக்கு வயது அநேகமா 23 லிருந்து 25 வயசுக்குள்ள இருக்கும் .முகத்தில் தாடி மீசையுடன் இருந்தான்.நல்ல நிறம் .நல்ல வளரத்தி ..இன்னும் நிக்காஹ் ஆகவில்லை . ஸ்டவ் அடுப்பில் ஒன்றில் பால் பாத்திரமும் மற்றொன்றில் டீ பாத்திரமும் சூட்டில் இருந்தது.அடுப்பு தீயின் அளவை கொஞ்சம் சுருக்கி வைத்தான்.இனிமே கடைக்கு சாயங்காலம்தான் ஆட்கள் வருவார்கள் அதுவரை கொஞ்சம் ஓய்வுதான். காய்கறி கடைக்கு போய் பஜ்ஜிக்கு தேவையான வாழைக்காய்..மிளகாய் ... தேங்காய் எல்லாம் வாங்கிட்டு வந்து வெட்டிக் கொண்டிருந்தான் .

"அஸ்ஸலாமு அலைக்கும்" இஸ்மாயில் வஸ்தாத் நின்று கொண்டிருந்தார் .அவனுக்கு தூரத்து சொந்தம் . பக்கத்து ஊர்க்காரர்

"வா அலைக்கும் அஸ்ஸலாம் " முகமன் கூறி அவருக்கு டீ போட்டுக் கொடுத்தான்.

டீ சாப்பிட்டுக் கொண்டே இஸ்மாயில் கேட்டார் "போனவாரம் கடையில ஏதோ பிரச்சினை என்று கேள்விப்பட்டேன்.

இப்ராஹிம் ராவுத்தர் சொன்னாரு "

"ஆமாம் வாப்பா , வழக்கமா டீ சாப்பிட வருகிறவர்தான் ...கடையில நம்ம மத பாட்டு மட்டும் போடுவோமல்லவா..அவரு எல்லா மதத்து பாட்டையும் போடலாமென்று சொன்னார்...எல்லாரும் டீ சாப்பிட வருகிற இடம்தானே என்றார்"

"அப்புறம் என்னாச்சி"

"அந்த நேரத்தில இருந்த நம்ம பசங்க கொஞ்சம் ஆவேசம் ஆகிட்டாங்க, அப்புறம் நாசுக்கா நான் சமாளிச்சு அனுப்பினேன்"

"அதெப்படி ஒரு முஸ்லிம் கடையில் மற்ற மதப் பாடல்கள் போடுவது...டீ குடிக்க வந்தா வாரானுவ இல்லைன்னா போகட்டும்" இஸ்மாயில் இதை சொல்லி முடிப்பதற்குள் அவர் முகமெல்லாம் சிவந்து விட்டது.

டீக்கு காசு கொடுக்கபோனபோது வேண்டாமென்று மீரா மொகைதீன் சொல்லவே விடை பெற்றுக் கொண்டார்இஸ்மாயில்.அவர் போன பிறகு மீராவின் மனது கணக்குப் போட்டுப் பார்த்தது ..அந்த சம்பவத்துக்கு பிறகு கடைக்கு அதிகமாக ஆட்கள் வருவதில்லை...அவன் கடையில் நடந்த பிரச்சினை கொஞ்சம் பரசியமாகி வியாபாரத்தை ரொம்பவே பாதிச்சு விட்டது..என்னவோ வீறாப்புல இருந்தாலும் நட்டம் அவனுக்குத் தான். முன்பெல்லாம் 10 லீற்றர் பால் செலவழியும்.இப்பவெல்லாம் 5 லீற்றர் பாலுக்கே வியாபாரம் ஆக மாட்டேங்குது.

வேலைக்கார பையனை கடையை பார்க்கச் சொல்லிவிட்டு சாயங்கால தொழுகைக்கு பக்கத்திலிருக்கும் பள்ளி வாசல நோக்கிச் சென்றான் . தொழுகை முடிந்து வெளிய வந்த மீரான் பழக்கமான குரல் அழைக்கவே திரும்பிப் பார்த்தபோது அக்பர் நின்று கொண்டிருந்தான்.

அக்பர் அவனுடைய பால்ய காலம் தொட்டே நண்பன். சொந்தமெல்லாம் கிடையாது,பக்கத்து வீடு.அக்பருக்கு அப்பா பஜாரில் செருப்பு கடை வைத்திருக்கிறார்.அக்பரும் மீரானும் பள்ளி இறுதி வகுப்பு வரை ஒன்றாகவே படித்தவர்கள்.மீரானுக்கு அதற்கப்புறம் படிக்க முடியாமல் போக அக்பர் கல்லூரியில் போய் படித்து இப்ப ராணுவத்தில் இருக்கிறான். வேலையில் சேர்ந்து ஒரு வருடம் ஆகிறது.இப்போது அஸ்ஸாம் ரெஜிமெண்டில சிப்பாயாக இருக்கிறான்.

அக்பர் மிக்வும் புத்திசாலி. பேருக்கு ஏற்றாற்போல் பள்ளியில் படிக்கும் போதே அவனுக்கு ஏகப்பட்ட இந்து முஸ்லிம் நண்பர்கள் அவனுக்கு குர்-ஆனோடு கீதை தெரியும் , பைபளில் கூட எண்ணையும் அதிகாரத்தையும் சொன்னாலே வசனத்தைச் சொல்லக் கூடிய அளவுக்கு தேர்ச்சி பெற்றிருந்தான்.எல்லோரும் அவனின் விமர்சனமான பேச்சு , எல்லோரிடமும் பழகும் தன்மை மற்றும் சகிப்புத் தன்மை இதையெல்லாம் பார்த்து அவனை ஒரு கம்யூனிஸ்ட் என்றெல்லாம் கூட சொல்வார்கள்...எது என்ன ஆனாலும் தொழுகைக்கு போவதை மட்டும் அவன் தவறவே விட மாட்டான்.

"ஏ! எப்படா ஊரிலிருந்து வந்த "

"இன்னைக்கு காலையில் தான் வந்தேன் "

"வா கடைக்குப் போகலாம்"- மீரான் கூப்பிட ,இருவரும் கடைக்கு வந்து சேர்ந்தார்கள்.

"வியாபாரமெல்லாம் எப்படி நடக்குது"

முன்னாடி நல்லா போச்சுது. இப்ப கொஞ்சம் மந்தம்தான்" மீரான் குரலில் வருத்தம் மிகுந்து இருந்தது .

"ஏன் என்னாச்சி"

மீரான் நடந்த சம்பவத்தை- பாட்டு போடுவதில்வந்த பிரச்சினையை கூறினான்.எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டு வந்த அக்பர்,

"டே, நம்முடைய நோன்புக் கஞ்சியைச் சாப்பிட்டதும் முஸ்லிமாக யாரும் மாறிவிடவில்லை..... கிறிஸ்மஸ் பலகாரங்களை சாப்பிட்டதனால் ஒரு இந்து கிறிஸ்தவனாக மாறி விட்டானா ...எல்லாம் ஒரு சக மனிதர்களின் அன்பின் வெளிப்பாடு....நாகூர் ஹனிபா வின் பாடல்களை எத்தனையோ பிற மதத்தவர்கள் வீட்டில் வாங்கி வைத்து கேட்டு ரசிக்கவில்லையா.. கிறிஸ்தவர்கள் சேர்ச்சுக்கும், இந்து - ஆலயத்திற்கும் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்... அதனால பொழைக்கிற வழியைப் பாரு.. கிறிஸ்துவப் பாடலைப் போடுவதாலோ இந்து சுப்ரபாதம் போடுவதாலோ நீ முஸ்லிம் இல்லை என்று ஆகி விடாது. உங் கடைக்கு நாலுபேர் கூட வருவாங்க இல்லையா ...எல்லாவற்றுக்கும் பொறுமை வேண்டும்"

"சகிப்புத்தன்மை குறைவாக இருப்பதால்தான் வாழ்வில் முக்கியமான முடிவுகளை வேகமாக எடுக்கின்றோம்.பின்னர் கவலை மேகங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்கின்றன. அவை நம் நிம்மதியைப் பறித்து விடுகின்றன"

"திருக் குர்-ஆன் கற்றுத் தரும் அழகிய பிரார்த்தனைகளில் ஒன்று என்ன தெரியுமா மீரான்"

" எங்கள் இறைவனே ! நீ எங்கள் மீது பொறுமைப் பொழிவாயாக. எங்கள் பாதங்களை உறுதிப் படுத்துவாயாக" (2:250). இது மறையில் இரண்டாம் அதிகாரத்தில் இருநூற்றி ஐம்பதாவது துஆ(வசனம்) என்று சொன்ன அக்பர் மேலும் எட்டாம் அதிகாரத்தில் நாற்பத்தி ஆறாவது துஆவையும் பதினொன்றாம் அதிகாரத் தில் நாற்பத்தி ஒன்பதாவது துஆவையும் தெளிவாக மீரானுக்கு விளக்கிச் சொன்னான்.

"பொறுமையை மேற்கொள்ளுங்கள .திண்ணமாக ...அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்"(8:46)

இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இறைவனின் உபதேசம் என்ன தெரியுமா"எனவே பொறுமையை மேற்கொள்வீராக "(11.49).

மீரானுக்கு அக்பரின் பேச்சைக் கேட்டு மலைப்பாகவும் இருந்தது, அதே சமயம் குழப்பமாகவும் இருந்தது.

"இப்ப நான் என்ன செய்யட்டும் , அக்பர்"

"எந்த பாட்டுகள் போடாததால உன்வியாபாரம் மந்தமாச்சுதோ அதே பாட்டுகளாலையே வியாபாரத்தைப் பெருக்கு"

அதிகநேரம் நம்முடைய பாடல்களைப் போடு .இடையிடையே மற்ற மார்க்கத்தினரின் பாடல்களையும் போட்டுப் பார் ".

அக்பர் வந்திட்டுப் போய் ஒரு மாதமிருக்கும்..இப்பொழுதெல்லாம் மீராவினுடைய கடை பெஞ்சு காலியாகவே இருப்பதில்லை. எப்போதும் கடையில் நாகூர் ஹனிபாவோடு சூலமங்கலம் சகோதரிகள்,சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் கச்சேரி செய்கிறார்கள. மேலும் கிருஷ்ண பிள்ளை யின் "கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற இயேசு பாட்டும் கேட்க முடிகிறது....அவன் எடுத்த இந்த முடிவுக்கு நல்ல வரவேற்பு இருந்தது . face bookilum , whats appilum மீரா மொகைதீன் டீக்கடை பற்றியும் அங்கு நடக்கும் மூன்று மதங்களின் இசை சங்கமத்தைப் பற்றித்தான் ஒரே பேச்சு....

டிரிங்...டிரிங்...

கைபேசி ஒலித்தது...

"ஹலோ"

"மீரா மொகைதீன் டீக் கடையா"


"ஆமாங்க"

"நாங்க தலைமைச் செயலகத்திலிருந்து பேசுகிறோம் ..உங்களின் சமூக நல்லிணக்க முயற்சிக்கு முதல்வர் உங்களை சந்தித்து விருந்தும் விருதும் கொடுக்க விரும்புகிறார்கள் ..இது சம்பந்தமாக பேச நாளை உங்களை சந்திக்கிறோம்.."

"அரே அல்லா ..எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்ற மீராவின் மனக் கண்களில் அந்த நேரத்தில் அரூபமான அல்லாவும் அருமை நண்பன் அக்பரும் வந்து போனார்கள்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 667


### மதுசுதா



### மேனன்





### நிசாந்தன்



### பிரகாஸ்




### சந்துரு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 25

## நீரிழிவு நோயைத் தடுப்பது எப்படி

நீரிழிவு நோய் உலகையே அச்சுறுத்தும் வகையில் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்பது யாவரும் அறிந்ததே.

உலகளாவிய அளவில் ஏறத்தாழ 400 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 15 ஆண்டுகள் செல்ல இத்தொகை 600 மில்லியன்களைத் தாண்டும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த நிலையில் நீரிழிவு நோயை வராமல் தடுக்கலாமா? இது நடைமுறைச் சாத்தியமா? அல்லது வெறும் கனவு தானா? இதனை எவ்வாறு நடைமுறைப் படுத்தலாம்? போன்ற வினாக்கள் எம்முன்னே எழுந்து கொண்டிருக்கின்றன.

அன்று கண்ட கனவுகள் சில இன்று நிஜமாவது போலவே எமது முயற்சிகள் சரியான திசையில் தொடருமாக இருந்தால் இன்று காணும் கனவுகள் பல நாளை நிஜமாவது நிச்சயம். நீரிழிவு நோய்த் தடுப்புத் தொடர்பான கனவுகளும் அது போன்றதே.

அன்று சுகபோக வாழ்வு வாழ்ந்த வசதியடைந்த குடும்பங்களிடையே மட்டும் அதிகம் பரவியிருந்த இந்த நோய்கள் இன்று அனைவரையும் அசுர வேகத்தில் தாக்க ஆரம்பித்திருப்பதன் காரணம் என்ன? இது குடும்பங்களின் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தடுத்து நிறுத்துவது எப்படி? நீரிழிவு நோய் வரும் வரை காத்திருந்து அந்த நோயின் கட்டுப்பாட்டிலும் கவனிப்பிலும் கூடிய கவனம் செலுத்தப்போகிறோமா? அல்லது இந்த நோய் ஏற்படுவதை தடுத்து நிறுத்துவதில் அதிகூடிய அக்கறை எடுக்கப் போகின்றோமா? என்று சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது.

**இந்த நோய் வேகமாக அதிகரித்து வருவதற்கான அடிப்படைக் காரணங்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன...**

- **ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்களுக்கு நாம் அடிமையாயிருத்தல்.**
- **உடல் களைக்க வேலை செய்யாமலிருப்பதுடன் ஒழுங்கான உடற்பயிற்சி செய்வதில் ஆர்வமற்றவர்களாக இருத்தல்.**
- **உடல் நிறை சரியான அளவில் பேணப்படாமை. எமது உடல் நிறையை எவ்வளவாகப் பேண வேண்டும் என்பதும் கூடத் தெரியாமல் இருத்தல்.**

**சிறிதளவு உண்டும் உடல் நிறை தானாக கூடியிருக்கிறது என்று கூறித் திருப்தி அடைந்து கொள்ளும் நிலையில் இருத்தல்.**

- **இரசாயனப் பதார்த்தங்களும் சீனியும் சேர்க்கப்பட்டு போத்தல்களில் அடைத்து விற்பனையாகும் பானங்களை அதிகம் அருந்துதல், தாகம் எடுக்கும் பொழுது சோடா குடித்தல், தேநீருக்கு சீனி சேர்த்தல்.**
- **மக்களிடையே ஆரோக்கியம் பேணுவது சம்பந்தமான அறிவும் விழிப்புணர்வும் போதாமலிருத்தல். நோய் வாய்ப்பட்டவர்களுக்குத் தான் உணவுக்கட்டுப்பாடும் உடற்பயிற்சியும். நமக்கல்ல என்ற தப்பான அபிப்பிராயம் சிறு வயதில் எதனையும் உண்ண முடியும் என்ற தவறான சிந்தனை.**
- **நீரிழிவு நோயை ஏற்படுத்தவல்ல சில சுகாதாரப் பிரச்சினைகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதில் ஆர்வம் அற்றவர்களாக இருத்தல்.**

இந்த அடிப்படைப் பிரச்சினைகள் சரியான முறையில் அணுகப்படுமாயின் நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சி முன்னேற்றம் காணும்.

**நீரிழிவு நோய்த்தடுப்பு என்னும் பெரிய முயற்சியை மருத்துவத்துறை சார்ந்தவர்களினால் மட்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. இதற்கு அனைத்து தரப்பினரதும் தொடர்ச்சியான முயற்சியும் பங்களிப்பும் தேவைப்படுகிறது.**

பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் இதில் பெரும் பங்காற்ற வேண்டிய தேவை இருக்கிறது. ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் உணவு முறை சம்பந்தமாக பாடசாலை மட்டத்திலும் சமூக மட்டத்திலும் கருத்தரங்குகளையும் விழிப்புணர்வு களையும் ஏற்பாடுசெய்தல்.

பாடசாலைகளிலும் அலுவலக சிற்றுண்டிச்சாலைகளிலும் ஆரோக்கியமற்ற உணவுப் பாவனை மற்றும் சீனி அதிகம் சேர்க்கப்பட்ட மென்பானங்களின் பாவனையை நிறுத்த நடவடிக்கை எடுத்தல்.

தேநீருக்கு சீனி பாவிப்பதை நிறுத்தி தேவை ஏற்படின் இனிப்பூட்டிகளைப் பாவிக்கும் நடைமுறைகளை ஏற்படுத்துதல்போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.


உடற்பயிற்சி செய்வதை அனைத்துத் தரப்பினர்களுக்குமான கட்டாய நடவடிக்கையாக அறிமுகம் செய்ய வேண்டும். வயது வேறுபாடின்றி அனைத்து தரப்பினரையும் உடற்பயிற்சி செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.

பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகள் தினந்தோறும் ஓடி விளையாடுகிறார்களா? அல்லது உடற்பயிற்சி செய்கிறார்களா? என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஊடகத்துறையானது நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கும் கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

சுகாதாரத்துறை சார்ந்தவர்களும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு இன்றும் கூடிய முக்கியத்துவம் கொடுப்பதுடன் மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக வாழ முயற்சிக்க வேண்டும்.

முப்பது (30) வயது கடந்த அனைவரும் ஆறுமாதங்களிற்கு ஒரு தடவை தமது குருதி குளுக்கோசின் அளவை சோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது. காலை தேநீருக்கு முன் குருதிக் குளுக்கோசின் அளவு 110 mg% இலும் அதிகமாக இருந்தால் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது அவசியம். குருதிக் குளுக்கோசின் தளம்பல் நிலை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் நீரிழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

### நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகள்




குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தைகளிற்கு எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகமாகும். எனவே கர்ப்ப காலத்தில் தாய்மார் தமது உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களது பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவதை தடுக்க முடியும்.

பரிசுப்பொருட்களைத் தெரிவு செய்யும் போது இனிப்பு வகைகளைத் தெரிவு செய்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். விளையாட்டுப் போட்டிகள், பொது நிகழ்வுகள், சுப வைபவங்கள் போன்றவற்றில் சோடா கொடுப்பதை நிறுத்த வேண்டும். வீட்டிற்கு வருபவர்களுக்கும் சோடா மற்றும் இரசாயன மென்பானங்கள் கொடுப்பதை நிறுத்த வேண்டும்.

இலகுவில் செய்யக் கூடிய சுவையான, மலிவான, ஆரோக்கியமான புதிய உணவு வகைகளும் பானங்களும் அறிமுகப் படுத்தப்பட வேண்டும்.

இந்த முயற்சியில் சமையல் கலை வல்லுநர்கள் ஈடுபடுவது அவசியம். இதன் மூலம் ஆரோக்கியமற்ற உணவுப் பாவனைகளைப் பெருமளவு குறைக்க முடியும்.

தற்போது பலர் நீரிழிவு அல்லது மாரடைப்பு நோய்களுக்கு முற்பட்ட நிலைகளிலேயே இனாங் காணப்படுகின்றனர். இந்த நிலையை **"மெற்றாபோலிக் சின்ட்றோம்"** என்று கூறுவார்கள். இவர்கள் தொடர்ச்சியான தேக ஆரோக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடாது விட்டால் எதிர்காலத்தில் இவர்களுக்கும் இந்த நோய்கள் ஏற்பட முடியும்.

இந்த நிலையில் உள்ள சிலரிற்கு நோய்த்தடுப்பிற்காக சில மாத்திரைகளும் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

அத்துடன் அதிகரித்த நிறை உள்ளவர்கள் **"அக்கந்தோசிஸ்னை கிறிக்கன்ஸ்" (Acanthosis Nigricans)** எனப்படும் கறுப்பு நிறத்தோல் மடிப்பு உள்ளவர்கள் வேறு சில நோய்நிலைகள் உள்ளவர்கள் போன்றோருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகமாகும்.

இவர்கள் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

நாம் அனைவரும் ஆரம்பத்திலிருந்தே உடல் ஆரோக்கிய நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகளிலும் ஊக்கத்துடன் ஈடுபட்டு வருவோமாக இருந்தால் நீரிழிவு நோயை மட்டுமல்ல இன்னும் பல தொற்றா நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தைப் பெருமளவு குறைத்துக் கொள்ள முடியும்.

**Dr.S.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனாவைத்தியசாலை.**

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.